ண்மோகினி

ஆண்டு. 1-1-'50 | தை மீ அணா நான்கு.

6

N50.27.2

சிற்

கலிக

விக்ரஹ

[வை. மு. நரஸிம்மன்
அவர்களின் கட்டுரையை
உள்ளே காண்க.]

திருநகரிக் கோயிலிலுள்ள திருமங்கையாழ்வாரின் அத்புதமான விக்ரஹம். குமுதவல்லி நாச்சியாருடனும், திருவாராதனப் பெருமாளுடனும், பீடத்தில் எம்பெருமானரின் உருவத்துடனும் காட்சியளிக்கிறார்.

கும்பகோணம் ஸ்ரீ சாரங்கபாணி ஸந்நிதியிலுள்ள திருமங்கையாழ்வாரின் விக்ரஹம். 18-வது நூற்றாண்டுச் சிற்பம்.

தொடர்ச்சி ரப்பர் 3-ம் பக்கம்.

ஜகன் மோகினி

ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு.
— திருவள்ளுவர்

ஜகன்மோகினி யென்னுஞ் சஞ்சிகையைக் காக்க
ஜகன்மோ கினி! மனத்தைச் சார்ந்து.
— வீராகவ கவி

விரோதி ஸு தைமீ | Vol. 27 No. 2. | February. 1950.

OFFICE OF THE ... 1950 MADRAS

பாரதம் வாழ்க!

சத்தியத்தில் வெற்றி கண்டு
சருமம் ஓங்கும் கோயிலே
நித்தியன் அருள்பொலிய
நீடு வாழ்க பாரதம்! (சத்)

ஆசியாவின் ஜோதியாய்
அமரசக்தி நிலையமாய்
காசினியின் பேரின்பக்
கலைவனமாய் வாழ்கவே! (சத்)

துங்கமான சிந்தையும்
சுதந்தர வுணர்ச்சியும்
தங்கமான தன்மையும்
தழைத்த தெய்வக்கற்பகம் (சத்)

அமைதியாக உலகெல்லாம்
ஆத்ம ஞானம் பரவிட
நமது பாரதக் குடி
யரசு நன்று வாழ்கவே (சத்)

—சுத்தானந்த பாரதி

அமுதம்

ஜகன்மோகினி பொங்கல்மலர் அருளும் கலையும் அழகும் அறிவும் அன்பும் ததும்பும் பஞ்சாமிர்தத்திருக்கண்ணமுதம்போலிருக்கிறது. பாரதநாட்டின் உயிர்நாடியாகிய தெய்வபக்திக்கே வாழும் தமிழ்ப் பத்திரிகை மோகினி ஒன்றே; ஜகன்மோகனன் பக்தி மகரந்தம் பரவும் இந்த மலருக்கு மேன்மேலும் வளமை பொழிக!

—சுத்தானந்த பாரதி

"சொன்னவண்ணம்"

வை. மு. ஸ்ரீ.

★

கவி சொன்னவண்ணம் காலம் கண்டுணர்ந்தது. தீர்க்கதரிசிகளின் வாக்கு பொய்யா மொழியாகி, கனவு நனவாயிற்று. தமிழ்க் கவியரசர் பாரதி, வங்கக்கவியரசர் டாகூர் உலகத் தலைவர் காந்தி, ஆத்ம ஞானி ராமகிருஷ்ண பரமஹம்ஸர், வீரமுனிவர் விவேகானந்தர், ஆகியோரின் அருள் மொழிகள் சொன்ன வண்ணம் இன்று 1950 ௵ கண்டுணர்ந்ததைக் காணும் பாக்கியம்பெற்ற இத்தலைமுறையினர் மாபெரும் அதிர்ஷ்டசாலிகளே!

1950 ௵ ஜனவரி 26உ "ஒப்பிலாத சமுதாயம்; உலகத்துக்கொரு புதுமை" என்று கூறும்வண்ணம் பாரத ஜனநாயக குடியரசு ஜனனமாயிற்று. இந்திய சரித்திரத்திலேயே மிகவும் புனிதமான இந்த தினத்திலிருந்து, கவியரசர் பாரதி பாடியதுபோல் எல்லோரும் ஓர் நிறை, எல்லோரும் ஓர் குலம், ஓர் இனம், எல்லோரும் இந்திய மக்கள், எல்லோரும் இந்நாட்டு மன்னரே! நாட்டின் ஆட்சிப்பொறுப்பு நம் மக்களிடையே வந்துவிட்டது. அதாவது, 21 வயது வந்த பிரஜைகளெல்லோரும் புது அரசியலின்கீழ் தங்கள் வாக்குரிமையை யுபயோகித்துப் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பர். அவர்கள் ஒன்றுகூடி நாட்டின் ஜனாதிபதியைத் தேர்ந்தெடுப்பர் அதே போலவே மந்திரிசபை அமைப்பும் பொதுமக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளிடமேயிருந்துதான்.

ஆக, முப்பத்து முக்கோடி மக்களுள் அரசாங்க ஆதிபத்ய உரிமை வயதுவந்த 20 கோடி வாக்காளர்களிடமேயுள்ளது. இந்தத் தேர்தல் தொகுதி பிரிட்டனைக்காட்டிலும் நான்கு மடங்கு அதிகமானதென்றும், அமெரிக்காவின் ஜனத்தொகையைக்காட்டிலும் பெரிதென்றும், உலகில் வேறெந்த நாட்டிலும் இவ்வளவு பிரம்மாண்டமான வாக்காளர் தொகுதியில்லையென்றும் நாம் உணர்ந்தோமாகில் அரசியல் ஆதிபத்ய உரிமை பெற்ற இந்த சமுதாயம் போன தலைமுறையில் பாரதி பாடியவண்ணமே அமைந்திருப்பது தெளிவாகும்:

"முப்பது கோடி ஜனங்களின் சங்கம்
முழுமைக்கும் பொது உடமை
ஒப்பில்லாத சமுதாயம்
உலகத்திற்கொரு புதுமை."

இப்போது ஏற்பட்டுள்ள நம் குடியரசில் ஜாதிமத வகுப்பு பேதமின்றி, எல்லோரும் சமம், சம உரிமை, சம அந்தஸ்து கொண்டவர் என்ற அடிப்படையில்தான் சட்டதிட்டங்கள் அமைந்துள்ளன. புதுத்தேர்தலுக்குப் பிறகு ஏதாவது அரசியல் அமைப்பில் மாறுதல் செய்யவேண்டுமென்று தோன்றினால் அதற்கும் இடம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அரசியல் சட்டத்தை மாற்றித் திருத்தியமைக்கும் உரிமையையும், அதிருப்திகரமான சர்க்காரை மாற்றி வேறொரு புதிய சர்க்காரை அமைக்கும் உரிமையையும் மக்கள் பெற்றுள்ளனர். ஆகையால் அவர்களே இந்நாட்டு மன்னர்!

கவி சொன்னவண்ணம் காலம் கண்டுணர்ந்தது என்பது இந்த அரை நூற்றாண்டில் மற்றொரு அம்சத்திலும் ஸ்பஷ்டம். வங்கக் கவியரசர் உலகம் நிறைந்த புகழாளர் "ஜனகணமன" என்ற வாழ்த்துப்பாவை எந்த சுப முகூர்த்தத்தில் ஆத்மசுத்தியுடன் உள்ளொளியுடன் இயற்றினாரோ, அது இன்று சாகாவரம் பெற்று நம் குடியரசின் தேசிய கீதமாக, சொற்பொருட் பொருத்தத்துடன் இமயம்முதல் குமரிவரையும், இருகடலளவும் முப்பத்து

முக்கோடி மக்கள் தலைவணங்க, ஒலிக்கிறது. இப்பாரந்த உலகின் எந்த மூலைமுடுக்கிலும் இந்தியாவின் சின்னமாக நம் மூவர்ண தர்மசக்கரக் கொடியும், இந்த "ஜனகனமன" கீதமும் விளங்குகின்றன.

தீர்க்கதரிசிகளான ஆத்மஞானிகளின் அருள்மொழிகள் சரித்திரப் பிரசித்தி பெறுகின்றன. ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர் ஒருசமயம் உபதேசித்தார்: "உனது நெஞ்சுக்குத் துரோகம் செய்யாதே! மனச்சாட்சிப்படி நட. நிச்சயமாக உனக்கு ஜயம் உண்டாகும். கள்ளம் கபடமற்ற உள்ளத்தோடு பிரார்த்தனை செய். ஈச்வரன் கேட்பான்...ஹரி நாமோச்சாரண பலனில் திடமான நம்பிக்கை கொள். பகவந் நாமம் சகல சக்தி வாய்ந்தது. அதனை உச்சரிப்பதால் உடனே பலன் ஏற்படாமல் போகலாம்; அதன் பலன் என்றாவது ஒருநாள் வந்தே தீரும்......ஈச்வரன் பக்தர்கள் விரும்புவனவற்றையெல்லாம் அளிக்கும்கற்பக விருக்ஷம் போன்றவன்..."

இவ்வருள் மொழிகள் மஹாத்மாஜியின் தியாக வாழ்வின் தூய அம்சங்களை முன்கூட்டியே தீர்க்க தர்சனத்துடன் விளக்குவனபோன்றல்லவா அமைந்துள்ளன! நாற்பதுகோடி மக்களின் நலனைக்கோரிய பிரதிநிதியாகத் திகழ்ந்து, அந்தராத்ம சுத்தியுடன், மனச்சாட்சிப்படி நடந்து, கள்ளங்கபடமற்ற உள்ளத்தோடு பிரார்த்தனைசெய்து, புனித நாமத்தைச் சதா உச்சரித்ததால் சரீர சம்பந்தமான சகல இன்ப துன்ப உணர்ச்சிகளும் நீங்கப்பெற்று, உலக சரித்திரத்தில் வேறெங்கும் காணாத பேற்றையெல்லாம் பெற்றார் ஆத்மீக முறையிலே அண்ணல் காந்தியடிகள்.

பரமஹம்ஸர் வாக்கை மெய்ப்பிக்க மஹாத்மாவின் சரித்திரம் அமைந்ததுபோல், விவேகானந்தரின் வாக்கை மெய்ப்பிக்க இந்தியக் குடியரசுச் சாஸனம் முன்வந்துள்ளது. இன்றைய குதூகல விழாவுக்கு விதை தூவியவர்களில் ஸ்வாமி விவேகானந்தரும் ஒருவரே என்பதை நாம் நினைவில் கொள்ளவேண்டும். நம் நாட்டின் பெருமையையும் மகிமையையும் உலகறிய அவர் அமெரிக்காவில் முழங்கியபோது தெரிவித்தார்: '......இந்தியா இறக்குமா? பின் உலகத்தினின்றும் ஞானமனைத்தும் இல்லாது ஒழியும். ஒழுக்க நிறைவெல்லாம் ஒழியும், இலட்சிய உணர்ச்சியெல்லாம் ஒழியும். ...ஆன்மாவே பலியாகும்...ஆகையால் அரும்பாடு படுவோம் அனைவரும். உறங்க இது காலமன்று. நமது முயற்சியைப் பொருத்துள்ளது எதிர்கால இந்தியாவின் வருகை. அவள் அங்கே தயாராகக் காத்திருக்கிறாள். எழுமின், விழிமின். நமது பாரத அன்னையாகிய இந்நங்கை மீண்டும் இளமை நலம் பெற்று, முன்பு என்றேனும் இருந்ததினும் மிக்க பெருமையோடு தனது அழிவற்ற சிங்காதனத்தின்மீது அமர்ந்திருக்கக் காண்மின்!' என்று 40வருஷங்களுக்குமுன்பேதட்டியெழுப்பினர். அந்தமஹான்குறிப்பிட்ட அவ்வளவு மகிமை பொருந்தியதாகவே நமது பாரதக்குடியரசு அமைந்துள்ளது.

ஆத்ம ஞானிகளின் உள்ளெழுந்த சொற்கள் பகவானுடைய நியமனத்தால் வெளிவந்த அருள் மொழிகளென்றும், அனாதி தத்வமான காலம் என்பது ஷை பகவத் சங்கல்பமான வாக்குகளை மெய்ப்பிக்கவே நாளடைவில் முற்படுகிறது என்றும், சுருங்கச் சொல்லின் ஞானி சொன்ன வண்ணம் காலம் கண்டுணர்கிறது என்றும் இங்கு பலபடியாகப் பார்த்தோம். இனி, நமது சுதந்தரச் சிற்பியும், தேசபிதாவும், ஆத்ம குருவும், சகல விதத்திலும் பிரத்யட்ச தெய்வமுமான மகாத்மாஜியின் பொன்மொழிகளில் சிலவற்றை நினைவுபடுத்திக்கொண்டு, "சொன்ன வண்ணம்" கதம்பச் சித்திரத்தில் ஒரு பகுதியை முடித்துக்கொள்வோம்.

ஒரு சமயம் காந்திஜி எடுத்துக்காட்டினர்: "நம் நாட்டுச் சகோதரிகள் மட்டும் விழித்துக்கொள்ளும் பட்சத்தில், நம் நாட்டுக்கு விடுதலை ஏற்படு

வதை யாரால் தடுக்கமுடியும்? ஸ்திரீகள் எப்போதும் தர்மத்தைக் காத்து வந்திருக்கிறார்கள்...... அத்தகைய ஸ்திரீகள் இன்று இந்துஸ்தானத்தின் கஷ்டங்களைமட்டும் உணர்ந்துகொள்ளும் பட்சத்தில், அக்கஷ்டங்கள் எவ்வளவு காலம் நீடித்திருக்க முடியும்? விரைவில் அவை விலகிவிடுவது உறுதி. இந்த நாடு அஹிம்ஸா மார்க்கத்தில், சாந்தமான முறையில், சுயராஜ்யம் பெறவேண்டுமானால், நம் சகோதரிகள் அதில் பூர்ணமாகப் பங்கெடுத்துக்கொண்டே தீரவேண்டும்.'' இந்த உபதேசம் சரியான பலனையளித்தது ப்ரஸித்தம்.

1920-ல் சொன்னார்: ''எந்த தேசம் எல்லையற்ற தியாகத்தைச் செய்ய முடியுமோ அந்த தேசம் அளவிடமுடியாத சிகரத்துக்கு உயர முடியும். அந்தத் தியாகமானது எவ்வளவுக்கெவ்வளவு பரிசுத்தமானதாக இருக்கிறதோ அவ்வளவுக்கவ்வளவு முன்னேற்றமும் துரிதமாகவிருக்கும்.'' இதை 1920லிருந்து 1950க்குள் கண்டோம். அவர் மொழிந்த சிகரத்தை 26—1—50ல் இந்தியக் குடியரசு அடைந்ததை உலகமே கண்டு களித்தது; அவரது ஆத்மாவும் கண்டு வாழ்த்தியிருக்கும்.

1925-ல் அருளினார்: ''இந்தியாவின் சுதந்தரமானது யுத்தம்—சமாதானம் முதலியவைகளைப் பற்றி உலகம் கொண்டுள்ள அபிப்பிராயங்களில் ஒரு புரட்சியை ஏற்படுத்தவேண்டும். இந்தியா ஒன்றுமே செய்ய முடியாமல் அடிமையாயிருப்பது மனித ஜாதியையே பாதிக்கிறது.'' இன்று நமது சுதந்தர சாஸனத்தில் இது விஷயமாக காந்தீயக் கொள்கைகள் அப்படியே அமைந்துள்ளன. (ஸ்ரீ. பி. ஸ்ரீ. கட்டுரையில் கவனிக்கவும். இதர முக்கியமான காந்தீய அம்சங்களையும் அவர் குறிப்பிட்டுள்ளார்.)

''பிரார்த்தனை காலையில் திறக்கும் சாவி; மாலையில் தாளிடும் சாவி ...அவர் வித்யாசம் பாராட்டுவதில்லை. உன்னுடைய பிரார்த்தனை ஒவ்வொன்றுக்கும் அவர் செவி சாய்க்கிறார். நம்பிக்கை மட்டுமில்லையேல் இவ்வுலகம் ஒரு நிமிஷத்தில் ஒன்றுமில்லாததாகிவிடும். நான் நம்புகிறவன். கடவுள் ஒருவர் மீதுதான் என் நம்பிக்கையெல்லாம். ஒரு அடி எடுத்துவைத்தால் அதுவே எனக்குப்போதுமானது. காலம் வரும்போது அடுத்தபடி என்னவென்பதை அவர் எனக்குக் காட்டுவார்!'' என்றார் மஹாத்மாஜி. அதன்படியே நடந்தும் காட்டினார், பலனை நாம் அனுபவிக்கிறோம்; அவரது முக்கிய சீடர்களுள் ஒருவரான பாபு ராஜேந்திர பிரஸாத் குடியரசின் முதல் ஜனாதிபதியாகியிருக்கிறார். காந்திஜி தெய்வமாய் நின்று நம் அனைவருக்கும் வழிகாட்டுவார். தர்ம சாஸ்திரங்களும் மனுநீதியும் சொன்னவண்ணம் இக்காலத்துக்கேற்ப சட்டச் சொற்களைச் செயலாக்குவோம். ஜய் பாரத்!

குடியரசு ஸ்தாபிதமாவதற்கு முன்.—

தொண்டனிலிருந்து தொண்டமான்வரை உயர்ந்துள்ள நம் ஜனாதிபதி

★

"குடியானவன் குடியரசுத்தலைவனான கதை" என்று பாபு ராஜேந்திர பிரஸாத்தின் வரலாறு வருங்காலச் சிறுவருக்கு ரஸமாகச் சொல்லப்படுமென்பதில் ஐயமில்லை. காலஞ்சென்ற விதல்பாய் பட்டேல் மத்திய அசெம்ப்ளிக்குத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பட்டபோதே 'உழவன் தலைவனானான்' என்று பெருமையுடன் வர்ணிக்கவில்லையா?

அடக்கமே உருவெடுத்த ராஜன் பாபுவைப் பற்றி பொதுமக்களுக்கு இது மட்டுமே தெரியும்—அதாவது, பெரிய தியாகி, மஹாத்மாவின் முக்கிய சிஷ்யர்களுள் ஒருவர் இவ்வளவுதான். எவ்வித ஆடம்பரமுமற்ற இவரைப் பற்றி அதிகம் எவரும் எழுதவுமில்லை. இனி எல்லோரும் எழுத முற்படுவார்கள்!

ஸ்ரீ. ராஜன்பாபு 1884 ஹு டிஸம்பர் 3உ பாட்னாவில் பிறந்தார். கல்கத்தாவிலும் முசபர்பூரிலும் படித்து பலபரிசுகளுடன் பட்டங்கள் பெற்றார். M. A. B. L., ஆன பிறகு கல்கத்தாவிலேயே வக்கிலானார். பிறகு பாட்னாவுக்குத் திரும்பி தொழிலில் நல்ல வெற்றியையும் வருவாயையும் கண்டார்.

தென்னாப்பிரிகாவிலிருந்து அப்போது தான் நாடு திரும்பிய காந்திஜி, பிஹாரில் சம்பாரானில் ஸத்யாக்ரகம் செய்யத் தீர்மானித்து அங்கு வந்து சேர்ந்தார். இந்த இயக்கத்தின்போதுதான் ஸ்ரீ ப்ரஸாத் காந்திஜியைச் சந்தித்து அவரது சிஷ்யனானது. அன்று முதல் தினே தினே அவருக்கு காந்திபிடத்திலும் காந்தீபத்திலும் அளவற்ற பக்தி அதிகரிக்கலாயிற்று. யேசு கிருஸ்துவுக்கு ஜான் என்ற சீடர் எப்படியோ அப்படி மஹாத்மாவுக்கு ராஜன்பாபு என்ற புகழைப் பெறலானார்.

1919 முதல் சொந்தத் தொழிலை விட்டு நாற்பது கோடி மக்களுக்காக உழைக்க முற்பட்டார். 1924 ஒத்துழையாமை இயக்கத்தில் கலந்து கொண்டார். பிஹார் மாகாணத்தை காந்தீயத்தின் முக்ய பூமியாக ஆக்க முயன்று, சமூக, இலக்கிய, அரசியல் துறைகளில் முன்னேறச் செய்தார். ஒரு ஏழைக் குடியானவனைப்போன்று தனது கடையுடை பாவனைகளை அமைத்துக்கொண்டார்.

உப்பு சத்யாக்ரகத்தின்போது ஜெயிலில் ஆஸ்த்மாவினால் தாக்கப் பட்டு மிகவும் அவஸ்தைப்பட்டு, விடுதலையானார். கங்கைக்கரையில் ஒரு ஆச்ரமம் அமைத்து துறவி போல காலத்தைக்கடத்த முற்பட்ட போது பூரி காங்கிரஸுக்குத் தலைவ

குடியரசு ஸ்தாபிதமான பின்.— பூச்சி சீனு

இந்தியக்குடியரசும் உலக ஜனாதிபதியும்

பி. ஸ்ரீ.

அபூர்வ குடியானவன்

ஒரு காலத்தில் ஒரு குடியானவன் இருந்தான். வயலை உழுதான்; விதைத்தான்; களை பறித்தான்; பொறுமையாக நீர் பாய்ச்சினான். அடிக்கடி வயலைப் பார்த்துவந்தான். கடைசியாக வயலுக்கு வேலிபோட்டு அந்த வேலிக்கருகே காத்துக்கிடந்தான். அந்த விளைவை உரிய சமயத்தில் தன் மக்கள் எல்லாருக்கும் கொடுக்க விரும்பினான்.

தான் பட்டினி கிடந்து மக்களை ஊட்ட விரும்பினான். தன் குழந்தைகள் க்ஷேமத்திற்காக உழைத்தான், பிரார்த்தித்தான். விளைவு கண்டதும் அறுவடை செய்வதற்கு முன்பே குடிவானவன் வேறு எங்கேயோ குடிபோய்விட்டான். அவனுடைய குழந்தைகள் ஆண்களும் பெண்களும் கோடிக்கணக்கானவர்! நம்பமுடியாத கதை என்கிறீர்களா?

அதிசயமான ஆடை

இன்னும் கேளுங்கள். ஒரு நெசவுகாரன். உழைத்து உழைத்து நூல் நூற்றான். நூலால் துணி நெய்தான். உழைப்போடு உபவாசமும் பிரார்த்தனைகளும் மேற்கொண்டு நெய்துகொண்டே இருந்தான். உரிய காலத்தில் ஓர் அதிசயமான ஆடை தயாரித்துவிட்டான். ஆடையென்றால், அவனுடைய கோடிக்கணக்கான

ராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். ஆனால் சர்க்கார் அவரைச் சிறைப்படுத்தினர்.

பூகம்பத்தினால் தாக்கப்பட்ட பீஹார் வாசிகளுக்காக நிதி திரட்டி நிவாரணம் அளிக்கக் கூடிய நன்மதிப்பு வாய்ந்த தலைவர் அவரே என்பதை உணர்ந்து அவரை விடுதலை செய்தனர். அவருடைய குருவான காந்தி ஒருவரைத் தவிர வேறெவராலும் அவ்வளவு நிதியும் திரட்டியிருக்க முடியாது. வேலையும் செய்திருக்க முடியாது. அப்படி உழைத்து உதவினார்.

இந்த ஸேவையின் பரிசாக மீண்டும் அவரை 1934 ல் பாம்பே காங்கிரஸுக்குத் தலைவராகத் தேர்ந்தெடுத்தார்கள்.

பாகாண சுயாட்சியைக் காங்கிரஸ் ஒப்புக்கொண்டு பதவி ஏற்ற காலத்திலும், 1942 ல் தனிநபர் சத்யாக்ரகத்திலும் காந்திஜியின் ஆணைக்குட்பட்டுழைத்தார்.

காந்திஜியின் நிர்மாணத்திட்டத்தின்படி உழைப்பதில் என்றுமே ஆர்வமுள்ள இவரை 1946ல் அரசியல் நிர்ணய சபை தலைவராகத் தேர்ந்தெடுத்தது. விவசாய மந்திரிப் பதவியைவகித்து வந்ததை ராஜிநாமா செய்து அரசியல் நிர்ணய வேலையில் ஈடுபட்டு, மூன்று வருடங்களில் திருப்திகரமாகப் பூர்த்தி செய்தார்.

புதுத்தேர்தல் நடந்து ஜனாதிபதி தேர்ந்தெடுக்கப்படும்வரை நம் குடியரசின் முதல் ஜனாதிபதியாக அவர் ஒருமுகமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு 26-1-50ல் பதவி ஏற்றார். காந்திஜியின் ஆத்மாவும் ஸ்ரீ பகவானும் அவரை ஆசீர்வதிப்பார்களாக!

ஜய் பாரத்!

○

குழந்தைகளுக்கும் உபயோகமாகக்கூடிய ஒரே மந்திர ஆடை! ஆடையைக் குழந்தைகள் அணிந்து மகிழ்வதற்குள் அவன் பரலோகம் போய்விட்டான்.

ஆடையில் ஒரு சிறு பகுதி—சின்னஞ்சிறு பகுதிதான் கிழிந்து போயிற்று. நெசவுகாரன் உயிரோடிருக்கும்போதே ஏற்பட்ட கிழிசல்தான். நெசவுகாரன் உள்ளம் புண்பட்டது. எனினும், பாக்கியுள்ள ஆடையைக் கிழிசல் தெரியாமல் தைத்துச் சரிபடுத்தி விட்டார்கள் நெசவுகாரனும் அவனுடைய சகாக்களும்.

இந்த ஆடையை— ஒரே ஆடையைக்— காஷ்மீரம் முதல் கன்னியாகுமரிவரையுள்ள கோடிக்கணக்கான மக்களும் அணிந்து பேறுபெறவேண்டும். பேறுபெற்றுத் தாங்கள் இழந்த தந்தையின் புனித நினைவுகளால் தங்கள் உள்ளத்தைத் தூய்மை செய்துகொள்ள வேண்டும்.

எத்தகைய பயிர்

இந்த ஆடை தான்— அந்தக் குடியானவனின் செந்நெல் விளைவு தான்— நமக்கு இன்று கிடைத்திருக்கும் ஜனநாயகக் குடியரசு என்று சொல்லவேண்டியதில்லை.

பாரதியார் சொல்லுகிறபடி, தண்ணீர் பாய்ச்சி வளர்த்த பயிரா!—கண்ணீரால் வளர்த்த பயிரல்லவா? காந்தியடிகளின் இரத்தச் செந்நீராலும் புனிதமாகிவிட்ட அரசியல் பயிர்; அஹிம்ஸா தர்ம ராட்டையில் சத்தியத்தை நூற்று நெய்த ஜனநாயக ஆடை. ஆவி வடிவமாக நின்று காந்தியடிகள் ஆசீர்வதிக்க நாம் அந்த ஆடை புனைந்து அந்த விளைவை அனுபவிக்கப்போகிறோம்.

'ஆடையெல்லாம் அணிவோர் சிறப்பே' என்ற 'மனோன்மணீய' வாக்கிற்கு இணங்க இந்த ஆடையையும் நாம்தான் சிறப்பிக்க வேண்டும். இந்த விளைவையும் நாம்தான் நன்கு பயன்படுத்திக் கொள்ளவேண்டும்.

உலக ஜனாதிபதி

இன்று இந்திய ஜனாதிபதியாகி வீற்றிருக்கின்றார் பாபு ராஜேந்திரப் பிரஸாத். ஆனால் காந்தியடிகள் உலக ஜனாதிபதியாக விளங்கினார். இத்தகைய பட்டம் ஒன்றும் காந்தியடிகளுக்கு ஒருவரும் சூட்டவில்லை. உலக அரசியல் திட்டக் கமிட்டியின் காரியதரிசியும், சிகாகோ சர்வகலாசாலையைச் சார்ந்தவருமான திரு. ஜி. ஏ. பார்ஜீஸ் சொல்லுகிறார்: 'உலக ஜனாதிபதி பதவிக்காக 1948 ஜனவரி 30-ம் தேதிக்கு முன் தேர்தல் நடந்திருந்தால் அப்பதவிக்குக் காந்தியையே தேர்ந்தெடுத்திருப்பார்கள். ஸ்டாலின், சர்ச்சில் என்ற அபேட்சர்களைவிட அபரிமிதமான பெரும்பான்மை ஓட்டு காந்திக்கே கிடைத்திருக்கும். வெள்ளையரல்லாதாருடன் ஏராளமான வெள்ளையர்களும் காந்திக்கே ஓட்டு அளித்திருப்பர். ஏகஉலக ஜனாதிபதியாகப் பதவியேற்கத்தக்கவர் என்ற அந்தஸ்துடன் காந்தியடிகள் காலமானார்.'

சக்திப் பெருக்குக்குச் சமர்ப்பணம்

உலக அரசியல் நகல்திட்டம் 1948 மார்ச்சுமாதம் பிரசுரிக்கப் பட்டது. ஜனவரி 30–ம் தேதி கொலையுண்ட காந்தியடிகளின் பெயருக்கு இத்திட்டம் சமர்ப்பணமாயிற்று. இந்தத் திட்டக் கமிட்டியின் காரியதரிசி, மிகப் பிரம்மாண்டமான ஒரு ஸாம் ராஜ்யத்தை ஆயுதமின்றியே காந்தியடிகள் வென்று வலியழித்ததைப் பிரமாதமாய்ப் பேசியிருக்கிறார். உலகத்திலேயே இரண்டாவது பெரிய தேசமாகவுள்ள இந்தியாவுக்கு ஆயுதமின்றியே காந்தி யடிகள் அளித்துதவிய சக்திப் பெருக்கை இவர் பிரஸ்தாபிக்கிறார்.

காந்தீய சாஸனமே!

காந்தியடிகள் அளித்துதவிய ஜீவசக்திவாய்ந்த அரசியல் திட்டம்தான் இந்திய அரசியல்திட்டம். இதன் 395 ஷரத்துக் களும் எட்டு ஷெட்யூல்களும் 'உலகத்திலேயே நீண்ட அரசிய லமைப்புச் சாஸனம் இது' எனக் காட்டுகிறது. உலகத்திலேயே மிகவும் நீளமான (அல்லது பருமனான என்று வைத்துக்கொள் ளுங்கள்) நூல் நமது மகாபாரதம்தான்.

இந்த அரசியலமைப்புச் சாஸனத்தில் உள்ள விசேஷ அம்சத் திற்கிணங்க சம ஓட்டுரிமை பெறும் மக்கள் 16 கோடி. இந்த ஓட்டர் ஜாபிதாவின் பருமன் 200 கெஜம் என்று நமது ஜனாதிபதி ராஜேந்திரப்பிரஸாத் தெரிவித்திருக்கிறார். ஆனால் நீளமும் பரு மனும் போதுமா?

'உலக வியாபகமான சர்க்கார் ஏற்படவேண்டும். உலக நோய்க்கு அது தவிர வேறு மருந்து இல்லை' என்றார் காந்தியின் சீடரான பண்டித ஜவாஹர்லால் நேரு 1948–ம் ஆண்டுத் தொடக் கத்திலே. உலக சமாதானத்திற்காக முன்வந்து உழைப்பதற்கு இந்தியா எப்போதும் தயாராக இருக்கும் என்பதற்கு நமது புதிய அரசியலமைப்புச் சாஸனம் ஒரு நல்ல சாட்சிதான். இந்த அம்சத் தில் காந்தியடிகளின் திருவுள்ளத்தைப் பெரிதும் தழுவி அமைந் திருக்கிறது நமது அரசியலமைப்புச்சட்டம்.

காந்தியடிகளின் ஸாராம்சமான சில கொள்கைகளை அப் படியே காணலாம் இந்தப் புதிய அரசியலமைப்புச் சட்டத்திலே. காந்தியடிகளின் வாழ்க்கைத் தத்துவம் இந்த அரசியலமைப்பு முறைக்கு ஒளியும் அழகும் தந்திருக்கிறது.

காந்தியடிகளின் தேசீயத் திட்டத்தில் மூன்று முக்கிய அம் சங்கள் உண்டு. ஒன்று—தீண்டாமை விலக்கு; இரண்டாவது கதர்; மூன்றாவது இந்து முஸ்லிம் ஒற்றுமை. இந்த மூன்று அம் சங்களுக்கும் முக்கிய ஸ்தானம் கிடைத்திருக்கிறது நமது அரசிய லமைப்புச் சட்டத்திலே.

'அடிப்படை உரிமைகள்' என்ற அத்தியாயத்திலே பதினேழா வது ஷரத்து, தீண்டாமையை முன்னிட்டு யாருடைய பொது ஜன உரிமை பாதிக்கப்பட்டாலும் அது சட்டப்படி தண்டிக்க வேண்டிய குற்றமாகும் என்பதை வற்புறுத்துகிறது. இதனால் இதுவரையில் தாழ்த்தப்பட்டிருந்த ஜனங்களுக்கும் இந்த அரசியல்

அமைப்புச்சட்டம் ஒரு மகத்தான சுதந்திர சாஸனமாகிறது. இதனால் ஸர்வஜன ஓட்டுரிமையுடன் ஸர்வஜன சகோதரதர்மமும் சித்தியாகிறது. 'தீண்டாமை மாண்டது; இந்தியா சிரஞ்சீவியாக வாழும்' என்ற நம்பிக்கை உதயமாகிவிடுகிறது.

'சுதர்' என்பதைக் குடிசைத் தொழில்களுக்கு ஓர் அறிகுறியாகக் கொள்ளவேண்டும். கிராமங்களில் தனிமுறையிலும் கூட்டுறவின் அடிப்படையிலும் குடிசைத்தொழில்கள் தழைத்தோங்குமாறு அரசாங்கம் முன்வந்து உதவிசெய்யவேண்டும் என்பதாக 43-வது ஷரத்து தெளிவாய்க் கூறுகிறது.

இந்து-முஸ்லிம் ஒற்றுமைக்கு வகுப்புவாரிப் பிரதிநிதித்வத்தை ஒழித்துக் கூட்டுப் பிரதிநிதித்வ முறையை மேற்கொள்வதே தக்கசான்றாகும்.

நிர்மாணத்திட்டத்தின் இந்த மூன்று அம்சங்கள் தவிர வேறு துறைகளிலும் காந்தியடிகள் உழைத்துக்கொண்டிருந்தார் என்பதை நாம் எல்லாரும் அறிவோம். இந்தியாவில் பரம ஏழைகளும் 'இது எங்கள் தேசம்' என்ற உணர்ச்சியுடன் வாழ்க்கை நடத்த வேண்டும் என்றும், உயர்ந்தவகுப்பினர் தாழ்ந்த வகுப்பினர் என்ற வகுப்பு வேற்றுமை இருக்கக்கூடாதென்றும், எல்லா வகுப்பினரும் ஒன்றுபட்டு வாழவேண்டுமென்றும் காந்தியடிகள் விரும்பினார். ஆண்களோடு பெண்களும் சமஉரிமைகளுடன் வாழவேண்டுமென்றார். தீண்டாமை விலக்கைப்போல் மதுவிலக்கும் இன்றியமையாதது எனக் கருதினார். இந்தக் கொள்கைகளுக்கெல்லாம் நமது அரசியலமைப்புச்சட்டம் தக்க இடம் கொடுத்திருக்கிறது.

காந்தியடிகள் மதபக்தி நிறைந்தவர்; ஸர்வசமய சமரஸஞானி. ஸர்வஜன சகோதர தர்மத்தில் நம்பிக்கை கொண்டிருந்ததுபோல், ஸர்வசமய சகோதர தர்மத்திலும் இவருக்கு விசேஷ நம்பிக்கை உண்டு. காந்தியடிகளின் இந்தக் கொள்கைக்கு அரசியலமைப்புச் சட்டம் இடம் கொடுக்கிறதா? இடம் கொடுக்கத்தான் முடியுமா? மதச்சார்பில்லாத அரசாங்கமல்லவா? இந்தச் சந்தேகம் மக்கள் உள்ளங்களில் எழுவது இயல்பு. இத்தகைய சந்தேகவாதிகள் சட்டத்தின் 25-வது ஷரத்தைக் கூர்ந்து கவனிக்கவேண்டும். பூர்ண மத சுதந்திரமும் வழிபாட்டுச் சுதந்திரமும் ஒவ்வொரு பிரஜைக்கும் உண்டு என்பதை அடிப்படை உரிமைகள் என்ற அத்தியாயத்தில் மேலே சொன்ன ஷரத்து வற்புறுத்துகிறது. 15, 16-வது ஷரத்துகளில் மதம், இனம், ஜாதி முதலான வேற்றுமைகள் இல்லாமல் அனைவருக்கும் அரசாங்கம் பாதுகாப்பு அளிக்கும் என்று உறுதி கூறப்படுகிறது.

இப்படியே காந்தியடிகளின் வாழ்க்கைத் தத்துவத்தின் பல வேறு முக்கிய அம்சங்களுக்கும் அரசியலமைப்புச் சட்டத்தில் தக்க இடம் கிடைத்திருக்கிறதென்று சொல்லிக்கொண்டே போகலாம். ஆனால் முடிவுரையாக ஒரே விஷயத்தை வற்புறுத்துவது இங்கே போதுமானதென்று நம்புகிறேன். சத்தியாக்கிரகத்தையும்

கலியன் விக்ரஹங்கள்

★

[ஸ்ரீ வை. மு. நரஸிம்மன், B. A, B. E, A. M. I. E., M.R.S.I. (Lond)., Consulting Architect & Chartered Engineer எழுதிய ஆங்கிலக் கட்டுரையின் ஸாரம்.]

★

இவ்விதழின் மேலட்டை இரண்டாம் பக்கத்திலுள்ள இரு போட்டோக்கள் ஸ்ரீ வைஷ்ணவ ஆழ்வார் பதின்மருள் கடைசியான திருமங்கை மன்னனின் விக்ரஹங்களின் பிம்பங்கள். அவ்வாழ்வாருக்கேற்பட்ட பல சிறப்புப்பெயர்களில் பரகாலன், சீர்க்கலியன், கலித்வம்ஸை கலிகன்றி, நீலன் முதலியன ப்ரஸித்தம்.

சீர்காழிக்குச் சமீபத்திலுள்ள திருநகரியிலுள்ளது முதல் விக்ரஹம். திருக்குடந்தையென்னும் கும்பகோணம் ஆராவமுதன் சார்ங்கபாணி ஸந்நிதியிலுள்ளது இரண்டாம் விக்ரஹம். குடந்தை விக்ரஹம் யாது காரணத்தாலோ ஆராதனையிலில்லை.

மிகக் கவர்ச்சிவாய்ந்த திருநகரி விக்ரஹம், குமுதவல்லி நாச்சியாருடனும், ஆழ்வார் ஜீவியகாலத்தில் ஆராதித்துவந்த எம்பெருமானுடனும், பீடத்தின் அடிவாரத்தில் எம்பெருமானாரின் திருவுருவத்துடனும் காட்சியளிக்கிறது. இந்த அற்புத விக்ரஹம் ஆழ்வாரின் பக்தர்களான சிஷ்யர்களால் உருவாக்கப்பட்டதாகக் கருதப்படுகிறது. கூப்பிய கைகளுடனும், சாய்ந்த வேலுடனும், மலர்ந்த முகத்துடனும், மகா தேஜஸ்வியாகக் காட்சியளிக்கிறார். இதற்கீடான ஆழ்வார் விக்ரஹம் வேறெங்குமேயில்லையென்றே சொல்லலாம். குடந்தை விக்ரகத்தில் அஞ்சலியும் வேலும் காணப்படவில்லை; ஒரு கையில் கேடயமும் ஒரு கையில் கட்கமும்கொண்டு காட்சியளிக்கிறார் ஆழ்வார். சாதாரணமாகவே இருமுறைகளில்தான் ஆழ்வாரின்

அஹிம்ஸாதர்மத்தையும் வற்புறுத்திய பெரியார் யுத்தங்களுக்கு விரோதியாகி உலகச் சமாதானத்தையே பெரிதும் காதலித்தார். இந்தத் தனிப்பெருங்கொள்கையைத் தழுவியே அமைந்திருக்கிறது 51-வது ஷரத்து.

தேசங்களுக்கிடையே விவகாரங்களை மத்தியஸ்தமுறையில் தீர்த்துக்கொள்ளவேண்டும் என்பதும், நியாயமும கௌரவமும் வாய்ந்த உறவு பலநாடுகளுக்கிடையே நிலவவேண்டும் என்பதும் இந்த ஷரத்தின ஸாராம்சம.

எப்படி நோக்கினும், 'உலகஜனதிபதி' என்று உலகம் கௌரவிக்கத்தக்க சமாதானமூர்த்தியும் தர்மமூர்த்தியும் நியாய மூர்த்தியுமான மகாத்மா காந்தியின் கொள்கைகளுக்கிணங்கத் தேசத்தொண்டு ஆற்றுவோருக்கு நமது அரசியலமைப்பு ஒரு கோட்டையாகி விளங்கும். இக் கோட்டைக்குள்ளே கோயில் காந்தீயம், இக் கோயில் வழிபாடுதான் முதல்தரமான தேசத்தொண்டு.

விக்ரஹங்கள் அமைந்துள்ளன. சித்திரங்களில் மட்டும் ஆழ்வார் தனது "ஆடல்மா" வெனும் குதிரையுடனும் நான்கு தோழர்களுடனும் காணப்படுகிறார்.

மேலட்டை மூன்றாவது பக்கத்திலுள்ள முதல்படம் ஆழ்வாரின் அவதாரஸ்தலமான திருக்குறையலூர் எம்பெருமானான உக்ர நரஸிம்மர் மூல விக்ரஹத்தின் பிம்பம். அந்த விக்ரஹத்தில் பல்லவ, அல்லது சோழகாலத்திய சிற்ப லக்ஷணங்களைக் காணாமையால் ஆழ்வார்காலத்திலிருந்த விக்ரஹம் பழுதடைந்து பிற்காலத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்ட புதுச் சிலையோவெனத் தோன்றுகிறது.

கடைசிப்படம் திருநகரிக்கோவிலிலுள்ள ஆழ்வாரின் ஸந்நிதியையும், ஆழ்வார் கொள்ளையடித்த வயலாலி மணாளனின் கோவிலின் வடக்கு மதிலையும் காட்டுகிறது. திருநகரியில் விசாரித்ததில், பூர்விகமாக ஆழ்வார் ஸந்நிதி வெளியே தனித்திருந்ததாகவும், பிற்காலத்தில்தான் பெருமாள்கோவிலுக்குள்ளேயே அமைக்கப்பட்டதென்றும் தெரியவந்தது. ஆழ்வார் அவதரித்த கிராமத்தில் எந்த ஸ்தலத்தில் அவர் அவதரித்தாரென்பது ஒருவராலும் சொல்ல முடியவில்லை.

ஆழ்வார்களின் திவ்ய சரிதைகளை வெளியிடும் நூல்கள் பலவாயினும், பின்பழகராம் பெருமாள் ஜீயருடைய குருபரம்பரா ப்ரபாவம், ஆறாயிரப்படிதான் மிக முக்கியமெனக் கருதப்படுகிறது. ஆழ்வாரின் சரித்திரத்தில் முக்யமான கட்டங்கள் பிரஸித்தம். இங்கு சில அம்சங்களைமட்டும் சுருக்கமாகக் கவனிப்போம்.

சோழராஜனின் கீழ் ஓர் சிற்றரசனாகத் திருக்குறையலூரை ஆண்டுவந்த வேளாளத் தலைவன்தான் திருமங்கைமன்னன். வைணவகுல மகளான குமுதவல்லியின்மீது ஏற்பட்ட காதலின் வலிமையால் அவள் பொருட்டுத் தாமும் வைணவ பக்தராக மாறினார். பாகவத கைங்கர்யத்திலீடுபட்டவர் தம் ராஜாங்க வருவாயையும் அதிலேயே செலவழிக்க முற்பட்டு அதற்காகத் தண்டனையும் அனுபவித்தார்; கொள்ளையடித்தும் கைங்கரியம் செய்ய முற்பட்டார். அவர் புத்தர் ஸ்வர்ண விக்ரஹத்தைக் கொள்ளையடித்து ஸ்ரீரங்கம் கோவிலைக்கட்டினதும், பகவானும் பிராட்டியும் புதுமண தம்பதிகள்போல் காட்சியளித்து அவர் கையால் கொள்ளையடிக்கப் பெற்றதும், பகவானே திருமந்த்ரத்தை உபதேசித்ததும் அனைவரும் அறிந்ததே. பகவத் ஸம்பந்தமும் பாகவத ஸம்பந்தமும் ஒருங்கே பெற்றதால் அபூர்வ கவியாகவும் ஆழ்ந்த பக்தராகவுமானார்.

அவர் பாடிய ஆறு பிரபந்தங்கள்: பெரிய திருமொழி, திருக்குறுந்தாண்டகம், திருநெடுந்தாண்டகம், திருவெழுகூற்றிருக்கை, சிறிய திருமடல், பெரிய திருமடல். நம்மாழ்வாரின் நான்கு வேத ஸாரமான பிரபந்தங்களுக்கு இந்த ஆறு பிரபந்தங்களும் அங்கங்களெனக் கருதப்படுகின்றன. (சிறிய திருமடலைப் பற்றி நம் 27-வது ஆண்டு மலரில் மூவர்ணப்படத்துடன் அனுபவித்தோம்.)

குருபரம்பராப்ரபாவத்தில் கலி 398ஸ்ரீ-ளஸ்ரீ-கார்த்திகையில் கார்த்திகை நாளன்று ஆழ்வார் அவதரித்ததாகக் கூறப்படு

"சங்கம்" அவச்யமா?

"வா, வா, கலா! எது ஊரில்தானிருக்கிறாயா? வெளியூர் வாஸமா? இரண்டுமாதங்களாக இந்த பக்கமே வரவில்லையே?" என்றாள் சாவித்திரி மாமி.

"கலா இனி நம் வீட்டிற்கு வருவாளா? பாரதியார் சொன்னதை நிறைவேற்ற கலாதான் பிறந்திருக்கிறாள். தெருவுக்கு ஒரு சங்கம் வேணுமென்றாரல்லவா! அதை கலா நடப்பிக்கிறாள். அவர்கள் மூன்றாவது வீட்டில் ஒரு மாதர் சங்கம் ஏற்பாடு செய்திருக்கிறாளாம்" என்றாள் பர்வதம்.

"ஆம், பர்வதம்! உங்களெல்லோரையும் அதில் அங்கத்தினராக்கவே இன்று வந்தேன். நமக்கு சமீபமே. எல்லோரும் வரவும், போகவும் ஸௌகர்யம்."

"என்ன சங்கத்தில் புரட்டப்போகிறீர்கள்! ஒரு தையல் வகுப்பு, ஹிந்திவகுப்பு, அதில் ஒன்ணரை மாணவிகள், இவைகள் தானே? ஊரில் பெண்களுக்கு இது ஒரு பைத்தியமோ, அல்லது நாகரீகமோ, வீட்டுவேலைகளைவிட்டு சங்கமாம் சங்கம்! நான் சேரவில்லை" என்று ஆத்திரத்துடன் சொன்னாள் கமலா.

கிறது. திருநறையூர்ப் பாசுரங்களில் கோச்செங்கணான் என்ற சோழ மன்னனைப்பற்றி அவர் குறிப்பிட்டிருப்பதாலும், திருஞான சம்பந்தரை வாதத்தில் வென்று சீர்காழியில் அவரிடமிருந்து அடையாளமாக வேல் பெற்றதாயும் சரித்திரமிருப்பதாலும், இரண்டாவது பரமேச்வரவர்மனைக் குறித்தும் அவர் பாசுரங்களில் குறிப்பிருப்பதாலும், அவர் 7-வது நூற்றாண்டு ஆரம்பத்தில் வாழ்ந்தவரென்று தேறுகிறது.

கீழ்த் திருப்பதியில் ஆழ்வாருக்குத் தனிக்கோவிலுண்டு. ஆனால் தற்போது பாழடைந்து கிடக்கிறது. அதனுள்ளிருக்கும் ஆழ்வார் சிலை மிக அழகாக திருநகரி விக்ரஹம்போலவே உள்ளது. ஆழ்வார் கற்சிலைகளுள் இதுவே மிகப்பெரிது. 13-ம் நூற்றாண்டைச் சேர்ந்ததென கோவிந்தராஜர் ஸந்நிதிக் கல்வெட்டுகளிலிருந்து தெரிகிறது. திருச்சானூர் தாயார் கோவிலிலுள்ள ஆழ்வார் விக்ரஹம் மிகவும் அபூர்வமாக, உருவிய வாளுடன் அதிவேகமாகப் புறப்படுவதுபோல் காட்சியளிக்கிறது.

இங்கு வெளியிடப்பட்டுள்ள இரண்டு போட்டோக்களிலும் 'த்ரிபங்கி' சாய்வுமுறை காணப்படுகிறது. முதல் விக்ரகத்தில் கவசமிருப்பதால் அவயவங்களின் உருப்புகள் மூடப்பட்டுள்ளன. குடந்தை விக்ரகத்தில் முன்னே நீட்டிய மார்பகமும், சாய்ந்து ஊன்றிய இடதுகாலும், பீடத்தை மேலோடு தொட்டுக்கொண்டிருக்கும் வலதுகாலும், ப்ரயோகிக்கும் தோரணையில் உருவிய கத்தியும், கேசபந்தமும், மகரகுண்டலமும் இதர திருவாபரணங்களும், கச்சணிந்த உடையும், கம்பீரத் தோற்றமும் சுமார் 1700 வருடத்திய விஜயநகர காலத்திய விக்ரகமென்பதை நன்கு காட்டுகின்றன.

"முடிந்ததா கமலா? வாயெடுப்பதற்குள் அடிச்சுத் தள்ளிவிட்டாயே! ஏனோ இப்படி சங்கமென்றால் சண்டைக்கு வருகிறாய்? நல்லதைப் பார்த்து தானும் செய்தால் அது நாகரீகமாகயிருந்தாலும் பைத்தியமாகவிருந்தாலும் போற்றக்கூடியதே. மாதர்கள் கூடி நல்ல பொழுதாகப் போக்கினால் அதைக் கொண்டாடுவதா? தூற்றுவதா?"

"உனக்கென்ன கலா! உங்க அத்தையே மாமியாராக வந்து விட்டார். உன்னை செல்வமாகப் பார்ப்பான். எங்கவீட்டில் சங்கத்துக்கு போகிறேனென்று கிளம்பிவிட்டால் திரும்பி வீட்டுக்குள் நுழையமுடியாது. எதிர்வீட்டு சிவகாமு போய் என்ன பிரமாதமாக சாதித்து விட்டாள்?

"எதுவும் எல்லையோடு செய்தால் உயர்வாக இருக்கும். சங்கத்துக்கும், ஸினிமா, கிளப்பு இவைகளுக்கும் போவதே பொழுதாக வைத்துக் கொண்டு குடும்பத்தைக் கவனிக்காமல் இருந்துவிட்டால் அது பெருங் குற்றமே. சுதர்மத்துக்கு மிஞ்சியதுதான் மற்றவை. பெண்களின் முக்கிய கடமை மக்களைப்பெற்று நல்ல முறையில் வளர்ப்பதே. குடும்பத்தை பசுஞ்சோலையாக வைப்பதே. நம் குழந்தைகளே வருங்காலத்தில் நாட்டின் பொக்கிஷம். மேல் நாட்டில் ஒரு மாது தன்னுடைய ஐந்து ஆண்மக்களை நல்ல முறையில் வளர்த்து ஆளாக்கியதற்காக டாக்டர் பட்டம் பெற்றிருக்கிறான். "கௌஸல்யா சுப்ரஜா ராமா"வென்று விசுவாமித்திரர் கௌஸல்யா தேவிதான் ராமனுடைய பெருமைக்குக் காரணமாகச் சொல்லுகிறார். நம் குழந்தைகளை நாம் வீரர்களாகவும், உண்மையுள்ளவர்களாகவும், குணக் குன்றுகளாகவும் வளர்ப்பதே பெரும் சமூகசேவை. ஆனால் நாம் சங்கங்களுக்குப் போவதால் குழந்தைகளை வளர்ப்பதில் விருத்தமில்லை."

"கலா! நீ பேசுவது உனக்காவது புரிகிறதா? உளறிக்கொட்டி கிளறிமூடுகிறாயே. மாதர்கள் சங்கத்திற்கு போவது அவச்யம் என்கிறாய். பின்னோடு வீட்டில் குழந்தைகளை வளர்த்து குடும்பத்தைப் பேணுவதே சிறந்த சமூக சேவை என்கிறாய். பாவம்! நீ சொல்வது உனக்கே புரியவில்லை!" என்றாள் பர்வதம்.

"நான் சொல்வது இரண்டும் உண்மைதான். என்னுடைய முடிவு இதுதான். எல்லோருக்கும் பிற்பகலிலோ, மாலையிலோ இரண்டு மணி நேர அவகாசம் கிடைக்கும். அதை இன்றியமையாத பொழுதுபோக்காக வைத்துக்கொள்ளவேணுமென்பதே என் தாழ்மையான அபிப்ராயம். சாதாரணமாக அரைரூபாயோ, கால் ரூபாயோதான் கொடுத்து அங்கத்தினராகிறோம். அதில் எவ்வளவு பலன் அடைகிறோம். பத்து பெண்கள் ஒன்றாய் கூடிப்பேசுவதில் அறிவு விசாலமடைகிறது. பிறருடன் மனம் விட்டு அன்புடன் பழக அறிகிறோம். எல்லோரையும் சகோதரிகளாக நினைக்க ஆரம்பிக்கிறோம். சாதாரணமாகப் பெண்கள் வம்பு பேசாமல் பொழுதுபோக்கும் வழியை அறிகிறோம். குறைந்த செலவில் தையல், ஹிந்தி, சங்கீதம் முதலியவைகளைக் கற்றுக்கொள்ளுகிறோம்.

நம் ஆயுள் காலத்தில் படித்தறிந்துகொள்ளமுடியாத விஷயங்களை சிறந்த அறிவாளிகளின் உபந்யாஸங்கள்வைத்து அறிகிறோம். மொத்தமாக அநேக பத்திரிகைகள் வரவழைத்துப் படிப்பதில் உலக விஷயங்களை அறிந்துகொள்கிறோம். மனதிற்கு மாறுதல் சந்தோஷம். இப்படி சத்சங்கம், சத்சகவாசம் நாளடைவில் உயர்ந்த சமுதாயத்தை கொண்டு வருகிறது. அவப்பொழுதில், தவப்பொழுதென்று கொஞ்சம் வசதியாக வாழும் சகோதரிகள், ஏழ்மையிலும் விபத்திலும், அகதிகளாகவும் வந்து தவிக்கும் சகோதரிகளுக்கு உதவிசெய்து மனத்தூய்மை அடைகிறோம்.

இப்படி எண்ணிலா நன்மைகள் உண்டாகும். சங்கங்கள் நிறைவுத்தான் இருக்கட்டுமே, மாதர்களுக்கும், குழந்தைகளுக்கும் உதவிசெய்வதில் ஸ்தாபனம் ஈடுபடுகிறது.''

''கலா! மாதர்கள் சங்கத்தின் அவச்யத்தைப் பற்றி ஒரு பிரசங்க மாரி பொழிந்துவிட்டாய். நான் சொல்வதைக் கேள். சகோதரிகள் ஒற்றுமை என்றெல்லாம் சொன்னாயே! கல்யாணி, எல்லோரும் சேர்ந்து ஒரு சங்கம் ஏற்படுத்தினார்களே! அதில் பிரமாத சண்டை. அவளும் குந்தலமும் பேச்சுவார்த்தையின்றி, இவள் கக்ஷி, அவன் கக்ஷி என்று பிரிவினையாம்! கல்யாணி குந்தலத்தை மதிக்கவே இல்லையாம். தானே பேசி, பாடி பெருமை அடையப்பார்த்தாளாம். இவளை வான்னு அழைப்பதில்லையாம். தினமே தள்ளாத ஒரு அத்தைப்பாட்டியை வீட்டில் வேலை செய்ய வைத்துவிட்டு கல்யாணி கிளம்பிவிடுவாளாம். எல்லாம் சங்கம் படுத்துகிற பாடு. எனக்கு பொழுதே கிடையாது; நான் வரவில்லையம்மா''

''பர்வதம்! சுமார் ஒருமணி நேரமாக சாவித்திரி மாமி ஆத்தில் வந்து பேசுகிறாயே! இப்படி எவ்வளவு நாள் வந்து அரட்டை அடிக்கிறாய்? அதை ஒழுங்கான முறையாக ஓரிடத்தில் கூடிப்பேசினால் அது தவறா?''

''சங்கமெல்லாம் வம்பர் மகாசபைதான். அங்கும் பேச்சுதானே. நியதிவைத்து வருவது கஷ்டம். சாவித்திரி மாமி ஆத்துக்கு என்றைக்கோ வருகிறேன்.''

''வம்பு என்று எதற்கு பெயர் தெரியுமோ? ஒருவரைப் பற்றி தூஷித்தோ, நிந்தித்தோ பேசுவதும் இல்லாததைச் சொல்லித் திரிவதும்தான். பொது விஷயங்களையோ, ஒருவருக்கொருவர் நன்மை தீமைகளையோ உள்ளபடி பேசுவது வம்பாகாது; ஒருசகோதரி ஒரு விஷயத்தை அறிந்தவளானால் மற்றவர்கள்கேட்டுத் தெரிந்து கொள்வது வம்பில்லை.

'இரண்டாவது, நெல் உள்ள இடத்தில் புல்லும் உண்டு. புல்லைக் களைவதுதான் நெல்லுக்கு பலம். குந்தலாவும், கல்யாணியும் சண்டை போட்டுவிட்டால் அதனால் சங்கமே குருக்ஷேத்திரமா? சங்கத்தின் அர்த்தமே அன்பினால் பரஸ்பர ஒற்றுமைதான். அதை சம்பந்தி அகமென நினைத்து ஒருவருக்கொருவர் உபசாரத்தை எதிர்பார்ப்பது முட்டாள்தனம். இந்தக் காலத்தில் சம்பந்திகள்கூட சகஜமாக இருக்கிறார்கள். எல்லோருக்கும் பொது ஸ்தலம். தவிரவும், போட்டியும் பொருமையும் நசுக்கிவிட்டால்தான் சங்கம் ஓங்கித் தழைக்கும். அறிவுள்ள சகோதரி சண்டையை வளர்த்து ஜலம் பாய்ச்சமாட்டாள். குற்றம்பார்க்க சுற்றமில்லை என்பது பெரியோர்களின் வாக்கு. தற்காலத்துக்கு ஏற்க தப்பு பார்க்க நட்பு இல்லை என்று சொல்வேன். குற்றங் குறைகள் சொல்வதை காதில் வாங்காமல் பெருந்தன்மையாக நடந்தால் சொல்பவர்களே கூடிய சீக்கிரம் உணர்வார்கள். பகைமையைத் தடிக்கவிடக்கூடாது. இவைகளே சிறந்த சமூக சேவை.''

''ஆமாம், புராதன காலத்தில் எந்த சங்கம் ஏற்படுத்தினார்கள்? எங்கெல்லாம் போனார்கள்? இந்தக் காலத்தில் ஒருவரைப் பார்த்து ஒருவர் இப்படி ஆரம்பிக்கிறார்கள்!'' என்றாள் பர்வதம்.

''ஏன் இல்லை? மார்கழி முப்பதுநாளும் நம் நகரமே ஆயர்பாடியாக இருந்ததே. எவ்வளவு மகான்கள் திருப்பாவையின் பொருளை வியாக்கியானம் செய்தார்கள். அதிலிருந்து நாம் அறியவேண்டியதென்ன? ஆண்டாள் தானாக நோன்பு நோற்கவில்லை. மழை பெய்யவும், நாடு செழிக்கவும், கண்ணனை அடையவும் தன்னுடைய தோழிமார்களெல்லோரையும் அழைத்துக் கொண்டுதானே நீராடச் சென்றாள். தூங்குகிறவர்களை எழுப்பி அல்லவா சங்கம் நடத்தினாள். அது மாதர் சங்கமல்லவா? இன்னும் வேத காலத்

தானியங்களின் மகா நாடு

வை. மு. கோ.

கடுகு வெகுஉத்ஸாகத்துடன் உருண்டுஓடிவந்து "நேசர்களே! நம்முடைய மகா நாட்டிற்கு ஸ்ரீமான் மிளகாய் அவர்களைத்தான் தலைமைவகிக்க ப்ரேரேபிக்கின்றேன். ஏனெனில் உணவுப்பொருள், தானியவகைகள் முதலியவைகளில் காய்கறிகள் நீங்கலாக உள்ள மற்ற சகல பொருள்களிலும் மிகச் சிறந்த காரஸாரமான வீரரும், உருவத்திலும் பெரியவரானவரும் மிளகாய்தான். ஆகையால் நாம் இன்று வெகு குதூகலமாகக் கொண்டாடவிருக்கும் பரிபூர்ண சுதந்திரக் குடியரசு நாட்டு விழாவுக்கு இவர்தான் தலைமை வகிக்கத் தகுந்தவர் என்பதை என்னைப்போல் நீங்களும் ஆமோதிப்பீர்கள் என்று நினைக்கிறேன்" என்று படபடவென்று வெடித்துப் பொரித்துக் கொட்டிப் பேசியது. உடனே சகலமான பொருள் பெரியார்களும் கைகொட்டி ஆரவாரம் செய்தார்கள்.

அதேசமயம் சுண்டைக்காய் பெரியார் சடக்கென்று எழுந்து "சபையோர்களே! ஸ்ரீமான் கடுகு சொல்லியது மிகவும் பொருத்தமானதுதான்; என்றாலும் நான் சொல்லப்போவதையும் செவிசாய்த்துக் கேட்கவேண்டும். இக்காலமோ! கறுப்பு மார்க்கெட்டுக்குள் புதைந்து கிடக்கும் விபரீத காலம். சாதாரணமாய் அடிக்கடி கண்ணியமும் கவுரவமும் முன்பெல்லாம் கொடுத்துவந்த பொருள்களுக்கு இக்காலத்தில் கண்ணியமே இல்லை. ஏதோ உடம்பு அஜீர்ணம், பித்தம், வாய்வு, த்வாதசி எனகிற முறையில் என்னைத தவறாது குழம்பிலும், பொடியிலும், வருவல், வத்தல், பச்சை உருவத்தில் மசியல், ஊறுகாய் முதலியவைகளில் உபயோகித்து வந்தார்கள். காலக் கொடுமையில மருந்துவகைகளில் என்னைச் சிந்துவாரே கிடையாது. நவநாகரீக வேகத்தில் ஏகாதசியாவது த்வாதசியாவது எங்கோ நூற்றுக்கொருவர் வீட்டில் நான் விளையாடுகிறேன். இப்படிப்பட்ட பெரிய மகாநாடுகளுக்குத் தலைமை வகிககிறவர்கள் கண்ணியமும் பெருமையும் புகழும கூடி மதிப்பில் உயர்ந்தவர்களாக இருக்கவேண்டுமேயன்றி காரத்தை மட்டும்கொண்ட மிளகாய்ப்பெரியாரை நியமிப்பது சரியில்லை. நமக்குள் தற்சமயம் மிகமிக உச்சஸ்தானத்தில்இருப்பவர்ஸ்ரீமான்மிளகு ஆழ்வாரேயாகும். அவர் உருவத்தில் சிறியவரானாலும்'மூர்த்தி சிறிது கீர்த்திபெரிது' என்பதுபோல் 19 ரூபாய் விலை மதிககும அபூர்வ

திலும், சங்க காலத்திலும் பெண்களின் நிலை எவ்வளவு உயர்தரமாக இருந்திருக்கிறது! வேத வேதாந்த சாரங்களையெல்லாம் அறிந்து தர்க்கித்துப் பேசி உன்னத நிலையில் இருந்திருக்கிறார்கள்."

"நாம கறற நன்மைகளைப பிறருக்குக் கற்பித்து பிறரிடமுள்ள பண்பை நாமறிய சிறந்த சாதனம் சங்கம்தான்."

"சரி, கலா! நீ சொல்வதைப்பார்த்தால் எங்களுக்கு அங்கத்தினராகச் சேர ஆவலாக இருக்கிறது. சேருகிறோம்" என்றாள் கமலா.

"என்று திறப்புவிழா கலா?"

"குடியரசு தினத்தறகுப் பிறகு ஒரு வாரத்திற்குள்தான். அவசியமாக வாருங்கள்."

"தை வெள்ளிக்கிழமை; தாம்பூலம் பெற்றுக்கொண்டு போகலாம்" என்றாள சௌந்தரி மாமி.

உச்சஸ்தானத்தை அடைந்திருப்பதால் இந்தமிளகாழ்வாருக்குஎதிரில் பாதங்கொட்டைமுந்திரிப்பருப்பு சீனாகல்கண்டு முதலிய பதார்த்தங்களும் தாழ்ந்து தோற்றுவிட்டன என்றால் மிளகாழ்வாரின் பெருமையை நீங்களே சீர்தூக்கிப் பாருங்கள். தங்கம், வெள்ளி முதலிய உயர்ந்த பொருள்களுக்குள்ள மதிப்பல்லவா நம் சமூகத்திற்குள் அந்த மிளகாழ்வாருக்கு ஏற்பட்டிருக்கிறது! ஆகையால் தலைமை வகிக்க அவர்தான் லாயக்குடையவர் என்று நான் சிபார்சு அழுத்தமாகச் செய்கிறேன்" என்று கர்ஜனை செய்தது.

அங்கு ஏற்பட்ட கரகோஷம் வானை அளாவியது. எனினும், முந்திரிப்பருப்பு சற்று சீற்றத்துடன் எழுந்தது. "சபையோர்காள்! என் விண்ணப்பத்தை அங்கீகரிக்கவேண்டும். உயர உயரப் பறந்தாலும் ஊர்க்குருவி கருடனாக முடியாது. தற்காலமோ கள்ளமார்க்கெட்டுக்காலம்; யுத்தத்திற்கு முன்பு பரம தரித்திரமாக இருந்த எத்தனையோ பேர்கள் யுத்த சமயத்திலும் சரி, அதற்குப் பிறகும் சரி பெரிய கோடீச்வரர்களாகி தடபுடல் படுவதை நாம் பார்க்கவில்லையா! அவர்களுடைய புதுப்பணத்தினால் எத்தனையோ புதிய வாழ்வில் திளைத்தும் சிலர் ஒரு சிறிது நல்லவழியில் பணத்தைச் சில வழித்தும் பலபல மாதிரி வாழ்வதை நாம் பார்க்கிறோம். என்றும் ஒரே சீரான தர்மவான்களையும் செல்வவான்களையும்கூட நாம் பார்க்கிறோம். அவர்களுடைய பெருமை ஒரே நிறையில் உலாவுகிறது. உலகமும் அவர்களைத்தான் கொண்டாடுகிறது. அதுபோல் நம்முடைய இனத்திற்குள் கற்கண்டுப்பெரியாரை எடுத்துக்கொண்டு பாருங்கள். அவர் என்றும் ஒரே சீரான இனிப்பும் சுபாவங்களுக்கு ப்ரதானமான பிருதும் பெற்றவர். எந்த ஏழையின் குடிசை முதல் பெரிய அரசாங்கம் வரையில் குழந்தை பிறந்தது என்றால் முதலில் கல்கண்டுதான் வழங்கி ப்ரஜாஉத்பத்தியின் பெருமையை விளக்குகிறார்கள். அதேபோல் கல்யாணங்களில் முதலில் கற்கண்டும் சர்க்கரையுந்தான் ப்ரதானமாய் ஜம் ஜம் என்று பந்தலில் ப்ரகாசித்து ஊர்வலத்திலும் தாண்டவமாடுகிறது. எந்த ஒரு இனிய சங்கீதம், மழலைமொழி முதலிய உயர்ந்த விஷயங்களிலும் 'கற்கண்டாயினிக்கிறது' என்கிறார்கள். என்கண்ணே! முத்தே, கற்கண்டே. கனியே...என்று பகவானைக்கூட பக்தர்கள் தோத்திரம் செய்வதோடு தம் தம் குழந்தைகளையும் சீராட்டுகிறார்கள். எந்த விதத்தில் பார்த்தாலும் கற்கண்டுதான் உயர்ந்த பொருளும், புகழும், பெருமையும் படைத்தவராகும். தலைமைவகிப்பவர் இனிய பொருளாக இருக்கவேண்டுமேயன்றி காரமும் கசப்பும் உதவாது. ஆகையால் கற்கண்டுப்பெரியாரையே நான் சிபார்சுசெய்கிறேன்" என்றது. கரகோஷம் மறுபடியும் வானையும்பிளந்தது எனலாம். உடனே பாதாம்கொட்டை, சர்க்கரை, அக்ரோட் முதலிய பெரியார்கள், இதையே ஆமோதித்துத் தொடர்ந்து பேசினார்கள். வாஸ்தவம், மிளகு விலையில் உயர்ந்துவிட்டால்மட்டும் போதுமா என்ன? கற்கண்டுதான் சரியான தலைவர்" என்று சபையில் கோஷம் கிளம்பியது. இன்னொரு மூலையில் நெல்லுப்பெரியார் மொச்சைக்கொட்டையைப்பார்த்து. "ஸ்வாமிகளே! ....(தொடரும்)

அபூர்வ ராமாயணம்.

ஸ்ரீ காஞ்சி ப்ரதிவாதி பயங்கரம்
அண்ணங்கராசாரியர்.

(சென்ற இதழ் தொடர்ச்சி)

3. க: தர்மஜ்ஞ: ?

3. இனி "க: தர்மஜ்ஞ:?" என்கிற மூன்றாவது வினாவை விவரிப்போம். தர்மஜ்ஞ: என்பதற்கு—தருமமறிந்தவர் என்று பொருள். ஆண்டாள், நாச்சியார் திருமொழியில்,(14-6.) "தருமமறியாக் குறும்பனை" என்று கண்ணபிரானைத் தருமமறியாதவனென்றாள். அவ்வியல்புக்கு நேர்மாறாகத் தருமமறிந்தவனெனப்படுகிறான் இராமபிரான். தருமமாவது என்ன என்று ஆராய்வோம். சாஸ்த்ரங்களில் பலவகைத் தருமங்கள் சொல்லப்பட்டிருந்தாலும் இராமன் அறிந்ததாகச் சொல்லும் தருமம் எதுவாயிருக்கக்கூடுமென்று பார்க்கவேணும். ஸுந்தரகாண்டத்தில் (38-41.) *ஆந்ருசம்ஸ்யம் பரோ தர்ம: த்வத்த ஏவ மயா ச்ருத:* என்பது பிராட்டியின் வார்த்தையாகக் காண்கிறது. ஆந்ருசம்ஸ்யமாவது இரக்கம்; அதுதான் பரம தர்மமென்று இராமனுடைய கொள்கையாம். ஆகவே இரக்கமறிந்தவன் என்று பொருள் கொள்ளலாம். இரக்கமுடையவன் என்றபடி. வேதாந்த தேசிகர் தசாவதார ஸ்தோத்ரத்தில் ஒவ்வோரவதாரத்திற்கும் தனித்தனியே ஒவ்வொரு ச்லோகமிட்டு, முடிவில் பத்து அவதாரங்களையும் சேர்த்து ஒரே ச்லோகத்தில் சொல்லும்போது [இச்சாமீந! விஹார கச்சப! என்னும் ச்லோகத்தில்] ஒவ்வோரவதாரத்தையும் ஒவ்வொரு விசேஷணமிட்டுச் சொல்லிவருகையில் ஸ்ரீராமாவதார ப்ரஸ்தாவத்தில் "கருணாகாகுத்ஸ்த!" என்று கூறியிருப்பதனால் இராமன் கருணையே வடிவெடுத்தவனென்று சொல்லத் தகுதியுடையவன். கருணையாவது என்ன என்பதையும், பெருமானிடத்தில் காணும் கருணை எப்படிப்பட்டது என்பதையும் இங்கே விவரிக்க ப்ராப்தமாகிறது. அமரகோசத்தில் (1-7-18) "காருண்யம் கருணா க்ருணா, க்ருபா தயா அநுகம்பா ஸ்யாத் அநுக்ரோச: அபி" என்று ஏழுபதங்கள் பர்யாய நாமங்களாகப் படிக்கப்பட்டிருக்கின்றன. இவற்றுள், அநுகம்பா, அநுக்ரோச: என்னும் பதங்களும் பர்யாயமாகச் சேர்ந்திருக்கின்றபடியால அப்பதங்களின் பொருளேதான் கருணையின் பொருளுமாகக் கூடியது. துக்கத்தினால் நடுங்குபவனைக் கண்டு தானும் நடுங்குகை அநுகம்பா; துக்கத்தினால் அழுகிறவனைக் கண்டு தானும் அழுகை அநுக்ரோசம் என்பது உலகில் அனைவருமிசையவேண்டிய பொருளாகும். இதுதான் கருணையெனப்படும். ஆகவே, பிறர்படும் துயரைக் கண்டு தானும்

ஐயோவென்று துயருற்றிருக்கை கருணை, அதை நன்கறிந்து அப்படியே வர்த்திப்பவன் இராகவன் என்றதாயிற்று. இக்குணம் ஸ்ரீ ராமாயணத்தில் பலவிடங்களில் காணப்படுமாயினும் சிலவிடங்களை இங்கெடுத்துரைத்து அநுபவிப்போம்.

தசரதமன்னவன் இராமனுடைய திருக்குணங்களையும், அவனுக்கு ஜனங்களிடத்திலும் ஜனங்களுக்கு அவனிடத்திலும் அமைந்துள்ள அளவுகடந்த அன்பையும் நோக்கி அவனை இளவரசாக முடிசூட்டி அரசாட்சிச் செல்வத்தை அவனிடத்தில் ஒப்புவித்துத் தான் இளைப்பாறவேண்டுமென்று விருப்பங்கொண்டு மந்திரிகளோடுங்கலந்து ஆலோசித்துத் தனது கருத்தைத் திடப்படுத்திக்கொண்டு விரைவாகவே அதனைச் செய்துமுடிக்கக் கருதி அந்நாட்டிலுள்ள மன்னவர்களையும் மஹாஜனங்களையுமெல்லாம் வரவழைத்துப் பெருஞ்சபை கூட்டி அவர்களுக்குத் தன் கருத்தை வெளியிட்டனன்; அப்போது அவர்கள் யாவரும் அளவற்ற ஆனந்தமடைந்து "கிழவரே! நீர் ஒழிந்துபோம், இராமனுக்கே முடி சூட்டுவீராக" என்று மிகப் பெரிய கோஷமாகக் கூறினர்; தன் விருப்பத்தை அனைவரும் ஆமோதித்ததுபற்றி உள்ளம் பூரித்த தசரதன், இராமனிடத்தில் ஸகல ஜனங்களுக்கும் இங்ஙனம் அன்பு நிறைந்திருக்குங் காரணத்தைத் தான் அறிந்திருந்தும், அவர்கள் வாயிலாகவே அதை இனிதாகத் தெரிந்துகொள்ள விரும்பி அவர்களை நோக்கி "ஓ மன்னவர்களே! மஹா ஜனங்களே! என் மனத்தில் தோன்றிய விருப்பத்தை நானே சுதந்திரனாய்ச் செய்துமுடித்துக்கொள்ள வல்லேனாயிருந்தும் உங்கள் கருத்தையும் அநுஸரித்து நடந்துகொள்ளவேண்டுமென்றெண்ணி உங்களையும் வரவழைத்துக் கேட்டேன்; கேட்டவுடனேயே நீங்கள் 'கிழவா! ஒழிந்துபோ, கிழவா! ஒழிந்துபோ; இராமனுக்கே முடி சூட்டவேணும்' என்று பேரிரைச்சல் செய்து கூறுவதை நோக்குங்கால், என்னரசாட்சியில் நீங்கள் யாவரும் மிகக் கஷ்டமடைந்திருந்தீர்கள் போலவும் அந்தக் கஷ்டத்தை எப்போது தவிர்த்துக் கொள்ளப்போகிறோமென்று சமயம் பார்த்திருந்தீர்கள் போலவும் நினைக்கவேண்டியதாகின்றதே; 'சக்ரவர்த்தியாகிய நீர் உம்முடைய இஷ்டப்படி செய்துகொள்ளலாம், எங்களைக் கேட்கவேணுமோ?' என்று மரியாதையாக வார்த்தை சொல்லியிருக்கலாமே; அப்படிச் சொல்லாமல் என்பால் மிகவும் வெறுப்புத் தோற்றச் சொன்னீர்களே, இதற்கு என்ன காரணம்" கூறுமின்" என்றனன்.

அதற்கு அனைவரும் 'மன்னர்பிரானே! உன்மீது நாங்கள் யாதொரு குற்றமும் நினைத்திலோம்; நீ பெற்ற புதல்வன் எல்லையில்லாத நற்குணங்கள் அமையப்பெற்றவனாதலின் அவனது திருக்குணங்களில் ஈடுபட்ட நாங்கள் அவனை அரசனாகப்பெற்று அவன் கீழ்க் குடிவாழ விரும்பினோம்; அவனது திருக்குணங்களைக் கேட்க விரும்புவாயாயின் சொல்லுகின்றோம், கேட்டருள் கோமானே!" என்று பீடிகையிட்டு இராமனது திருக்குணங்கள் பலவற்றையும் சொல்லிவருமடைவில் (அயோ. 2—40.)

"வ்யஸநேஷு மநுஷ்யாணாம் ப்ருசம் பவதி து:க்கித:,
உத்ஸவேஷு ச ஸர்வேஷு பிதேவ பரிதுஷ்யதி."

என்றார்கள்.

பிறர் துயருறக் கண்டால் தான் அபரிமிதமாகத் துயருறு பவன்; பிறர்க்கொரு மகிழ்ச்சியுண்டானால் தான் மிகமகிழ்பவன்— என்பது மேலே குறித்த ச்லோகத்தின் பொருள். பிறருடைய மகிழ்ச்சியில் மகிழ்பவன் என்பது இருக்கட்டும். 'பிறர் துயருறக் கண்டால் தான் அபரிமிதமாகத் துயருறுபவன்' என்றார்களே—இது தான் தயாளுவான புருஷனின் மிகச் சிறந்த தன்மை. இங்கு இராமனது திருக்குணங்களைக் கூறத்தொடங்கியபோது (ச்லோ. 26.)

"பஹவோ ந்ருப! கல்யாணகுணா: புத்ரஸ்ய ஸந்தி தே"

என்று கலியாண குணங்களைச் சொல்லுவதாக மகுடமிட்டுச் சொல்லி வருகையில் அக்குணங்களினிடையே பரது:க்கது:க்கித்வ மாகிற இக்குணத்தைக் கூறியிருக்கையாலே இது மிகச் சிறந்த நற்குணமேயொழியத் தீயகுணமன்றென்பது வெளிப்படை.

ஆனால் சிலர், துக்கப்படுகையென்பது எவ்விதத்திலும் தீய குணமேயன்றோ வென்று கலங்கி ஆக்ஷேபங்கள் செய்வதுண்டு. ஸஹஸ்ரநாமத்தில் "விகர்த்தா" என்கிற திருநாமத்திற்கு பாஷ்யம் அருளிச்செய்யாநின்ற பட்டர் இவர்களது கலக்கம் நீங்க ஆக்ஷேப பரிஹாரம் செவ்வனே செய்தருளியிருப்பதால், இங்கு விரிவு வேண்டா.

அகில ஹேய ப்ரத்யநீக கல்யாண குணநிதியான எம்பெருமானைத் துக்கப்படுபவனாகச் சொல்லவே கூடாதென்றும், துக்கப் படுவதென்பது ஹேய குணமேயாகுமென்றும் நினைப்பவர்களைச் சுருக்கமாகத் தெளிவிக்கிறோமிங்கு. துக்கப்படுவதென்பது இரண்டுவிதம்; ஸ்வார்த்தமென்றும் பரார்த்தமென்றும். தனக் கொரு கஷ்டம் நேர்ந்ததென்று துக்கப்படுவதானது ஸ்வார்த்த துக்கமெனப்படும். பிறர்க்கு நேர்ந்த கஷ்டத்தைப்பற்றி துக்கப் படுவதானது பரார்த்த துக்கமெனப்படும் முந்தின துக்கத்தை ஹேயகுணமாக நினைக்க நியாயமுண்டு. பிந்தின துக்கத்தை [அதாவது பரார்த்த துக்கத்தை] ஹேயகுணமாக நினைத்தல் மிகப் பிசகு. குணங்களில் தலையானது இதுவேயாகும்.

உலகத்தில் ஒருவன் துக்கப்படும்போது அந்தத் துக்கத்தைக் கண்டுகொண்டிராநின்ற மற்றொருவன் தானும் துக்கப்படாமல் வாளாகிடந்தால் அவனைக் கல்நெஞ்சனென்றும் ஈரநெஞ்சு இளநெஞ்சு இல்லாதவனென்றும் வசை கூறுகிறோம். பிறர் துக்கிப் பதைக்கண்டு பரவசமாக ஒருவன் துக்கிப்பனாகில் அவனை ஈர நெஞ்சனென்றும் இரக்கமுள்ளவனென்றும் பரம தயாளுவென்றும் சொல்லிப் புகழ்கிறோம். இவை இன்றாக ஒருவராலும் அபலாபம் செய்யவொண்ணாதவை. ஆகவே கருணையின் பொருளான பரதுக்க துக்கித்வமென்பது மிகச் சிறந்த குணங்களில் முதன்மை யாகக் கணக்கிடக்கூடியதேயன்றித் தீயகுணமாக ஒருவராலுங்

கூறவொண்ணாது. எம்பெருமாளிடத்தில் இக்குணமொன்றை மறந்து மற்றும் பலபல குணங்களை யிசைத்தாலும் பயனில்லை.

ஆனால் இங்கு ஒன்று சொல்லலாம்; பிறர்படும் துயரத்தைப் பரிஹரிக்கக்கூடிய சக்தி நமக்கில்லாமையாலே நாம் பிறர் துயரைக் கண்டு துயருறுவது ஸஹஜம்; ப்ரணதார்த்திஹரனென்று பெயர் படைத்துப் பரிபூர்ண சக்தியுக்தனான எம்பெருமான் பிறருடைய துயரத்தைக் கண்டு தானும் துயருறக் காரணமேயில்லை யென்னலாம். இங்கே அவசியம் தெரிந்துகொள்ளவேண்டிய விஷயங்களைத் தெளிவாகத் தெரிவிக்கிறோம். பிறர்படும் துயரத்தைக் கண்டு துயருறுகை என்கிற வொரு தன்மையும், பிறர்படுந் துயரத்தை நீக்கத் தக்க சக்தியுடைமை என்கிற வொரு தன்மையும் ஒன்றோடொன்று முரண்பட்டவையென்று நினைக்கலாகாது; 'அசக்தனே துயருறுவன், சக்தன் துயருறமாட்டான்' என்று நினைப்பது மருள். தன் குழந்தைக்கு ஒரு துன்பம் நேர்ந்துவிட்டால் அதனை உடனே பரிஹரிக்கக்கூடிய சக்தி மாதாவுக்கு இருக்கச்செய்தேயும் அப்படியே அத்துன்பத்தை அவள் பரிஹரித்துவிடச்செய்தேயும் 'குழந்தைக்குத் துன்பம் நேராமல் காக்கவேண்டியது நமது கடமையாயிருந்தும் ஏமாந்து போனோமே; அந்தோ! அநியாயமாய்க் குழந்தையைத் துடிக்கவிட்டோமே!' என்று பலவாறாகக் கதறி வருந்தும்படியைக் காணாதாருண்டோ?

துச்சாஸனன் கையிலே த்ரௌபதி பரிபவப்பட்டுக் கூவின போது கண்ணபிரான் ஒருவாறு அவளது துயரைத் தீர்த்திருக்கச் செய்தேயும் 'ஐயோ! அவள் கூவினபோது நான் நேரில் சென்றிருந்து உதவா தொழிந்தேனே, ஐயோ அவளுக்குப் பரிபவம் நேர்ந்து அவள் கதறினபின்பு நான் காரியம் செய்தேனேயன்றி முதல்தன்னிலே பரிபவமே அவளுக்குண்டாகாதபடி ஜாகரூகனாயிராதுபோனேனே! அவளுக்கு நான் பெரிய கடனாளியாய்விட்டேனே, என் பிறப்பு என்னாயிற்று!' என்று, தன் காவற்சோர்வை நினைத்துத் திருவுள்ளம் வேவுண்டு வருந்தினபடி யுண்டே; "கோவிந்தேதி யதாக்ரந்தத் க்ருஷ்ணா மாம் தூரவாஸிநம், ருணம் ப்ரவ்ருத்தமிவ மே ஹ்ருதயாத் நாபஸர்ப்பதி." என்பதன்றோ கண்ணபிரானுடைய திருவாசகம்.

மடுவின் கரையிலே முதலைதன்னா லடர்ப்புண்ட ஸ்ரீகஜேந்திராழ்வானுடைய இடரை எம்பெருமான் தீர்த்தருளினானேலும் அவன்றான் பட்ட பரிதாபம் பேச்சுக்கு நிலமன்றே. ஆழ்வானும் பட்டருமன்றோ அதையெடுத்துரைத்து உருகினவர்கள். 'கெட்டேன்! கெட்டேன்!!' என்று நொந்துகொண்டே எம்பெருமான் அரைகுலையத் தலைகுலைய ஓடிவந்தானென்கிறார்களே. இங்ஙனே பல்லாயிர மெடுத்துக்காட்டத்தக்கவை யுண்டு. இவற்றால் பரதுக்க துக்கித்வ ரூபமான எம்பெருமானது காருணிகத்வம் அசைக்கவொண்ணாதபடி தேறிநிற்கும். இதை ஸ்ரீராமாயணத்தில் அநுபவிக்கலாமிடம் காட்டுதும் காண்மின்;—பெருமாள் ஸுக்ரீவனுக்காக வாலியைக் கொன்றார்; வாலி மாண்டபின் ஸுக்ரீவன் மிக

வருந்தினான்; அவனது வருத்தத்தைக் கண்டு பெருமாள் ஆற்றகில்லாது தாமும் அபரிமிதமாக வருந்தியழுதாரென்பதைக் கூறுகின்ற வான்மீகி முனிவர் (கிஷ்கி- 24 - 24.)

"இத்யேவமார்த்தஸ்ய ரகுப்ரவீர:
ச்ருத்வா வசோ வால்யநுஜஸ்ய தஸ்ய
ஸஞ்ஜாதபாஷ்ப: பரவீரஹந்தா ராமோ
முஹூர்த்தம் விமநா பபூவ"

என்றார். இந்த ச்லோகத்தில் "ஸஞ்ஜாதபாஷ்பஃ" என்றதும் "முஹூர்த்தம் விமநா: பபூவ" என்றதும் கல்நெஞ்சையுமுருக்குஞ் சொற்கள். ஸுக்ரீவனுடைய அழுகை ஓய்ந்தும் இராமனுடைய அழுகை ஓயவில்லையென்கிறது 'ஸஞ்ஜாத பாஷ்பஃ' என்பது. சிலர் உள்ளே பசையில்லாமல் வெளியில்மாத்திரம் கண்ணீரைவிட்டு துக்காபிநயஞ்செய்வதுண்டு, அப்படியல்ல, மதியெல்லாம் உள்கலங்கி நின்றாரென்கிறது 'ராமோ முஹூர்த்தம் விமநா பபூவ' என்பது.

மேலே 25 ஆம் ஸர்க்கத்தின் முதல் ச்லோகம்— "ஸுக்ரீவஞ் சைவ தாராஞ்ச ஸாங்கதம் ஸஹலக்ஷ்மணஃ, ஸமாந சோகஃ காகுத்ஸ்தஃ ஸாந்த்வயந் இதமப்ரவீத்." என்பது. வாலியின் மரணத்தினால் தாரைக்கும் அங்கதனுக்கும் எவ்வளவு சோகமோ அவ்வளவு சோகம் பெருமாளுக்கு மிருந்ததென்கிறார் முனிவர் "ஸமாந சோகஃ காகுத்ஸ்தஃ" என்பதனால். அந்த ஸர்க்கத்தின் முடிவிலும் (52.) "ஸுக்ரீவேணைவ தீநேந தீநோ பூத்வா மஹாபலஃ, ஸமாநசோகஃ காகுத்ஸ்தஃ ப்ரேத கார்யாண்யகாரயத்." என்று அதையே மீண்டும் மொழிகின்றார்.

ஆக, "ஆந்ருசம்ஸ்யம் பரோ தர்மஃ" என்கிற ஸ்ரீ ராமாயண ப்ரமாணத்தின்படி 'தர்மஜ்ஞஃ' என்பதன் பொருள் விவரிக்கப்பட்டது. இனி, ஸீதா விவாஹகாலத்தில் ஜனக சக்ரவர்த்தி கூறிய "இயம் ஸீதா மம ஸுதா" என்கிற ச்லோகத்தில் 'ஸஹதர்மசரீ தவ' என்று சொன்னதின் கருத்திற்கு இணங்கவும் சில நிரூபணங்களைச் செய்வோம். நாமெல்லாரும் விவாஹம் செய்துகொள்ளும்போது "இமாம் கந்யாம் தர்மப்ரஜார்த்தம் வ்ருணீமஹே" என்று சொல்லி [அதாவது, இந்தப் பெண்ணை தர்மானுஷ்டானத்திற்காகவும் ஸந்தான விருத்திக்காகவும் பரிக்ரஹிப்பதாகச் சொல்லி]க் கைப்பற்றுகிறோம். நம்போல்வாருடைய தர்மானுஷ்டானம் ஏதுவென்னில், இல்லறம் எனப்படுகிற க்ருஹஸ்தாச்ரம தர்மானுஷ்டானமேயாகும். இவ்வாழ்க்கைத் துணைவியாக அமைகின்ற மனைவியோடுகூடி சாஸ்த்ரோக்தங்களான தருமங்களை க்ருஹஸ்தாச்ரமிகள் அனுட்டித்துவருவதுண்டு. இராமபிரானுக்கு ஸீதாபிராட்டியை ஜனகசக்ரவர்த்தி கன்யகாதானம் செய்யும்போது "இயம் ஸீதா தவ ஸஹதர்ம.சரீ" [இராமா! நீ அனுட்டிக்கும்தருமத்திற்குத் துணைவியாமவள் இந்த ஸீதை] என்று சொல்லிக் கொடுத்திருக்கிறார். இராமன் அனுட்டிக்கும் தருமம் எதுவென்று பார்க்கவேணும். பிராட்டி இராவணனுக்கு ஹிதோபதேசம் செய்யும்போது (ஸுந்தரகா 21—20.)

"விதிதஸ் ஸ ஹி தர்மஜ்ஞச் சரணாகத வத்ஸலஃ" என்று கூறுகின்ருள். பெருமாளை தர்மஜ்ஞரென்று சொல்லி உடனே அதை விவரிக்கிற வார்த்தையாக 'சரணாகத வத்ஸலஃ' என்றுரைத்தாள். இதனால், இராமபிரான் இவ்வவதாரத்தில் கைப்பற்றின தருமம் சரணாகத பரித்ராணமே [அதாவது அடைக்கலம் புகுந்தவர்களைக் காத்தருள்வதே] என்று தேறுகின்றது. வேதாந்த தேசிகனும் தசாவதார ஸ்தோத்ரத்தில் ராமாவதாரத்திற்கு இட்ட ச்லோகத்தில் "ஸர்வாவஸ்த ஸக்ருதப்ரபந்நஜநதா ஸம்ரக்ஷணைகவ்ரதீ தர்மோ விக்ரஹவாந்" என்று இந்த மருமத்தை வெளியிட்டுக்கொண்டேயருளிச் செய்தார். ப்ரபந்நஜந ஸம்ரக்ஷணமே பெருமாளுக்குப் பரமதர்மம். இத்தருமத்திற்குத் துணையாகவே பிராட்டி அமைந்தாள். ஆனது பற்றியே திருமந்த்ரார்த்தத்தில் பிள்ளைலோகாசாரியர் "ரக்ஷிக்கும்போது பிராட்டி ஸன்னிதி வேண்டுகையாலே இதிலே ஸ்ரீஸம்பந்தம் அநுஸந்தேயம்" என்றும் "இவள் ஸன்னிதியாலே காகம் தலைபெற்றது, அதில்லாமையாலே ராவணன் முடிந்தான்" என்றும் அருளிச் செய்துள்ளார். இது ஸ்ரீராமாயணத்தில் பலபலவிடங்களிலும் காணப்படுகிறது. கம்பராமாயணம் வாலிவதைப் படலத்தில் ஒரு செய்யுளினால் இது நன்கு மூதலிக்கப்படுகிறது.

> "கோவியல்தருமமுங்கள் குலத்துதித்தோர்கட்கெல்லாம்
> ஓவியத் தெழுதவொண்ணு வுருவத்தா யுடைமை யன்றே
> ஆவியைச் சனகன்பெற்ற வன்னத்தை அமிழ்தின்வந்த
> தேவியைப் பிரிந்தபின்னைத் திகைத்தனை போலுஞ் செய்கை."

இச்செய்யுள் இன்சுவையே வடிவெடுத்தது. பிராட்டி அருகேயில்லாமையினால்தான் இராமன் வாலிவதஞ்செய்ய நேர்ந்ததென்கிற தத்துவம் இங்கு வெளியாகின்றது. (தொடரும்.)

"பெண்களுக்குச் சொத்துரிமை அவசியந்தானா ?"

ஸ்ரீமதி மல்லிகைசுந்தரம் துட்டியாபிள்ளை

"என்ன சரோ! நான் வந்ததைக்கூட அறியாமல், பேப்பரைக் கையில் பிடித்த வண்ணம் பலத்த யோஜனையில் ஆழ்ந்திருக்கிறாயே?" என்று கேட்டுக்கொண்டே, சரோவின் முகத்தை ஊடுருவிநோக்கியவாறு அவளருகில் அமர்ந்தாள் அவள் ஆப்த நேசி சுலோசனா.

சரோ ஒரு லேசான புன்னகையை முகத்தில் படரவிட்டாள்: "பெண்களுக்கு சொத்துரிமை அவசியந்தானா?" என்று யோஜித்துக் கொண்டிருந்தேன் சுலோ!"

"இதற்கு யோஜனை என்ன வந்தது சரோ? அவசியம், அவசியம், முக்காலும் அவசியம் என்பதுதான் எனது திடமான அபிப்ராயம்."

"எவ்வெவ்விதத்தில்? எப்படி சுலோ?"

"தகப்பனார் சொத்து, கணவன் சொத்து, இவ்விரண்டிலும்."

"சொத்து எதற்கு சுலோ? பெண் பிறந்தது முதல் கட்டையை காஷ்டத்தில் வைத்து எரிப்பது வரை, அவர்கள் பொறுப்பை ஏற்றுக் கொண்டு நடத்த, அவ்வப்போது புருஷப் பிரகிருதிகள், தந்தையாகவும், கணவனாகவும், பிள்ளையாகவும், பேரன், கொள்ளுப்பேரன்களாகவும், இந்த ரீதியில் ஏற்பட்டுக்கொண்டேவருகிறார்களே! அப்படியிருக்க பின் பெண்ணுக்கு தனியாக சொத்து ஒன்று எதற்கு என்பதுதான் எனக்கு விளங்காத பிரச்னையாக இருக்கிறது."

"'விளங்காத பிரச்னை' என்று நீ சொல்வது தான் எனக்குப் புரியாத புதிராக இருக்கிறது. பெண்ணுக்குமட்டும் ஆணைப்போல பொருளாதார சுதந்திரம் வேண்டாமா? முதலில் பெற்றவன் கையையும், நடுவாந்தரத்தில் கணவன் கையையும் வயோதிகத்தில் பிள்ளை கையையும், எதிர்பார்த்து அவர்கள் காலமெல்லாம் அபலைகளாகத்தான் இருக்கவேண்டுமா?"

நீ சொல்வதை அப்படியே ஒத்துக்கொள்ள எனக்கு சிரமமாகத் தானிருக்கிறது சுலோ! "அப்படி அபலைகளாக வாழ்வதில்தானே பெண் பேரின்பத்தைச் சுவைக்கிறாள்" என்றுகூடத் துணிந்துசொல்ல என் மனோபாவம் இடம் கொடுக்கிறது."

"நீ ஒரு பத்தாம் பசலி. தவறிப் பிறந்ததுவிட்டாய் இவ்விருபதாம் நூற்றாண்டில். "பெண்ணுக்கு சொத்துரிமை இல்லாதது ஒரு பெரிய அநீதி' என்று நான் ஆயிரம் பேர்கொண்ட அவையில்கூட அடித்துச் சொல்வேன். தகப்பனார் சொத்திலும் சரி, கணவன்சொத்திலும் சரி, பெண்ணுக்குச் சமபங்கு, சம உரிமை வேண்டும். ஆணைப்பெற்றவர்கள்தான் பெண்ணையும் பெறுகிறார்கள். கண்கள் இரண்டும் சமம். அதுபோல புத்திர வாத்ஸல்யம் என்பதும் பிள்ளையாயிருந்தாலும், பெண்ணாயிருந்தாலும் ஒன்றுபோல்தானே இருக்கும். அப்படியிருக்க, அன்பில் மாத்திரம் வேறுபாடு இல்லாதபோது, ஆஸ்தியில் மட்டும் பாரபட்சமேன்? பெண்களுக்கு நகை நட்டு சீர் வரிசை என்று ஏராளப்பட்டசெலவு செய்கிறார்களே!— என்று

கேட்கலாம். நான் கேட்கிறேன், பிள்ளைகளுக்குமட்டும் சிலவு செய்ய வில்லையா! அப்படியே பெண்ணின் சிலவு கூடிப்போயிருப்பின் அவளுக்குச் சேரவேண்டிய பாகத்தில் கழித்துக்கொண்டால் போகிறது!"

"நீ தர்க்க ரீதியாகப் பேசுகிறாய் சுலோ! தொன்றுதொட்டு சமூக பழக்கவழக்கங்களில் ஊறிக்கிடக்கும் சம்பிரதாயங்களை, எளிதாக 'பூ' என்று ஊதித்தள்ளிவிட முடியாது. நமது குடும்பங்களில், பெண்ணுக்கு— சகோதரிக்கு ஒரு தனித்த உயர்ந்த ஸ்தானம் இருக்கிறதே. நாம் இல்லாமல் குடும்பத்தில் எந்த விதமான சுபச்சடங்குகளும், நிகழ்ச்சிகளும் நிறைவேறு வதில்லையே. மேலும் நமக்கு குடும்பத்தில் எந்த விசேஷங்கள் நடந்தாலும், பண்டிகைகளிலும், அந்தஸ்துக்கேற்ப பிறந்தகத்திலிருந்து, தனித்த வெகுமதி வருமானம் கிடைக்கிறது. நகை நட்டு, பாத்திரம் பண்டம், புடவை துணிமணி இத்யாதி. மேலும் நமது குடும்பங்களில் சகோதரர் களுக்குள் 'காய்ச்சல், இருப்பினும், சகோதர சகோதரிகளிடையே, அன் பும, பட்சமும், ஒற்றுமையும் நிலவுவது கண்கூடு. இதனாலெல்லாம் பிறந் தகத்தின் தொடர்பும் பாசமும் அறுந்துபோகாமல், பாரம்பரியமாகத் தொடர்ந்து இருந்துகொண்டே வருகிறது. 'பெண்ணுக்கு சொத்துரிமை' என்று ஏற்பட்டு, அது அநுஷ்டானத்திற்கு வர ஆரம்பித்தால் எத்தனை யோ குடும்பங்களுக்குள் பிளவும் சகோகர சகோதரிகளிடையேயும் பங்காளிக்காய்ச்சல பரவி, சண்டை, பூசல், வியாஜ்யங்களுமாக தகராறு ஏற்படஹேதுவாகும்."

"நீ சொல்வதை நான் ஒருவிதத்தில் ஆமோதிக்கிறேன் சரோ! ஆயினும், 'சொத்துரிமையை, விட்டுக்கொடுக்கும் பிரச்னையே எழவில்லை. தேசம் முழுவதற்கும் சட்டம் ஒரே மாதிரியாக ஏற்பட்டு அது நடை முறையில் அமுலுக்கு வந்து சமூகத்திற்கு பழக்கமாகிவிட்டால், அப்புறம், வம்புதும்பு ஒன்றும் ஏற்படாது. நீ நினைப்பதுபோல, அன்பிற்கும், பாசத்திற்கும், ஆபத்து வந்துவிடாது. இப்பொழுது ஒரு குடும்பத்திலுள்ள சகோதரர்கள் பாகம் பிரித்துக்கொண்டுபோய்விடுகிறார்களே, அப்புறம் அவர்களுக்குள் ஒற்றுமையும், அன்பும் நிலவவில்லையா? அதுபோல இதுவும் ஒன்றாகிவிடும். முதலில் இப்படித்தான் ஒவ்வொரு சமூக சீர்திருத்தச் சட்டத்திற்கும, சிலர் எதிர்த்தும், குதர்க்கவாதம செய்தும், கூச்சல்போட்டு குழப்பம் செய்தனர். உதாரணமாக ஹரிஜன் ஆலயப்பிரவேசச்சட்டத்தை எத்தனை பேர் எதிர்த்து குழப்பம் செய்தார்கள். ஹிந்து சட்டத்தொகுப்பு மசோதாவின்மீது பார்லிமெண்டில் விவாதம் நடைபெற்றுக்கொண்டிருக் கும்போது வெளியில், 'மாரடிப்பு நாடகம்' நடைபெற்றதாக பத்திரிக்கை யில் படித்தோமே, அதுபோல் ஹரிஜன் ஆலயப் பிரவேசத்தின்போதும், சில க்ஷேத்திரங்களில் 'மிளகாய்' பொடி தூவி ஆர்ப்பாட்டம் நடத்தியதும், மதுரை மீனாட்சியம்மன் ஹரிஜன் ஆலயப்பிரவேசத்தினால், கோவிலி லிருந்தே வெளியேறி, யாரோ ஒரு சனாதனி வீட்டில்போய் குடியேறி யிருப்பதாகவும்கூட புரளி பண்ணவில்லையா? இப்பொழுது பார் எல்லாம் அடங்கிவிட்டது. ஜாதி இரண்டொழிய வேறில்லை என்ற மனோபாவம், காலத்திற்கேற்ப மக்களிடையே வளர்ந்துவருகிறது. அப்படித்தான் இதுவும் ஆரம்பத்தில் கொஞ்சம் சிரமசாத்தியமானதாக இருக்கும். சில வருஷங்களில் அல்லது ஓரிரு தலைமுறைகளில் அமைதியேற்பட்டு சுமுகமான நிலைக்கு வந்துவிடும்."

"அது சரி. கணவன் சொத்தில் பங்கு பெறும் உரிமையைப்பற்றி உன் அபிப்ராயம் என்ன சுலோ?"

"என் அபிப்ராயம் எப்போதுமே, தேங்காய் உடைத்தால் மூடி இரண்டுதான். எப்பொழுது ஒரு பெண்ணுக்கு, கணவனின் சுகம் துக்கம், இன்பம் துன்பம், வாழ்வு தாழ்வு இவைகளில் சம பங்கு பெற்று அது பலிக்க சம உரிமை உண்டோ, அப்பொழுது அவன் ஆஸ்தியில் மாத்திரம் பங்குபெற உரிமையில்லாதது ஏன்? வேணுமென்றால் மனைவி வேண்டாமென்றால் ஜீவனாம்சம். இது கொடுமையிலும் கொடுமை. அவசியம், அதிலும் சம உரிமை வேண்டியதுதான். மேலும் இது புருஷன் தவறான வழிகளில் செல்வதையும் தடைசெய்யும்."

"இதனாலெல்லாம் பெண்ணுக்குப் பொறுப்பு அதிகமாகிறதல்லவா?'

"ஆம் அந்த அதிகப் பொறுப்பை பெண் ஏற்றுத்தானாகவேண்டும். ஆனால், அம்மகத்தான பொறுப்பைபெண் துஷ்பிரயோகம் செய்யலாகாது. புனிதமாகப் போற்றவேண்டும். இந்த அதிகப்படியான உரிமை சுதந்திரத்தினால் பெண் குடும்பப் பொறுப்பைத் தட்டிக்கழித்துவிடுவாள் என்று கூட சிலர் நினைக்கலாம். அது சுத்தத் தவறு. பாரமும்கூட. நம் பெண்கள் சுதந்திரப் போராட்டத்திலும், மத இயக்கத்திலும் ராஜ்பத்திலும் ஈடுபட்டிருக்கும்போது—இருந்தபோதுகூட—அவர்கள் தம் பொறுப்பை உணரத் தவறினார்களில்லை. குடும்பப் பொறுப்போடு, சமூகப் பொறுப்பையும் பதிஸேவையோடு, தேசஸேவையும் ஏற்று திறம்பட நிர்வகித்து எந்நாட்டுப் பெண்களையும்விட, நம் இந்தியப் பெண்மணிகள், ஒரு உன்னத ஸ்தானத்தை வகித்து வந்துள்ளனர்—வருகின்றனர். குடும்பப் பொறுப்பை நிர்வகிக்கும் திறமைதானே, மற்ற, சமூக சீர்திருத்த ராஜீயப் பொறுப்புகளையும் திறமையுடன் நிர்வகிக்க அஸ்திவாரமாக அமைகிறது."

"வாஸ்தவம் சுலோ! சட்டம் வந்தாலும் வராவிட்டாலும், நம்மைப் போல இரண்டுங்கெட்டானாய், வாடகை வீட்டில் குடியிருந்துகொண்டு புருஷன் சம்பாத்யத்தைக்கொண்டு கட்டும்செட்டுமாக குடித்தனம் நடத்துபவர்களுக்கு இந்தக்கவலை ஏன்? நமக்கிருக்கும் சொத்தெல்லாம் குடும்பம் தான். அன்பும் அருளும்தான் அதன் க்ஷேமநிதி. அதில்தான் நாம் அமைதியையும் ஆனந்தத்தையும், நுகர்கிறோம்."

" 'அவர்' வரும் நேரமாகிவிட்டது; போய்வரட்டுமா சரோ?"

"இரு சுலோ! மஞ்சள், குங்குமம் பெற்றுக்கொண்டு போகலாம்."

ஒருவர்:— பா. வி. ஆசிரியரைப் பார்க்கப் போயிருந்தேன்.

இன்னொருவர்:— பாவி ஆசிரியரா? அதென்ன பாவி. புண்யவான்,

ஒருவர்:— இல்லை சார் பால விஷமம் ஆசிரியரை.

இ. ஒ.:— ஓஹோ! "மனிதன்" என்று பெயர் வைத்துக் கொண்டு எழுதுகிறாரே அவரா?

ஒருவர்:— ஆம். அந்தப் பா. வி. மனிதனே.

183658



ஆத்ம சோதனை

★

கவியோகி

ஸ்ரீ சுத்தானந்த பாரதி

★

• சுயசரிதை •

35. ஆசிரியர் உலகம்

அந்தக்காலம் மாணவர் ஆசிரியரைக்கண்டு அஞ்சினார்கள். ஆசிரியர் என்றால் பிரம்படி, வசவு, அறை, கிள்ளு, மார்க் ரிஜிஸ்டர் இப்பொஸிஷன் இவை எமதூதர்போல் எதிரே நிற்கும். பரீட்சை எமராஜாபோல வரும். கனவில்கூட பரீட்சையை நினைத்து உளறிக்கொள்வேன். பள்ளிக்கூடத்திற்கு வெளியே மளமளவென்று படிப்பேன், கவிபாடுவேன், ஞானம் பேசுவேன்...பள்ளிச்சிறைக்குள் நுழைந்தால் என்வாய் அடைத்துவிடும், எழுதத்தோன்றாது... சில ஆசிரியர் கெட்ட பேச்செல்லாம் சொல்லிச் சிறுவரை வைவதும், அடிப்பதும், பெஞ்சிமேல் நிறுத்துவதும், நெற்றியில் சுன்னம் போட்டு அவமானப்படுத்துவதும் கண்டு மனம்புழுங்கினேன். சில சில விநோதக்கொடுமைகளைச் சொல்லுகிறேன்.

1. ஸார் ஸார்! வால் வால்!

நான் என்போக்கில் சுதந்தரமாயிருந்தேன். இரண்டாம் வகுப்பிலேயே ஆங்கிலம் பேசினேன். என் அண்ணாக்கள் பேசவும், மேடைமேல் நடிக்கவும், படிக்கவும் கேட்டு எனக்கும் ஆங்கிலம் வந்தது. ஒருநாள் ஒன்பது மணிக்கெல்லாம் வகுப்பிற்கு வந்து ஒரு குடையைத்தலையில் கவிழ்த்துக்கொண்டு டோனி லம்ப்கின்போல் (Toney Lumpkin) நடித்தேன். குஷியாக ஆங்கிலத்தில் பாடினேன். தோழர் தமாஷாகச் சிரித்தனர். மணியடித்ததுகூடத் தெரியவில்லை. ஆசிரியர் திடீரென்று நட்சத்ரேயன்போல் வந்து என் முதுகில்இரண்டு பிரம்படிகொடுத்தார்...ஒட்டைக்கப்பல் துரை ...உனக்கு வால்தான் இல்லை...என்று வைதார். "துரைக்கு வால் உண்டோ ஸார்" என்று கேட்டேன். உர் என்று பார்த்து என்னை அறைய எழுந்தார். அவர் கச்சம் ஒரு ஆணியில் மாட்டிக்கொண்டு அவிழ்ந்தது..."ஸார்! ஸார்! வால் வால்" என்று நாங்கள் கத்தினோம் ...வேடிக்கைதான்...

2. வாயிலே நாக்கு: நாக்கிலே வாக்கு

ஒரு வைதிகப்பழம்? பிரப்பம்பழத்தில் புலி. அவரை யாராவது தொட்டால் "அட பறப்பயலே!" என்பார். கண்டபடிவைவார்.

நாங்களும் அவர் அந்தப்பக்கம் திரும்பும்போது "அட பறப்பயலே" என்று சத்தமிடுவோம். இந்த வார்த்தையே எனக்குப் பிடிக்காது. ஏனெனில் தமுக்கடிக்கிற முனியாண்டி என் சிநேகிதன். சாதி மதபேதம் என்கிட்ட வரக்கூடாது. ஒருநாள் டிக்டேஷன் எழுதும் போது, இடையிடையே வாத்தியார் சொன்ன வசவுகளையும் சேர்த்து எழுதிவிட்டேன். என்னைப் படிக்கச் சொன்னார். "பரதாழ் வார் ராமனிடம் வணக்கமாக (அட பறப்பலே சக்கிலியப்பலே) அண்ணா அயோத்திக்கு வா (உன் புத்தியிலே லத்தி வச்சிருக்கா)... என்றார்....இப்படிப் படிக்கவே வகுப்பு முழுதும் சிரிப்பானது... கட்டைப்பிரம்பின் தர்பார் நடக்கவில்லை. "படவா! உன்னை இதெல் லாமா எழுதச்சொன்னேன்" என்றார் ஆசிரியர்: "எல்லாம் உங்கள் திருவாய்மொழிதானே ஐயா!" என்றேன்...... அதிகப்ரசங்கி உன் வாயிலே என்ன வச்சிருக்கு?...என்று சினந்தார். "ஐயா! வாயிலே நாக்கு, நாக்கிலே வாக்கு" என்றேன்.

3. எழுந்திருடீ பிராண சகீ !

ஒரு ஷோக் வாத்தியார் பாட்டும் சீட்டுமாயிருப்பார். நான் அவர் வீட்டில் விகடம் செய்வேன். அவருக்கு நாடகத்தில் ஆசி யாக நடிக்க விருப்பம். நடித்தும் பார்ப்பார். நான் பலே பேஷ் அசல் ராணி என்பேன். ஒருநாள் அவர் வகுப்பில் உறங்கினார். 'பிராணநாதா!' என்று கனவில்உளறினார். நான் "எழுந்திருடீ பிராண சகீ!" என்று மெல்லச் சொன்னேன்...சிறுவர் கோல் என்று சிரித் தனர். அவர் திடுக்கிட்டெழுந்து ஒரு டப்பி பொடி உறிஞ்சி, கொஞ்சம் காவடிச்சிந்து பாடி பொருட்பாடம் தொடங்கினார். ஒரு நாள் அவர்சீட்டுக்கட்டு வாங்கிவரப் பணம் தந்தார். நான் கொல்லை வழியேசென்று பணத்தை அம்மாமியிடம் கொடுத்துச்சென்றேன். அம்மாமி "இப்படித்தானா காசை விரைக்குவது...உமக்கென்ன ஜட்ஜ் வேலையா? இருபது ரூபாக்காசு.... இதிலே நான் குடும்பம் நடத்தி மூன்றுவேளை பொங்கிப்போடவேண்டும்"....என்று டோஸ் கொடுத்தாள். ஷோக் வாத்தியார் மறுநாள் என்னை உர்ரென்று பார்த்தார். நான் "மன்னியுங்கள் ஸார்! சீட்டு, பொடி எல்லாம் கெட்டபழக்கம்" என்றேன்.

4. குருட்டுப் பாடம் பயனில்லை

பொட்டைப்பாட வாத்தியாரிடம் நான் வாங்கிய வசவு இருபது ஸஹஸ்ரநாமமிருக்கும். ஆங்கில இலக்கணம் குருட்டுப் பாடம்பண்ண மறந்துபோனேன். 'எழுது நாலுதடவை' என்று வெளியே தள்ளினார் மகானுபாவர். நான் இதற்காகவே கார்பன் காகிதங்கள் வைத்திருந்தேன். ஒரே தடவையில் நான்கு காப்பி எழுதிவிட்டேன். என்னுடன் தண்டனை வாங்கிய தோழருக்கும் அப்படியே எழுதித்தந்தேன். அவர்கள் யுக்தியைத் தெரிந்து கொண்டு கரித்தாள் தயாரித்தனர். ஆபீஸ் குப்பைகளிலெல்லாம் கார்பன் காகிதம் பொறுக்கி வந்தனர். இந்த யுக்தி ஆசிரியருக்குத் தெரிந்துபோனது. ஒருநாள் இம்போசிஷன் வழக்கம்போல் எழுதி விட்டு மாமரக் கிளிகளுக்குக் கடலைபோட்டு;

கூண்டில்லாது வாழ
வேண்டும் பச்சைக் கிளியே

என்று பாடிக்கொண்டிருந்தேன். என் முதுகில் விழுந்தது கட்டைப் பிரம்பு...“போ கழுதை பெஞ்சுமேல் நில்; பாடம் ஒப்பி” என்று உள்ளே தள்ளினார் ஆசிரியர். நான் என் கோஷ்டியுடன் பாடத்தை ஹோஎன்று அலறினேன். தலைமை ஆசிரியர் ஓடிவந்து வினவினார். “ஐயா என்மண்டையில் பொட்டைப்பாடம் ஏறவில்லை எல்லாம் அதுமயமாயிருக்கிறதே!” என்றேன். தலைவர் அமைதியாகப் பாடத்தை விளக்கினார். உடனே நானும் ஒப்பித்தேன். “முதலில் நன்றாக விளக்குங்கள்...குருட்டுப்பாடம் பயனில்லை”... என்று சொன்னார் தலைவர். ஆசிரியர் கடுகடுத்தார் சிடுசிடுத்தார்... டியூஷன் பையன்களுக்குச் சலுகைகாட்டினார். நான் அவர் கொடுங்கோல் பொறுக்காமல், ஏ டிவிஷனுக்குப் போய்விட்டேன். தலைவரே என்னை அனுப்பினார்.

5. வகுப்பில் தேறப் பாடமும் பண்ண வேண்டும்

ஸ்ரீநிவாசராவ் நல்லாசிரியர்; அறுபது வயதானாலும் அன்பும் அமைதியும் ஊக்கமும்கொண்டவர். ஆசாரசீலர். அவர் வகுப்பில் கலைமகள் படம் உண்டு. அதற்கு வணக்கம் பாடியே நான் அமர்வேன். நான் தமிழ் வகுப்பில் சுயமாகப் பாட்டுக் கட்டியே ஒப்பித்தேன். ராயர் “நீ கவிதான். இருந்தாலும் வகுப்பில் தேறப் பாடமும் பண்ணவேண்டும்”....என்று அன்பாகச் சொன்னார். அவர் ஒருவரே எனது பிஞ்சுக்கவிகளை ரசித்தவர்.

6. பேருண்டா திவச மந்திரம்!

ஒரு முரட்டுப்புலி; ஆந்தைக்கண், கழுகுமூக்கு; இரக்கம் பூஜ்யம். அடி மிதி அறை வசவு எல்லாம் அமளியாக நடக்கும்; அவர் வகுப்புக்குப்போகுமுன் அனுமாரை வேண்டிக்கொண்டே செல்வேன். பாடமெல்லாம் குருட்டுப்பாடம். நெஸ்பீல்டு இலக்கணம் ஒப்பிக்காவிட்டால், சாப்பிடவிடமாட்டார். பசியுடன் பெஞ்சுமேல் நின்று நெஞ்சில் குத்திக்குத்திப் - பாடம் பண்ண வேண்டும். ஒருநாள் நான் அந்தத் தண்டனைக்குள்ளானேன். ஒரு பாட்டெழுதினேன்.

சிந்தைக் கினிய சிறுகிளியை இக்கூட்டில்
பந்தப் படுத்திப் பலமான—மோந்தையுருத்
தள்ளப் புலியின்கை தந்ததேன்ன விந்தையம்மா
உள்ளமிரங் காய்சக்தி ஓம்

முரட்டுவாத்தியார் பசக்கென்று பார்த்தார்....நீ என்ன ராமலிங்கமோ...அவன் செத்தாரை எழுப்பப்பாடி செத்தேபோனான்... என்று தொடங்கி! அருட்பாவையும் பழித்தார். நான் “ஐயா! ராமலிங்கசுவாமிகள் அருட்பா பாடி செத்தாரை எழுப்பினாலும், தங்களிடம் எல்லாரையும் கொண்டுவந்தால் அவர் வாக்கு பொய்யாகிவிடும்...பிழைத்தவரும் சாவார்” என்றேன். “ஹூம்! என்ன சொன்னாய்?.. நான் “உங்களைச் சாகடிக்கிறேனா?..” என்று உறுமினார்

"நீங்களா!கடிக்கிறதேயில்லையே!"...என்றேன். அவர்கலவை அளன்று நினைத்து, 'அப்படிச்சொல்' என்றார். வகுப்பு முழுதும் சிரித்தது.

இவரைத்தான் நாங்கள் மிகவும் கேலிசெய்வோம். வகுப்பில் பெத்தகுப்புநிலைத் தூண்டிவிடுவோம். பெத்தண்ணு ஹூம் என்றால் போதும்; அவனுக்குத் தெரிந்ததெல்லாம் ஒப்பிவித்துவிடுவான். கேள்விக்குமட்டும் பதில்வராது. இன்ஸ்பெக்டர் வாட்ஸ் வந்தார். ஜாமெட்ரி வகுப்பு; உருண்டைபற்றிப் பாடம்; சோதகர் ஆங்கிலத்தில் "இதென்ன?" என்றுகேட்டார். பெத்தன்னு இதுதான்சாமட்டி என்றான்...இது எதுபோல் இருக்கிறது?...தேங்காய்போல்... "தேங்காய் என்னவடிவம்?" பிடித்தது. நெல்ஸன்ஸ் ரீடரில் உள்ள தென்னைமரப்பாடம் முழுதும் மூச்சுவிடாமல் பெத்தன்னு ஒப்பித்தான்...நாங்கள் சிரிப்பை அடக்கமுடியவில்லை. "போருண்டா திவசமந்திரம்" என்று நான் மெல்லச்சொன்னேன். சோதகர் உண்மையை அறிந்து, குருட்டுப்பாடத்தின் தீமையை ஆசிரியருக்கு விளக்கி, பள்ளிக்குறிப்பிலும் எழுதிவிட்டார். யார் சாபமோ இந்த முரட்டு வாத்தியார் உடல்வீங்கி இறந்துபோனார். சுடுகாடு வரையில் அவர் பாடையுடன்சென்று, எங்களை அடித்த கையும் புலிமுகமும் எரிந்து சாம்பலாவதைக் கண்டோம்.

7. தமிழர் ஒரு குலம்

இனிய வாத்தியார்—சொக்கலிங்கம் ஆசாரி. அவர் வகுப்பிற்கு வந்ததுமே "வேல்முருகா" என்பார். நாங்கள் "ஸார் ஸார்! ஒரு திருப்புகழ்" என்போம். "ஆமடா வடுவா! பாடம் நடக்கட்டும்" என்பார். "ஸார் ஸார் முருகன் அருளால் நடக்கும்...தனனதன தனனதன...உம்" என்போம். அவர் "குமர குருபரா முருகா" என்று திருப்புகழ் பாடுவார். நாங்கள் பெஞ்சில் தாளம்போடுவோம். பிறகு பாடம் நடக்கும். சந்தேகம் வந்தால் வெப்ஸ்டர் அகராதியைச் சுமந்துவரச் சொல்லுவார். "அடடடா வடுவா! இவன் மூளை என்ன மூளையோ, இத்தனை வார்த்தைகளும் அதில் எப்படி நுழைந்ததோ" என்று வியப்பார். பிறகு பொருள் பார்ப்பார். இவர் மதியம் காப்பி சாப்பிடமாட்டார். நல்ல வாழைப் பழமே உட்கொண்டு தண்ணீர் குடிப்பார். நானே பழம்வாங்கி வருவேன். இவரால் நானும் கனியுணவில் விருப்பங்கொண்டேன். இவர் அடிக்கடி குடும்பத்தொல்லைகளால்வெய்வெடுத்துக்கொள்வார். அப்போது ஆதிமூலப்பிள்ளை வருவார். அவர் கேம்ப்ரிட்ஜ் பட்டம் பெற்றவர். கணக்கில் புலி. என் அண்ணு நண்பர். வீட்டுக்கு வரும்போதெல்லாம் நான் இவருக்கு நீர்மோர் தருவேன். "தம்பி! சாதிபேதம் பாராதே. தமிழர் ஒருகுலம்" என்பார். எனது தமிழ்க் கவிதைகளை இவர் கேட்டு மெச்சினார். இவர் எனக்கு ஆங்கில யாப்பிலக்கணம் கற்பித்தார். ஆங்கிலக்கவிகள் அப்போதே இயற்றத்தொடங்கினேன். இந்த ஆசிரியர் அகாலமரணமடைந்ததும், அவர் தந்தை காத்தையாபிள்ளை ஒரே மகனை இழந்து அழுது தவித்ததும், உடலின் பொய்யுறவை விளக்கி, எனது வைராக்கியத்தைத் தீட்டிவிட்டன.

8. குழந்தைகளை அடிக்காதேங்கோ

திடீரென்று எனக்குப் படிப்பில் அக்கறை வந்துவிட்டது. ஆங்கிலத்தில் முதல். கணக்கில்கூட சோடையில்லை. மலட்டு வாத்தியாருக்கு நான் செல்லப்பிள்ளையானேன். அவருக்கு நானே டிபன் கொண்டுவந்தேன். அம்மாமி என்மேல் பிரியம். சிலசமயம் வகுப்பில் கோபாவேச நாடகம் நடக்கும். பிரம்படியும் உண்டு. நான் அம்மாமியிடம் எல்லாம் சொல்லுவேன். "குழந்தைகளை அடிக்காதேங்கோ" என்று அம்மாமி கண்டிப்பாள். மறுநாள் மனைவி சொன்னபடியே அன்பாயிருப்பார். ஆதலால் எங்கள் குறைகளை நாங்கள் அந்தப்புரத்தில் அரங்கேற்றி, இந்தப்புரத்தில் பலனைக்காண்போம்.

9. மார்க் பேரேட்டில் குண்டல மாலை

பெரிய வகுப்புகளில் நான் ஆங்கிலமே பேசி எழுதி அதிலேயே சிந்தித்தேன். மாணவர்சங்கக் காரியதரிசியானேன். வாரக் கூட்டங்களில் பேசினேன். என் குறும்புகளெல்லாம் அடங்கி, யோகசாதனமும் கலையுமாக வாழ்ந்தேன். ஆசிரியர்களும் மணிக்கு டக்கென்றுவந்து தளுக்காகப் பாடத்தை நடத்திவிட்டு டக்கென்று செல்வார்கள். கேலி கையாண்டிகளுக்கு இடமிராது. அதிலும் கே. பாலசுப்ரமணியர் வகுப்பில் ஒரு வீண்பேச்சிராது. தினம் இரண்டு பக்கம் பாடம், வாரம் இரண்டு பாட்டு நடக்கும். புத்தகசாலையில் அரிய நூல்களை எடுத்துப்படித்தோம். எங்களுக்கு உயர்ந்த ஆங்கில இலக்கியங்கள் பாடம். சொல்லித்தருபவரோ மாயவரம் கி. ஸ்ரீநிவாசர். ஆள் ஒடிசல், வக்ரம்; உச்சுக்குடுமியை அவர் நகாசு செய்யும்போது சிரிப்போம். மார்க்குப்பேரேட்டில் குண்டலமாலையாயிருக்கும். அவர் சுன்னம்போடுவதில் நிகரற்றவர். ஆனால் நல்ல படிப்பாளி. வேதாந்தப்பற்றுதல் கொண்டவர். ஷேக்ஸ்பியரும் ஷெல்லியும் என் பாராயண நூல்கள். அவற்றை அவர் படிக்கும்போதே சங்கரவேதாந்தத்தை விளக்குவார். இவர் பேச்சில் இலக்கியம் உண்டு. அவர் மற்ற ஆசிரியர்களை இலக்கியமாக மட்டம் தட்டுவார். அவருள் முதன்மையானவர் டிங்டிங் மாஸ்டர்.

10. பி. ஏ யில் ஆறுதரம் கோட்டடித்தவர்!

பி. ஏயில் ஆறுதரம் கோட்டடித்த பெருமை டிங் டிங்கைச் சேர்ந்தது. அவர் கெஸ்பீல்டை உருத்தள்ளினவர். கணக்கு, சரித்திரம் இரண்டிலும் கைவிரசு காட்டுவார். ஆனால் பத்து வார்த்தை மளமளவென்று பேசவராது. அடிக்கடி டிங்டிங் போடுவார். நாங்களும் டிங்டிங் என்போம். "இம்பர்டினெண்ட், அதிகப்ரசங்கி டிங்டிங்" என்பார். இவர் சின்ன விஷயத்திற்கு அண்டங்கிழியக்கத்துவார். அரசர் கலாசாலையில் இவர் சத்தமே பெரிதாயிருக்கும். இவர் சாபம் வைக்கத்தொடங்கினால், கட்டிடம் அதிரும். செல்வப்பிள்ளைகள் இவருக்குச் செல்லப்பிள்ளைகள். மற்றவர்களை "இங்கேனடா வந்து பிராணனைவாங்குகிறாய்? தொலைடா

சனியனே செங்கல்தூக்க" என்பார். என்னை "உன் அண்ணுவுக்கு குமாஸ்தாவேலை பார்க்கப்போடா" என்பார். "இல்லைசார் நான் டாக்டர் வேலை பார்ப்பேன்" என்பேன். கொஞ்சம் தணிந்து போவார். இவர் சாபத்தால், நான் யாருக்குமே குமாஸ்தாவேலை பார்க்காமல் கடவுள் காத்தார். அவர் பேசினுலோ வாய்ப்பன்னீர் தெறிக்கும். ஆதலால் நான் பின்பெஞ்சுகளில் அடைக்கலம் புகு வேன். அங்கேகூட அந்த வெங்காயவடை நாற்றம் குப்பென்று அடிக்கும். புத்தகத்தில் கணக்குகளைக் குறித்துத்தந்து, இவர் பத்தி ரிகை மறைவில் தூங்குவார். மாணவர் காப்பியடிப்பர்; செல்வப் பிள்ளைகள் கோளேற்றுவர்; அவர்களை முரட்டுப்பிள்ளைகள் மிரட்டு வார்கள். வகுப்பு ரகளையாகும். டக்கென்று "டிங்டிங் என்னடா போட்டே" என்று தடபுடல் செய்வார்...நான் தெரிந்ததைப் போட்டுவிட்டுத் தியானத்தில் ஆழ்வேன். ஒருநாள் ஆழ்ந்து தியா னித்தேன். டிங்டிங் பிதாகரன் விதியை வதவதவென்று சும்மா பேசிக் காதைச்சுற்றி மூக்கைத்தொட்டுக்கொண்டிருந்தார். திடீ ரென்று "என்னடா போர்டில்!"என்று என்னருகே வந்தார்."முக் கோணம் ஸார்" என்றேன். "உன் மூஞ்சியிலே முக்கோணம்" என்று என் கன்னத்தில் அறைந்தார். நான் "மூலாதாரத்தில் முக் கோணம் ஐயா!" என்றேன். "அட கழுதே மூதே...வீ! இது பைத கோரஸ் தீரண்டா" என்று கடுகடுத்தார். "இந்தப் பத்தியக்கோர சுக்கு இத்தனை தடபுடல் என்ஐயா! நேர் முக்கோணத்தின் சின்னப் பக்கங்களின் சதுரம் பெரியபக்கச் சதுரத்திற்குச் சமம் இவ்வளவு தானே" என்றேன். "அட! உனக்கும் தெரிகிறதா!" என்று கேலி செய்தார். "இனிப் பாருங்கள் ஸார்!" என்றேன். நான் காலை நான்கு மணிமுதல் ஆறுமணிவரையில் கணக்கில் ஏகாக்ரப்பட்டு வகுப்பில் சூடிகையாயிருந்தேன். டிங்டிங் "தேவலையே" என்றார். ஆசிரியர் என் பட்டாவிலும் 'கணக்கில் நல்ல தேர்ச்சிபெற்றான்' என்றெழுதி னார். சேஷுஐயர், ராதாகிருஷ்ணையர், ஹாலும் ஸ்டீவன்ஸனும், பியர்பாயிண்ட் முதலிய கணிதநூல்களைக் கற்றுத் தேர்ந்தேன்.

இந்த டிங்டிங் வாத்தியாருக்கும் ஸ்ரீநிவாசருக்கும் போட்டா போட்டியும் வாக்குவாதமும் நடக்கும். இவர் பத்து வார்த்தைக்கு நாலு டிங்டிங் போடுவார். ஸ்ரீநிவாசர் மேற்கோளுடன் ஆங்கில மழை பொழிவார். அவர் பேச்சின் ரஸபாகங்களைக் குறிக்கவே நான் குறுக்கெழுத்துக் கற்றேன். ஸ்ரீநிவாசரின் குடும்பவாழ்க்கை அமைதியாயில்லை. அவர் பையன் உடையார் ஊருணியில் விழுந்து இறந்தான். ஐயருக்குப் பைத்தியம் பிடித்துவிட்டது. "அவன் போனுன்; நான் போவேன்; நீயும் போவாய்; இருக்குமட்டும் பற்றில்லாதிரு" என்று எனக்கு உபதேசித்தார். முடிவில் அவரும் போனார். அவர் பாடையுடன் நாங்களும் போய்வந்தோம்.

11. "ஸார் ஸார்!" வீட்டில் விருந்தாளி!

அகராதி வாத்தியார் ஒரு தனிரகம்—கலியாணத்திற்குத் தந்த மஞ்சள் கோட்டையே இன்னும் அவர் போடுகிறார். வீட்டில் துண்டுதான் கட்டுவார். மனைவிக்குச் சிக்கனம் சொல்லித்தருவார்.

ஒரு முட்டை செய் அதிகமாய்விட்டால் வள்ளென்பார். அடியிலும் இறங்குவார். நிலைமை தாங்கமுடியாவிட்டால், "வீட்டுக்கு விலக்கம்" என்று கொல்லைப்புறம் ஓடுவாள் அம்மாமி. இவர், வீட்டில் பெரிய பெரிய நூல்களிலிருந்து குறிப்பெழுதி சடசடாக்குச்சி போல் அகராதி வார்த்தைகளை எங்கள் தலையில் உருட்டிவிடுவார். கோபம் வந்தால் மண்டையில் அடித்துக்கொண்டு, உச்சிக்குடுமியிலுள்ள பத்து மயிர்களில் இரண்டைப் பிய்த்தெறிந்து, அகராதி கடையில் திட்டுவார். இவர் சரித்திரபோதனை இவருக்கே புரியும். இன்ஸ்பெக்டர் கிரீன் (What is magna carta) வாட் இஸ் மாக்னு கார்டா...என்று கேட்டார். பசக்கென்று ஒருவன் That is a big London cart (அது பெரிய லண்டன் வண்டி) என்றான். சிரித்தோம். சோதகர் சென்றபிறகு அவர் நட்சத்ரேய தர்பார் நடத்தினார். இவரை மாணவர் குறிவைத்து கோட்டா பண்ணுவர். ஒருசமயம் இவர் இலவசப் பாட்டுக்கச்சேரியை ரசித்துக்கொண்டிருந்தார். பையன்கள் பட்பட் என்று மலைப்பிஞ்சுகளைச் சுண்டிவிட்டனர். பிடித்தது பீடை. மறுநாள் மாணவரை அழைத்து, அடி கொடுத்துச் சத்தியம் செய்யச்சொன்னார். நான் மட்டும் துணி போட்டுத் தாண்டினேன். ஆனால் யாரும் மலைப்பிஞ்சு லீலையை ஒப்பவில்லை. அவர் ஒரு சிறு கல்லைப் பத்திரமாகவைத்து, அதைக் காணும்போதெல்லாம் மாணவர்மேல் குமுறிக்கொண்டிருந்தார். ஒரு நிலாநாள்; ஒற்றைத்தெருவில் இரண்டு கழுதைகள் காதலித்துக் கூடிக்குழைந்தன. இரண்டையும் அகராதிவாத்தியார் வீட்டுக்குள் ஓட்டினோம். அவை வாழ்வாழ் போட்டன...."ஸார்! ஸார்! வீட்டில் விருந்தாளி" என்றோம். கழுதைகள் கத்தின. ஹஹஹ! என்றன. "பலே பேஷ்! பாட்டு! ஸார்! கச்சேரி எப்படி?" என்று கோட்டாசெய்து ஓடினோம்.

12. நான் சிறைக்கு அஞ்சவில்லை

12. அந்தக்காலமே நான் சாவர்கரின் இந்திய சுதந்தரயுத்தம் படித்து, தேசபக்தி வெறிபிடித்திருந்தேன். பரீட்சையில் "1857 புரட்சிக்குக்காரணமென்ன? அதை வர்ணிக்கவும்"...என்று வேண்டினார். நான் சாவர்கர் நூலைக்கொண்டு ஆறுபக்கம் அழகான ஆங்கிலத்தில் வீராவேசமாக எழுதினேன். சுதந்தரப்போரின் வேகத்தில் பேனாச்சிலம்பம் வீசினேன். நானா தாந்தியா, அகமத் மௌல்வி, குமார்சிங், ராணி லக்ஷ்மீபாய்களின் வீரத்தைப் படம் பிடித்துக் காட்டி, ஆங்கிலேயரின் கொடுமையைக் கண்டித்தேன். மறுநாள் "வாடா இங்கே" என்றார் அகராதி வாத்தியார். வணக்கமாகச்சென்றேன். "அட நீ என்ன பிபின் சந்திரபாலோ"... என்று முகத்தைப்பார்த்தார். "நானும் அவர்போல் பாரதமாதா புதல்வன்" என்றேன். "அதிகப்ரசங்கி! இப்படி எழுதினால் ஜெயிலுக்குப்போவாய்"...என்றார். "ஐயா! நான் சிறைக்கு அஞ்சவில்லை. துரோகிகளுக்கே அஞ்சுகிறேன். தாந்தியாவைக் காட்டிக்கொடுத்தது ஒரு துரோகி. நான் எழுதியதில் தப்பில்லை. ஆபாசம் இல்லை. சுதந்தர யுத்தத்திற்கு தாம்ஸன் ஆதாரமில்லை; சாவர்கரே எனக்கு

குடும்ப வாழ்க்கை

(தென்னாப்பிரிகா டெர்பன் திரு. ச. மு. பிள்ளை அவர்கள்)

வீடு ஒரு பெரிய சாம்ராஜ்யம். அதைச் சார்ந்த முற்றவெளி, கொல்லை கொடிக்கால், தோட்டந்துரவு, கன்று காலி இவைகளெல்லாம், அந்த மகா சாம்ராஜ்யத்தின் உட்பிரதேசங்கள். அவற்றின் உள்ளிருந்து கொண்டும், அவற்றை ஏகபோகமாக அனுபவித்துக்கொண்டும் ஒரு குடும்பம் உஜ்ஜீவிக்கின்றது. அந்த மனிதக் கூட்டத்தின் வாழ்க்கை யெப்படியிருந்தால் இன்பமாகவும், தேசோத்தாரமாகவும், லோகாதாய மாகவும் இருக்குமென்பது அத்யாவசியம் ஆராயப்படவேண்டிய விஷயம். ஏனெனில், சமூகத்தின் ஜீவநாடியாகவும், சமுதாயத்தின் இருதய மாகவும், தேசத்தின் ஆத்மமாகவும் இருக்கின்ற குடும்பமாகிற அஸ்திவாரக் கல்லின் மீதுதான் உலகம் என்கிற மாளிகை பெரிதாய்க் கட்டப்பட்டிருக்கிறது. வீடு கட்டுஞ் சிற்பிகள் அஸ்திவாரத்தைப் பலப்படுத்துவதுபோல, மனுஷ்ய வாழ்க்கையை வகுக்கின்ற சிற்பிகளின் ஜாதியிலே சேர்ந்த நாமும் அஸ்திவாரத்தைப் பலப்படுத்துகிறோம்.

குடும்பம் ஒரு சின்ன உலகம். அங்கே அரசனிருக்கிறான், அரசியிருக்கிறாள்; மந்திரி பிரதானிகளுமிருக்கிறார்கள். சாதாரணமான ஊழியக்காரன்முதல், உயர்தரமான உத்தியோகஸ்தர்வரை உண்டு. இவ்வளவு பேர்களுஞ் சேர்ந்து நடத்துகிற குடும்ப நிர்வாகம், ஒரு அரசாங்கத்தின் இராஜரீகத்தைப் போன்றது, இராஜரீகத்தின் ஜீவாம்சமானது.

உலகத்திலே நிகழுகிற எல்லா இராஜரீகங்களும், அவற்றின் உள் அம்சங்களாகிற பல இலாக்காக்களுங்கூடக் குடும்ப நிர்வாகத்தில் இருக்கின்றன. தனியொரு மனிதனால் ஆளப்படுகிற அரசன் ஆட்சி (மானார்க்கி) பிரஜைகள் தங்களைத் தாங்களேயாளுகிற பிரஜாதிபத்திய ஆட்சி (டெமொகிரஸி) இப்பொழுது ருஷியாவில் நடக்கிற பொதுவுடமை யாட்சி (சோவியட் ரூல்) முதலிய எல்லா முறைகளும், தனித்தனியாகவோ அன்றி ஐக்கியமாகவோ அங்கு நடைபெறுகின்றன.

மனிதன் ஒரு விசித்திர சிருஷ்டியாயேற்பட்டவன்; காட்டுமிருகங்களினின்றும், வானத்துப் பக்ஷிகளிலிருந்தும் மாறுபட்ட பிராணி. பிறந்து சத்தோடளவளாவி, பிரகிருதியின் வாத்ஸல்யமான பராமரிப்பிலே வாழ்ந்தீரவேண்டியவன். மனுஷ்ய ஜாதியோடும், மிருக ஜாதியோடும் மற்றுமுண்டான ஜீவவர்க்கங்களோடும் ஒன்றியிராமல், தனக்குத் தானே—ஏகாந்த வாசியாயிருக்க மனிதன் கற்பதில்லை. கூட்டத்திலே பிறந்து கூட்டத்திலே வளர்ந்து, கூட்டத்திலே வாழ்ந்து, கூட்டத்தாலே மண்ணுக்கப்படுவது மானுஷீகஇயல்பு. அதன் உருவத்தைத்தான் குடும்பம் என்கிறோம்.

ஒருவனை யொருவன் வெறுக்காமல், அன்பு செலுத்தி, அன்யோன்யமாக வாழுவது மனிததர்மம். அதனின்றும் வழுவாமல் சமத்வம், சகோதரத்வம், சுதந்திரம் இம்மூன்றும் நிறைந்து, கல்வியறிவு, கைத்தொழில் செல்வப் பெருக்கு முதலிய நயங்களோடு நிகழுகிற ஒரு குடும்பமானது,

---

ஆதாரம். அது யூனியன்ஜாக்கை வீழ்த்தி நமது தேசக்கொடியை நாட்ட எழுந்த வீராவேசப் புயல். அதன் சம்பவங்கள் நமது இரத்தத்தில் எழுதப்பெற்றவை" என்றேன். ஆசிரியர் "நீ பள்ளிக்கூடப் பையனாயிருக்கும்மட்டும், நான் சொல்லியபடியே எழுதவேண்டுமடா! ஹூம்!" என்று முறைத்தார். நான் "வந்தேமாதரம்" என்று திரும்பினேன்.

(தொடரும்.

"அறிவு, தொழில் உரிமை, ஆக்கை வளமும்—
விறல் நாட்டணியே விளம்பு"

என்கிறபடி, அந்நாட்டின் அணியாகவும் அழகாகவும் விளங்குகிறது.

மாதிரிப்பண்ணைகள் வைத்து அவற்றின்வழியாகத் தேசத்தின் விவசாயத்தை அபிவிருத்தி செய்வதுபோலத் தனிக்குடும்பத்தின் நிர்வாகத்தை மாதிரியாக வைத்துக்கொண்டு இராஜரீகம் நடத்தப்படவேண்டும். ஏனெனில் ஜனங்களின் சௌகரியத்திற்காகவே அரசாங்கங்கள் அமைக்கப்படுகிறதே யொழிய அரசாங்கங்களுக்காக ஜனங்கள் சிருஷ்டிக்கப்படவில்லை.

குடும்ப வாழ்க்கையில் நிறைந்திருக்கிற சமத்துவ உணர்வையும், சமதர்மச் சிந்தனையையும் வேறெங்கேனுங் காண்பதுண்டா? தாய் தந்தை அண்ணன் தம்பி சகோதரன் சகோதரி மாமன் மருமகன் மைத்துனன் மைத்துனி கணவன் மனைவி குழந்தைகுட்டி இவ்வளவு பேர்களும் ஒரு கொத்துப் புஷ்பங்கள் போலும், ஒரு குலைக்காய்கள் போலும், ஒருவகைக் கனிகள் போலவும் அன்பால், ஆதர்சத்தால், ஒன்றி ஒருமித்து வாழ்க்கைச் சகடையை வழி பிசகாமல் இழுத்துச் செலுத்துகிறார்கள். அவர்களுக்குள்ளே எந்தவிதமான ஏற்றத் தாழ்வுங் கிடையாது; ஜாதி பேதமோ, சமயபேதமோ அங்கில்லை; தீண்டாமை யென்கிற தோஷமுங் கிடையாது. ஆண் பெண் சமத்துவத்திலுள்ள ஓரேயொரு கோனஷ்டை மாத்திரம் இல்லாவிட்டால், சிலருக்கு இப்போதிருப்பதுபோல் குடும்பமானது ஒரு பெரிய பாரமாக இராமல், புண்ணிய ஸ்தலமாகவும் கோடையிலே யிளைப்பாறிக்கொள்ளும் வகை கிடைத்த குளிர்தருவாகவும், பூரண சுகந்தரும் இன்ப உலகமாகவும் இருப்பதிற் சந்தேகமில்லை.

பாகசாலைக்கும், போகசாலைக்கும் பயன் படத்தக்க போகப் பொருளாகப் பெண்கள் படைக்கப்பட்டிருக்கிறார்கள் என்று தப்பாக எண்ணிக்கொண்டு அவர்களுக்குக் கிடைக்கவேண்டிய நியாயமான உரிமைகளைக் கொடுக்க மறுப்பது ஆண்களிடத்திலுள்ள மகா பெரிய தோஷம். சகவாச உரிமை, சொத்துரிமை, வாக்குரிமை, வாழ்க்கை யுரிமை முதலிய உரிமைகளைப் பெண்பாலருக்குக் கொடுத்து ஆண்களோடு சரி-நிகர்-சமானமாய் அவர்களை வைக்காமல் நிராகரிக்க ஆண் மனது எவ்வளவு கடினமானது? எவ்வளவு சுயநலங் கொண்டது? "வீட்டிலுள்ள பழக்கமே நாட்டிலுண்டாம். வீட்டினிலே தனக்கடிமை பிறராமென்பான், நாட்டினிலே பிறர்க்கடிமையாவான் என்பது போலவே, நாம் ஒருகுலத்தை (பெண் குலத்தை) அடிமையாக வைத்து ஆண்டு அனுபவித்தால் நாமும் பிறரால் அடிமைப்படுத்தப்பட்டு அவதியுறுவோம் என்பது சாபத்தீடு. 'உன்னிடத்திற் பிறன் எவ்வாறு நடந்துகொள்ளவேண்டுமென்று நீ விரும்புகிறாயோ, அவ்வாறே நீயும் பிறரிடத்தில் நடந்துகொள்'' என்கிற வாக்கின் தாதுப் பொருளும் இதுவேயாகும். உனது ஜாதி ஜனங்களுக்கு, அவர்களுக்குரிய உரிமையையளிக்க நீ மறுத்தால், உனக்குரிய உரிமைகளுக்காக உனது சத்துருக்களை நீ வற்புறுத்துவ தெப்படி?

வீடு ஒரு பெரிய சர்வ கலாசாலை. அங்கே போதிக்கப்படுவதெல்லாம் அருமையான பாடங்கள். கருத்தரிப்பதிலிருந்து காஷ்ட மேறுகிறவரை மனிதனுடைய வாழ்க்கைச் சரித்திரத்தை வரைவது வீடுதான். கர்ப்ப சாஸ்திரமுறைப்படிக் கருத்தரித்திருக்குங் குழந்தையை மனுஷ்யனாகவோ, மிருகமாகவோ செய்கிற மகா சக்தி, தாய் தந்தையரிட மிருக்கிறது. சத்காரியங்களை யெண்ணிச், சத்காரியங்களைப் பேசிச், சத்காரியங்களையே செய்கிற பெற்றோருக்குப் பிறக்கிற குழந்தைகள், சத் புத்திரர்களாகவே இருக்கிறார்கள்

"வீடு மனுஷ்யனை சிருஷ்டிக்கிறது" என்று ஆங்கிலப் பேராசிரியர் ஸ்மைல்ஸ் என்பவர் கூறுகிறார். பெற்றோர் குழந்தைகளுக்கு வெறும் பெற்றோர்மாத்திரமாயிருந்துவிடாமல் பாஷை கற்பிக்கும் ஆசிரியர்களாகவும், வாழ்க்கை லட்சியங்களைப் போதிக்கின்ற பேராசிரியர்களாகவும் இருக்கின்றனர். "இன்னது செய்திடேல், இவரோடு பழகேல், இவ்வகை மொழிந்திடேல், இனையன விரும்பேல், இன்னது கற்றிடேல், இன்ன நூல் கற்பாய், இன்னவருறவு கொள், இன்னவை விரும்புவாய் எனப் பல தருமம் எடுத்தெடுத்தோதி ஓய்விலாதவரோ டுயிர்விடல்" தாய் தந்தையருக்கன்றிப் பிறரால் சாத்தியப்படத்தக்கதில்லை. இப்படியெல்லாம் நாலா வழிகளிலும் முயன்று பிள்ளைகளுக்கு வருங்கால வாழ்வைப் போதிக்கின்ற பெற்றோர்களுக்குக் குழந்தைகள் தங்களது பிதுர் பக்தியைத் தவிர வேறு யாது காணிக்கை செலுத்துகின்றனர்?

பிள்ளைகளுக்குச் சிறு போதிலிருந்து அச்சமின்மையை அறிவுறுத்தி வந்தால், அவர்கள் வயதுவந்தபோது தேசத்தைக் காக்கும் வீரர்களாக வருவார்கள். குழந்தைகள் அழும்போது பேயென்றும், பூதமென்றும், என்னென்னவோ ஆள்விழுங்கும் பிராணிகள் இருப்பதாகப் பயமுறுத்துந் தாய்மார் அக்குழந்தைகளைக் கோழைகளாக ஆக்கிவிடுகிறார்கள். அது கூடாது. வீரர்களின் கதைகளைச் சொல்லி வீரர்களாக்கவேண்டும். குடும்பரீகத்தின் கல்வியிலாகாவை நிர்வகிக்கின்ற பெற்றோர் கையிலே தான், தேசத்தின் வருங்காலப் பயிர்களான குழந்தைகளின் வாழ்க்கையிருக்கிறது; அதை நன்கு வகுக்கவேண்டியது அவர்களது கடமை. சத்புத்திரர்கள் தேசத்தின் சத்து; அறிவுடையவர்கள் உலகத்தின் ஆத்மா. தமிழ் நாட்டின் குழந்தைகளுக்குக் கவியாசன் பாரதி "பாப்பா பாட்டு" என்கிற வேதத்தை வரைந்து வைத்திருக்கிறான். அதை ஒவ்வொரு தமிழ்க் குழந்தைக்கும் மனப்பாடஞ் செய்வித்து, அதன்படி நடத்தவேண்டுமென்பது பிள்ளைகளைப் பெற்றோர்க்கு நாம் விடுக்கும் விண்ணப்பம். பள்ளிக் கல்வியை விட, மனைக் கல்வியே பல துறைகளிலும் மாண்புறுங் கல்வி.

துடும்பம் ஒரு கூட்டுறவுக் கழகம். அதினின்றுமே கிராம பரிபாலனம், நகர பரிபாலனம், தேச பரிபாலனம் முதலிய எல்லாப் பரிபாலனங்களும் உருக்கொள்ளுகின்றன. குடும்பத்தின் ஒரு தனி நபர் உண்பதும், உடுப்பதும், உழைப்பதும், தன்னொரு சரீர ஆத்ம நலத்திற்காக மாத்திரமில்லை; அங்குள்ள சகல ஜீவாத்மாக்களுக்காகவுந்தான் அவரவர்தரத்திற்கும், தகுதிக்குந் தகுந்தவாறு ஒவ்வொருவரும் வேலை செய்யவேண்டும் என்பது குடும்பச் சட்டம். ஆண்கள் ஆண்களுக்குரிய கஷ்டவேலைகளைச் செய்கிறார்கள்; பெண்கள் பெண்களுக்குரிய சுலபமான வேலைகளைச் செய்கிறார்கள். உழுகிறவன் உழுகிறான்; விதைக்கிறவன் விதைக்கிறான்; அறுக்கிறவன் அறுக்கிறான். அப்புறம் அதைக் குத்தி அரிசியாக்கிச் சமைக்கிறவர்கள் சமைக்கிறார்கள்; எல்லோரும் உண்டு பசியாறுகின்றனர். எல்லோரும் வேலை செய்து எல்லோருஞ் சாப்பிடுகிறது என்ற இந்த முறையைக் கொண்டுதான் ருஷியாவின் சோவியத் அரசாங்கம் அமைக்கப்பட்டிருக்கிறது. பொதுவுடைமையின் ஜீவாம்சமான கொள்கையும், குடும்ப நிர்வாகத்திலிருந்தே பிறந்திருக்கிறதேயன்றி அது ஓர் வானத்துப் பொருளில்லை.

வயிற்றுக்கு உணவு விளைவித்தாயிற்று; மானத்தை மறைக்க உடை வேண்டுமே அதற்கென் செய்வது? கைத்தொழில் செய்யவேண்டும். சோம்பலிற் காலங் கழிக்கிற குடும்பம் வறுமைக்கு இருப்பிடம், விவசாயத்

திலே அன்றி வேறு பிரவிருத்தியிலே ஈடுபட்டிருப்பவர்கள் தங்களுக்குக் கிடைக்கிற ஒவ்வொரு நிமிஷத்தையும் உபயோகித்து யாதாமொரு கைத்தொழிலைச் செய்து, தங்கள் தேவைகளைப் பூர்த்திசெய்துகொள்ள வேண்டும். வெறுமனே சத்திரஞ் சாவடிகளிலும் மடங்களிலும், ஊர்ப்புரளிகளைப் பேசிக்கொண்டு, திண்ணைதூங்கி வேதாந்திகளாயிராமல் வேலைசெய்து ஜீவிக்கவேண்டும். வேலை செய்யாதவனுடைய மனதில் சோம்பன் குடிபுகுந்து, தனது குறும்பு வேலைகளைச்செய்து, மனிதனை மனிதத்தன்மையிலிருந்து பிரித்து மிருகமாக்கிவிடுகிறான். அடிதடி! வம்பு தும்பு! கொலை கோரச்செயல்! இவைகள் யாவும் சாத்தான் கை வேலைகள். இதினின்றுந் தப்புவதற்காகவேனும், மனுஷ்ய வர்க்கம் உறங்கும் நேரம்போக மற்றைய நேரங்களில் ஏதாவதொரு பிரவிருத்தியில் ஈடுபட்டிருக்கவேண்டும். தையலோ, பின்னலோ, பிணைத்தலோ எது லாபகரமாகவும், தகுதியாகவும் தெரிகிறதோ அதைச்செய்து குடும்பத்தின் பொருளாதாரத்தை விருத்திசெய்யவேண்டும்.

கைத்தொழிலை, வாழ்க்கையின் இரண்டாவது தொழிலாக வைத்துக் கொண்டிருக்கிறவர்களில், அதிக அவகாசங்கிடைக்கப் பெற்றவர்கள் பெண்கள்தான். ஆனால், அவர்கள் அத் தங்கமான தருணத்தை, உபயோகித்துப் பயனடைவது இனிமேலேதான் ஆகவேண்டும்.

இவ்வாறு பல துறைகளிலும் இறங்கிக் குடும்ப வாழ்க்கைக்கு அவசியமான பொருள்களை உழைப்பால் பெற்று, அந்த ஒரு குடும்பம் உஜ்ஜீவிப்பது மாத்திரம் போதாது, பிறகுடும்பத்தினருக்கும் பயன் பெற வாழ வேண்டும். தனி மனிதன் எவ்வாறு பிறருக்காகவே மூச்சுவிடுகிறானே, அவ்வாறே ஒவ்வொரு தனிக்குடும்பமும் பிறகுடும்பத்தினருக்குக் கூடுமான வரை தங்கள் சக்தியைப் பகிர்ந்து தரவேண்டும். அப்பொழுது சமூகத்தினிடமாக மனித ஜாதி அன்யோன்ய பாவத்தோடு வாழுவார்கள்.

குடும்ப வாழ்வுக்கு அன்பே வேலி. குடும்பத்தின் எல்லா அங்கத்தினர்களும் ஒருவரை யொருவர் அன்போடும், ஆதரத்தோடும் நேசித்து, ஒற்றுமையாக வாழவேண்டும். ஒரு சரீரத்திலிருக்கிற கை, கால், கண், மூக்கு, செவி முதலிய அவயவங்கள் அதினதின் வேலையைச் செய்கிற போது மனிதன் ஈனமில்லாதவனா யிருக்கிறான். கண் பார்க்காவிட்டால் குருடன், காது கேட்காவிட்டால் செவிடன், கால் நடக்காவிட்டால் முடவன்; இவர்களது வாழ்க்கை பூர்த்திபெற்றதாயிருக்க முடியாதிருப்பது போன்றே, ஒற்றுமையில்லாத குடும்ப நிர்வாகமும் இருக்கிறது. எனவே, குடும்பத்தில் ஒவ்வொரு மனிதனும் தனக்காகவும், தன் குடும்பத்திற்காகவும், தனது ஜாதி ஜனத்திற்காகவும், தனது சமூகத்திற்காகவும், தனது தேசத்துக்காகவும், உலக மக்களுக்காகவும் உயிர் வாழவேண்டும்; உஜ்ஜீவிக்க வேண்டும். தன்னலங் கொண்டவன் மனிதப் பதர்; மனிதக் கூட்டத்தே வசிக்கத்தானும் அவனுக்கு அருகதையில்லை.

குடும்பம் ஒரு அன்புக் களஞ்சியம். அக்குள்ளோர் அனைவரும் தகப்பன் பிள்ளை பாந்தவ்யத்திலோ, சகோதர பாந்தவ்யத்திலோ, மற்றேதேனும் ஓர் பாந்தவ்யத்தாலோ கட்டுண்டிருக்கிறார்கள். அது இரத்தக் கலப்பால் ஏற்பட்டது என்பர் சிலர். ஆனால், எங்கோ தூரந்தொலையிலே, யாரோ, எவரோ, இனங்கூடச் சரியாய்த் தெரியாத மூன்றும் பேர்வழியை மணமகனாகவோ, மகளாகவோ கட்டிக்கொண்டுவந்து, பழைய குடும்பப் பண்ணையோடு சேர்க்கிறார்கள். அவர்களும் வந்த நாள் முதல் புகுந்தகத்து அன்பிற் குலாமாகிக் குலாவுகிறார்கள். இது இரத்தத்திலிருந்து பிறந்த அன்பில்லை; இருதயத்திலிருந்து பிறந்தது; காதலாற் சம்மேளித்தது. அக்கால்

அன்பு இன்னுஞ் சற்று வியாபகமாக வியாபித்துப், பிள்ளைகளின் மீது பரவுகிறது. பின்னர் அவ்வாத்ஸல்யம் வைபத்தன்பாக வளர்ந்து, சமுதாயக் காதலாகவும் மாறுகிறது. இவ்வாறாகக் குடும்பத்தின் வற்றாத களஞ்சியத்திலிருந்து வாரியிறைக்கப்படும் அன்பினாலேதான் மன்பதைக் கூட்டமும், உலகமும் உயிர் வாழுகிறது. இல்லாவிட்டாற் சீச்சீ! இச் சம்சாரம் என்னத்திற்காகும்? ருசியிருக்குமா? ரஸனையிருக்குமா? பாலைவனத்தைப்போற் பாழடைந்துபோகாதா?

வீடு ஒரு பண்டக சாலை. உயிர் வாழ்வுக்கு அவசியமான எல்லாப் பண்டங்களும் அங்கு குவிந்துகிடக்கின்றன. அவற்றை அக் குடும்பத்தாரனைவருஞ் சம உரிமையோடு சமமாக அனுபவிக்கின்றனர். அன்றன்றைக்கு வந்ததை வயிற்றிலே கொட்டிக்கொண்டு நாளைக்கென்கிற சிந்தனையில்லாம விருந்துவிடுகிற நிஷ்காமிய நினைவு குடும்பத்தாருக்கில்லை; வருஷத்துக் கெல்லாங் காணும்படி சிக்கனமாகச் செலவு செய்து, மிகுத்து வைக்கிறார்கள். ஊதாரிகளுக்கும், தன்வெறுப்புக் கொண்டவர்களுக்குங் குடும்பவாழ்வு கசப்பாயிருக்கலாம். ஆனால், கர்ம வீரர்கள் குடும்பத்தில் இன்ப ருசிகளை அமோகமாக ரஸிக்கின்றனர்.

வீடு ஒரு பாசறை; சைன்யந் தங்குகிற பலத்த கோட்டை வெளியிலிருந்து வருகிற படையெடுப்புகளையும், கொள்ளையடிப்புகளையும் உயிரைப் பணயமாக வைத்துக் காக்கின்ற ஸ்வபாவம் அங்கிருக்கும் ஒவ்வொருவனுக்கும் சுவபாவத்திலேயே தோன்றுகிறது. தன்னையும், தனது குடும்பத்தாரையும் எதிரிகளினின்றும் அவன் காக்கிறதுபோல எந்த தேசத்துப் படையாற் காப்பாற்ற முடியும்?

இவ்வாறாக வாழ்வின் உண்மைகளைப் பல வழிகளிலும் பகுத்தறிந்து பிறப்பின் வினையையும், பிறவிப்பயனையுங் கண்டு கர்மஞ் செய்வதற்காகவே மனிதன் படைக்கப்பட்டிருக்கின்றான். அதை மறந்து அவலமாகக் காலத்தை வீணே கழித்து, நோய்க்கும் நொடிக்கும் இரையாகி மாண்டு மக்கிப்போகாமல், பிறருக்காக மூச்சுவிட்டு, பிறருக்காக மூச்சு வாங்கி, உண்பதும், உடுப்பதும் பிறருக்காகவே யென்கிற எண்ணத்திற் பரம தர்மிஷ்டர்களாக வாழவேண்டும்.

வை. மு. கோ.
87-வது நாவல் **ஜீவநாடி**

27-வது ஆண்டுமலரில் வெளியாகி,
உயரிய தனிப்பதிப்பாக வெளிவந்துள்ளது.
(10 ஆர்ட் படங்களுடன்.)

மனிதர்களின் வாழ்க்கையை நடத்திச்செல்வதற்கு சக்திதான் ப்ரதானம். அந்த சக்தி அவரவர்களின் கர்ம விசேஷத்தின் பலனால் ஒவ்வொரு விதம் அமைந்து செல்கிறது. ஒவ்வொருவருக்கு ஒவ்வொன்று ஜீவநாடியாய் அமைந்து அதன் பலனைக்கொடுத்து வாழ்க்கை வண்டியை ஓட்டிச்செல்கின்றது. தனபாலன், ஜெயபாலன், பூபதி, குந்தலா, விமலா, சபலா, அகிலா, நிர்மலா ஆகியவர்களுக்கு எந்தெந்த அம்சங்கள் ஜீவநாடியாக அமைந்து எத்தகைய பலனைக்கொடுக்கிறது என்பதைப் படித்துக் களியுங்கள்.

ரூ. 2. (ரிஜிஸ்தர் தபாலில் 2-4)

சுதந்திர இந்தியாவின் பெண்மணிகளுக்கு இரண்டு வார்த்தை

ஸ்ரீமதி ஜயலக்ஷ்மீ R. ஸ்ரீனிவாஸன்

நமக்குப் பூர்ண சுதந்திரம் கிடைத்துவிட்டது. ஆனந்தம், பரமானந்தம். ஆனால், நாம் சுதந்திரம் என்ற சொர்ணமாளிகையைப் பெற்றிருந்தாலும், அதில் சொர்க்கபோகத்துடன் வசிப்பதற்கு அசக்தர்களாகவிருக்கிறோம்.

உலகின் மற்ற சுதந்திரநாடுகளுக்கு நம் நாட்டை ஒப்பிட்டுப் பார்த்தால், நம்நாடு சுயம்பரிபூர்ணத்துடன் விளங்கவேண்டுமானால் இன்னும் எவ்வளவோ விதங்களில் முன்னேற்றமடையவேண்டி இருக்கிறது. நாட்டில் விளைச்சல் போதாது. துணிப்பஞ்சமும் தீர்ந்தபாடில்லை. உள் நாட்டுவிரோதமும், வைஷம்யமும், பொறாமையும், அறியாமையும், ஏழ்மையும் தொலைய வேண்டும். நாட்டின் பிரஜை என்பவன் ஒவ்வொருவனும் கல்விமான் ஆகவேண்டும். எல்லோரும் ஒருமித்து சகஜ சிநேகத்துடன் கலந்து தேச சேவையில் ஈடுபடவேண்டும். மற்றும் நாட்டின் பொருளாதார நிலைமை, கைத்தொழில், கலை, இலக்கியம், நாகரீகம்......ஒவ்வொன்றும் தழைத்தால் அல்லவா நாடு முன்னேற்றமடைவதற்கு?

நம்மில் ஒரு தவறான எண்ணம் வேரூன்றி இருக்கிறது. கோணல் வகுடு, முகத்துக்கு பௌடர், உதடுக்கு லிப் ஸ்டிக், காலுக்கு 'ஹை ஹீல்ட் ஷூஸ்' அணிந்து, 1949-ம் பேஷன் புடவையைக் கட்டிக்கொண்டு குலுக்கிமினுக்கிக்கொண்டு நடந்தால் நாகரீகத்தின் உச்சஸ்தானத்தை அடைந்துவிட்டதாக எண்ணம். அப்படி இல்லை. உண்மையாக நாகரீகமென்றால், முன்னேற்றமடைந்தவன்—(இதற்கு சம்ஸ்கிருதத்தில் சம்ஸ்கர்த்ரு என்று பெயர்=சீராக்குபவன்) தன் தாய்நாட்டைச்செழிப்புறச் செய்து தானும் முன்னேறியவன் என்று அபிப்பிராயம். காரியத்தில் ஒரு சாமர்த்தியம், புத்தியில் ஒரு சுறுசுறுப்பு, குணத்தில் தங்கம், தேசசேவையிலும் பரோபகாரத்திலும் ஒரு ஆர்வம், நடைநுடியில் ஒரு காம்பீர்யம்... இத்தகையவன் தான் நாகரீகன் எனப்படுவான்.

நம்நாட்டு மக்களில் ஒவ்வொருவரும் இந்த அனுஷ்டானங்களைக் கடைப்பிடித்தால்தான் தேசம் முன்னேற்றமடைந்து சிறப்பாக விளங்க முடியும். ஒருவருக்கொருவர் பொறாமைப்படுவது, அல்லது "நாட்டுக்கு நாம் செய்வது என்ன இருக்கிறது? அரசாங்கம் இருக்கு, தலைவர்கள் இருக்கிறார்கள். அது அவர்களுடைய பொறுப்பு," என்று தங்கள் பாட்டைத் தாங்கள் பார்த்துகொண்டுவிட்டால், நம் நாட்டில் இன்று நிலவிவரும் உணவுப்பஞ்சம் ஏழ்மை, ஜாதி மத பேதம், மாகாணப் பிரிவு நோய்......இத்தகைய பெரும் நோய்கள் சிட்டாய்ப் பறந்துபோய் நாடு சுபிக்ஷமடைவது சாத்தியமாகுமா? தேசத்தலைவர்களும், அரசாங்கமும் உணவுப்பஞ்சத்தையும் வேறுவித கஷ்டநிஷ்டூரங்களையும் நீக்கிவிடவும், பொதுமக்களின் சுகத்துக்காகவும் எவ்வளவோ திட்டங்களை வகுத்துகொண்டுதான் இருக்கிறார்கள். ஆனாலுங்கூட ஒவ்வொரு இந்தியனும், இந்தியப்பெண்ணும் நாட்டு நன்மைக்காகவும், முன்னேற்றத்துக்காகவும் கூடுமானவளவு உழைத்துத்தான் ஆகவேண்டும்.

பார்க்கப்போனால் சின்ன விஷயம். ஆனால், நாட்டுக்கு ஏற்பட்டுள்ள உணவுப் பஞ்சத்தில் ஒவ்வொரு அரிசிமணியும் ஒவ்வொரு பவுன் சமானம் ஆகிவிட்டது. பவுனை வாங்கிக்கொள்பவர்கள் இருந்தால்தானே அதற்கு விலையுண்டு. ஆனால், உணவின்றி மனிதன் பிழைத்திருக்கமுடியுமா? நாட்டில் உணவுப்பொருள் செழிப்பாக விளைச்சல் ஆகி வயிறு நிறைய

சாப்பிட்டு உடல் மறைய உடுத்து நமக்குக் கண்டுமிஞ்சிய உணவுப் பொருளை பிறநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து நாட்டில் வியாபாரமும் கைத் தொழிலும் ஓங்கிவளர்ந்தால் தானே தேசம் சுபிக்ஷம் அடைய !

வீட்டு வாசலில் வந்து "அம்மா, பிச்சை!" என்று வேண்டி நிற்கும் பிச்சைக்காரனை "போடா போ, இந்த ரேஷன் காலத்தில் பிச்சையாம் பிச்சை !" என்று விரட்டி ஓட்டும் காலமாக இருக்கிறதே! அவ்விதம் செய்யாதீர்கள் தாய்மார்களே ! அதற்கு நான் ஒரு உபாயம் சொல்கிறேன். ரேஷன் அரிசியை வீட்டுக்கு வாங்கி வந்தவுடன் பிரத்யேகமாக ஒரு டப்பாவில் தரித்திர நாராயண சேவைக்கென்று அரை ஆழாக்கு அரிசி ஒதுக்கிவைத்து சேகரித்து வாருங்கள். வீட்டுவாசலில் வந்து நின்ற பிச்சைக்காரனுக்கு இல்லை என்று விரட்டாமல் ஒருபிடி போட்டு அனுப்புங்கள். நம் வயிற்றுக்கு மாதத்தில் ஒரு வேளை சாதம் காணுவிட்டால் தேவலை. அஜீர்ணத்துக்கு மருந்து தானே ! ஆனல், அந்தப் பிச்சைக்காரனுக்கோ பெரிய ஐசுவரியம் கிடைத்தமாதிரி ஆனந்தம்.

ஒரு காலத்தில் தனலக்ஷ்மியாகவும், பாக்கிய லக்ஷ்மியாகவும், தானிய லக்ஷ்மியாகவும் வைபவமாக விளங்கிய நம் பாரதமாதா இப்பொழுது தன் சொந்தக் குழந்தைகளுக்கே உண்ண உணவின்றி பரிதவிக்கிருள். இது அவள் தவரு? அவளுடைய குழந்தைகளின் தவரு? அவளுடைய குழந்தைகளின் சோம்பலே காரணம். பொருளாதார நிலைமையும் மற்றொரு காரணம். இதோ, ஒரு கஜம் நிலத்தை வெட்டிபாத்திபண்ணி ஒரு பிடி கொள்ளுக்காய் விதை நடுங்கள். நாள்தோறும் 'ஒரு இத்தனை ஜலம்' ஊற்றிவந்தால் போதும், ஒரே மாதத்தில் பலனைக் காண்பீர்கள் ! நம் ராஜாஜி சொல்வதுபோல் பூமாதேவி தயாவதி கருணமயி ஒருமாதத்துக்குள் உங்களுக்குக் கொத்துக் கொத்தாய் கொள்ளுக்காய் கொடுப்பாள் ! ஒருபிடி விதைக்கும், உங்கள் சொற்பசேவைக்கும் சுமார் ஒரு வீசை, இரண்டு வீசை கொள்ளுக்காய் (beans) உதவுகிருள் !

இப்பொழுது நம் அரசாங்கமும், தேசத்தலைவர்களும் என்ன உபதேசிக்கிருர்கள் ? "நிறைய உணவுப்பொருள் விளையுங்கள். உங்கள் ஏழை சகோதர சகோதரிகள் ஆயிரம் பதினயிரம்பேர் ஒருவேளை சாப்பாட்டுக்கும் உணவின்றி பரிதவிக்கிருர்கள். அப்படி நாலு அரிசிமணி கிடைத்தாலும் வாங்கப் போதிய பணமின்றித் தவிக்கிருர்கள். உணவுப் பொருள் அதிகம் விளைச்சல் செய்தால் பொருள்களின் விலையும் குறையும். உங்கள் ஏழை சகோதர சகோதரிகள் பட்டினியால் பரிதவிக்கையிலே, நீங்கள் பண்டிகை, பருவம், விருந்து, சமாராதனை என்று அனுவசியமாக ஆடம்பர சாப்பாடுக்கு உணவுப்பொருளை செலவழிக்கவேண்டாம். அதிகமான சாப்பாட்டை நிறுத்தினல் அந்த தானியம் ஏழைகளுக்கு உபயோகப்படும்.........இவ்வாறு உருக்கமாக வேண்டிகொள்கிருர்கள் நம் நாட்டுத் தலைவர்களும், அரசாங்கமும்.

இனி வரிசையாகப் பண்டிகைகள் ! 'இந்தப் பண்டிகைக்கு இட்டிலி கொழுக்கட்டை, அடுத்த பண்டிகைக்கு முறுக்கு, பூரி, கூடக் கொஞ்சம் தேன்குழல் பிழிந்து அதிரசமும் தட்டிவிட்டால் சரி. குழந்தை கோபு கேட்கிருன் பாவம். கொஞ்சம் சிரோட்டியும் செய்தால் என்ன ? ஒரு இத்தனை அதிகப்படி விலைகொடுத்தால் கறுப்பு மார்கெட்டில் 'பஸ்ட்கிளாஸ்' ரவா கிடைத்தேகிடைக்கிறது. வருஷத்துக்கு ஒரு முறை பண்டிகை. ஜோரான விருந்துசெய்து கொண்டாடவேண்டாமா"......இவ்வாறு தயவு செய்து திட்டங்கள் போடாதீர்கள் சகோதரிகாள்.

உண்ண உணவின்றி கோடிக்கணக்கான மக்கள் பரிதவிக்கிறார்கள் என்றேனே. நனம் அரசாங்கத்தின் தயவால் நாம் தற்பொழுது வயிறார புசிக்கிறோமே, போதாதா? அந்த முறுக்கு, இட்டிலி, கொழுக்கட்டை, ரொட்டி இவைகளுக்கு உபயோகிக்கும் அரிசியையும், கோதுமையையும் ஏழைமக்களுக்கு விட்டுக்கொடுக்கள். கறுப்பு மார்கெட் முகத்தை மாத்திரம் பார்க்கவேகூடாது. மகா பாவச்செயல் அது. சிலர் "கறுப்பு மா... கெட்டுக்கு போவானேன்? எங்கள் வீட்டு ரேஷன் தானியத்திலேயே கொஞ்சம் கொஞ்சமாகக் கூட்டிவைத்துக்கொண்டு பண்டிகையை ஜோராகச் செய்தேன். செய்யப்படாதா என்ன?" என்கிறார்கள். அப்படியானால் உங்கள் ரேஷனில் அதிகப்படி மிஞ்சுவதானால் அதை தயவு செய்து இட்டிலி, கொழுக்கட்டை, முறுக்கு செய்வதற்கு பதிலாக, உங்கள் ரேஷன் ஆபீஸருக்குத் தெரிவித்து அந்த அதிகப்படி தான்யத்தை வாங்காமல் விட்டுக்கொடுத்துப் புண்ணியத்தை சம்பாதித்துக்கொள்ளுங்கள். இதை விட உயர்ந்த புண்ணியம் வேறு இல்லை.

"பண்டிகை நாளில், நமக்கு இல்லாவிட்டாலும் சுவாமி... வாவது இத்தனை பக்ஷணம் செய்யவேண்டாமா?" என்று சகோ... கேட்கலாம். சுவாமிக்கு மனமாரத் தேங்காயும், பழமும் நைவே... செய்தால் போதும். இந்த இட்டிலி கொழுக்கட்டை யெல்லாம் நம்... ருக்குத்தானே! பல வீடுகளில் பார்த்திருக்கிறேன் பண்டிகைச் செய்யும் பக்ஷணவகைகள் சுவாமி நைவேத்தியத்துக்கு முன்ப... மாயமாகிவிடுவதை!

தற்சமயம் உங்கள் அகங்களின் முற்றங்களில் புஷ்பச்செ... பயிரிடுவதை நிறுத்துவது நன்மை. அந்த இடங்களில் கறிகாய் செ... தயவுசெய்து பயிரிடத்தொடங்குங்கள். மார்க்கெட்டில் யானைவிலை கொ... கறிகாய் வாங்கவேண்டாம் அல்லவா? வீட்டில்விளைந்த புத்தப்புது க... செட்டுசெய்யாமல் தாராளமாகவும் சமைத்துப் பரிமாறலாம், ... குறையும். சாப்பாட்டில் அரிசியைக் குறைத்து கறிகாய் அதி... உபயோகிப்பதால் உடலுக்கும் நல்ல போஷணை, அரிசியும் கூடி... வீடுதோறும் இந்த அற்பகாரியத்தைத் தொடங்கினால் நாளடைவில் ந... உணவுப்பஞ்சம் நீங்கி, பொருளாதார நிலைமையும் சீர்பட்டு நாடு ... மடையலாம் அல்லவா? சிறுதுளி பெருவெள்ளம்! நாட்டின் ஆக்க... யில் ஒவ்வொரு பிரஜைக்கும் கடமையுண்டு. நம் நாட்டில் இந்த உ... பஞ்சம் நீங்கினால் பெரிய தொரு கண்டாந்தரம் கழிந்த மாதிரி. அதன்... நாட்டுத் தலைவர்களுக்கும், அரசாங்கத்துக்கும் மற்ற பெரிய ... பொறுப்புகளைச் சுலபமாக நிறைவேற்ற அவகாசம் ஏற்படலாம்.

யோகி சுத்தானந்த பாரதியார்
இயற்றிய
காந்தி கீர்த்தனம்
350 பக்கங்கள். ரூ. 3-8-0.
உயரிய கிளேஸ் பதிப்பு.
இதைப் படித்தால் வாழ்க்கை புனிதமுறும்; சக்திபெறும்.
ஷ பதிப்பின் லாபம் மகாத்மாஜி சேவா சங்க இலவசச்
சம்பள நிதிக்கே!

என் சுய சரிதை

சகோதரி R. S. சுபலக்ஷ்மி அம்மாள்

(சென்ற இதழ் தொடர்ச்சி)

கோடைக்கானல் வாஸம்

கொடைக்கானல் குளிர்ச்சியான இயற்கைக் காக்ஷிகள் நிறைந்த ஒரு
லைப்பிரதேசம், நீலகிரியைச் சேர்ந்த உதகமண்டலம், உதகம் என்னும்
த்துக்கேற்ப சற்று ஈரடியானது நீராவி நிறைந்த வாயு மண்டலம்.
லும் செயற்கை மிகுந்த பட்டணவாசத்துக்குச் சமமானது. கொடைக்
ல் வறட்சியான பிரதேசம். அநேகம் நாட்களில் 2, 3 மணிக்குமேல்
கள் சூழ்ந்துகொண்டு வந்து மழை கொட்டும். மழை நின்றவுடன்
ல்லாம் வடிந்துபோய் உடனே நன்றாக வெக்காளித்துவிடும்.
பாய்க்கொண்டிருக்கும்போதே மேகங்கள் வந்து நம்மைச் சூழ்ந்து
காள்ளும். ஒருவர் முகம் ஒருவருக்குத் தெரியாது; குளிர்ந்த
நம்மேல் படிந்து 'ஜில்' என்ற உணர்ச்சியை நமக்கு உண்டாக்கும்.
த்தில் நம்மைத் தாண்டிக்கொண்டுபோய்விடும். சில நாட்களில்
மாய் பனிக்கட்டி மழை கொட்டும். முதல்தடவை அது எங்களுக்கு
மாய் இருந்தது. நாங்கள் இருந்த வீட்டின் சிலபாகம் மேலே
கரம் மூடினது. அதன்மேல் படபடவென்று மிருந்த ஓசையுடன்
டி விழுந்து உருண்டு கீழே விழுந்தது. மழை நின்றவுடன் குழந்
பாத்திரங்களை எடுத்துக்கொண்டு வெளியில் காம்பவுண்டுக்குள
னிக்கட்டிகளை அள்ளிக்கொண்டுவந்தார்கள். குழந்தைகளுக்கு
தமாஷாயிருந்தது.

காடைக்கானலில் பிரதிதினமும் காலைமாலைகளில் 2, 3 மணிநேரம்
தேசிவிட்டு வருவோம். சிரமமே தெரியாது. அந்த வருஷம் முதன்
ஏழை ஏரியில் படகுவிடக் கற்றுக்கொண்டோம். "பில்லர் ராக்ஸ்"
பாட் தூண்களைப் போன்ற 2 பாறைகள்), சமதரை கண்ணுக்குப் புலப்
இடை "கோகர்ஸ் வாக்" தேவலோக நீர்வீழ்ச்சி என்னும்படியான Fairy
பொழுஇன்னும் இது போன்ற அநேகம் நீர்வீழ்ச்சிகள் இத்தியாதி. சில
யும். காலையில் புறப்பட்டுச் சென்று சாயங்காலம் திரும்புவோம். எங்
யிலேவீட்டுக்குச் சமீபத்திலேயே ஒரு அழகிய நீர்வீழ்ச்சி. பிரதிதினம்
வசியசன்று ஸ்நானம் செய்துவருவோம். அந்த ஊரில் போலீஸ் இலா
டாம் வேலையாயிருந்த ஸ்ரீமான் நாராயணசாமி அய்யரும் அவர் மனை
உபநேங்களுக்கு மிகவும் உதவியாயிருந்ததுடன் பல இடங்களையும் அவர்
நம் ஙங்களை அழைத்துச் சென்று காட்டினார்கள். அந்தக் காலத்தில்
ரும் ஜனத்தொகையும் குறைவு. அநேகம் இடங்களில் அடர்ந்த காடு
கொ காட்டுப்பன்றி, நரி, சிறுத்தை முதலான துஷ்ட மிருகங்களும்
தேம். நாராயணசாமி அய்யர் துப்பாக்கி சகிதம் வருவார். பில்லர்
ரேர் போன அன்று அடிவாரத்தில் நாங்கள் தங்கியிருந்தபோது, எங்க
இன் வந்த ஒருவர் வேண்டுமென்றே எங்களை பயப்படுத்துவதற்காக
ரன ஏதோ ஒரு துஷ்ட மிருகம் துரத்தி வருவது போல அலறிக் கத்திக்
ண்டு தடதட வென்று இறங்கி ஓடி வந்தார். நாங்கள் நிரம்பபயந்தே
யவிட்டோம். நாராயணசாமி அய்யர் துப்பாக்கியை எடுத்துக்கொண்டு

மிருகத்தை சுட்டுக் கொல்வதற்குக் கிளம்பிவிட்டார். பிறகு அது வெறும் "பூச்சாண்டி" யென்று தெரிந்த பிறகு ஓரே சிரிப்பும் கொம்மாள முந்தான். ஆயினும், எங்களுக்குண்டான படபடப்பும் ஹிருதயத்துடிப்பும் அடங்க சிறிது நேரம் ஆயிற்று.

2 மாதமாவது பூர்த்தியாக இருக்கவேண்டுமென்று எங்கள் ஏற்பாடு. ஆனல், கடவுள் செயல் வேறு விதமாயிருந்தது. எங்கள் தகப்பனர் சில காலமாகவே Piles என்றும் வியாதியினல் சிரமப்பட்டுக்கொண்டிருந்தார். அது இந்த சமயம் அதிகமாகி வலி பொறுக்கமுடியாமல் போயிற்று. ஆகவே மே மாதம் 26-ந்தேதி ரெவரென்ட் டாக்டர் வில்ஸன் என்னும் ஒரு ஐரோப்பிய டாக்டர் வீட்டுக்கே வந்து மயக்கமருந்து கொடுத்து ஆபரேஷன் செய்தார். குளிர் ஊர் ஆனதால் புண் சீக்கிரத்தில் ஆறவில்லை. டாக்டர் யோசனையின்படி, பெரியகுளத்துக்கு ஜூன் 7-ந்தேதி யன்று புறப்பட்டோம். பஸ்ஸில் ஆட்டம் அதிகம் என்பதற்காக ஒரு டோலியில் அப்பா அவர்களை சௌகரியமாகப்படுக்கவைத்து குறுக்கு வழியில் நாங்கள் இறங்கினேம். அந்த வழி 12 மைல். இறங்குவது எளிதாயிருந்தது. இரண்டு பக்கத்திலும் அடர்ந்தகாடு. மித சிதோஷ்ணத்தில் வளரும் பெரிய Ferns என்னும் செடிகள், மூங்கில் புதர்கள், பெரிய விருக்ஷங்களின் மேல் ஏறிப் படரும் பிரம்புச் செடிகள், அழகிய பெரிய காட்டுப் புஷ்பங்கள் இத்தியாதி; இறக்கத்தில் வர வர, சமபூமியில் வளரும் தென்னை, வாழை மா, பலா, அத்தி, அரசு இத்தியாதி. பெரியகுளத்தில் அப்போது முன்ஸீப்பாயிருந்த ஸ்ரீமான் C. V. கிருஷ்ணசாமி அய்யர், வக்கீல் ராமசுப்பய்யர் இவர்களது உதவியின், ஸ்ரீமான் சுப்பையா செட்டியாரின் பங்களாவில் 1 வாரம் தங்கினேம். பங்களாவின் எதிரில் ஒரு நதி. வீட்டைச் சுற்றி அழகிய தோட்டம். அப்பா அவர்களுக்கு அந்த ஒரு வாரத்தில் சௌக்கியம் ஏற்பட்டுவிட்டதால், ஜூன் 14-ந்தேதி புறப்பட்டு பழனிக்குப் போனேம். அந்தக் காலத்தில் திண்டுக்கல்லிலிருந்து பழனிக்கு பஸ்ஸில் போகவேண்டும். அங்கு என் அத்தை புதல்வர் மகாதேவன் வேலையிருந்தார். அவருடைய உதவியுடன் பழனியாண்டவரை தரிசனத்து செய்துகொண்டு எங்கள் கிராமங்களாகிய ரிஷியூர், வைகளத்தூர் பார்த்து விட்டு, பிறகு திருவாரூர் தஞ்சாவூர் இந்த ஊர்களில் தங்கி, பெரிய கோவில், தஞ்சை அரண்மனை எல்லாம் பார்த்துவிட்டு ஜூன் 26-ந்தேதி சென்னைக்குத் திரும்பினேம்.

ஜூலை முதல்தேதி பாடசாலை திறக்கப்பட்டது. ஜூலை 7, 8 தேதிகளில் ஹிந்துஸ்தானியில் Compulsory Test எழுதித் தேர்ச்சியடைந்தேன். முதல் உலக மகா யுத்தம் முடிந்து இந்த வருஷம் ஜூலை 19-தேதியன்று சமாதானக்கொண்டாட்டம் இந்தியா முழுவதிலும் மிகவும் சந்தோஷமாகக் கொண்டாடப்பட்டது. எங்கள் குடும்பத்தாருக்கு இது ப்ரத்யேகமான சந்தோஷ சம்பவம் அல்லவா? ஏன் என்றல் 4 வருஷங்களாக யுத்த இடங்களிலேயே Field டாக்டராயிருந்து எத்தனையோ குண்டுகளுக்கும் ஆபத்துக்களுக்கும் தப்பி, என் தங்கை சாவித்திரியின் கணவர் காப்டன் துரைசாமி ஸெப்டம்பர் மாதம் 8-ந்தேதி வந்துசேர்ந்தார். புராணத்தில் கூறப்படும் சாவித்திரிதேவி தன் பக்தியினல் யமனிடமிருந்து தன் கணவச் சத்தியவானை மீட்டுவந்ததுபோல, எங்கள் சகோதரியின் பூஜாபலனை அவள் கணவரும் சௌக்கியமாக வந்துசேர்ந்தா ரென்று நாங்கள் யாவரும் கரையில்லாக் களிப்புக்கடலில் மிதந்தோம். 10நாள் சென்னையிலிருந்துவிட்டு சாவித்திரி குழந்தைகளுடன் பங்களூரில் கண்டோன்மெண்டில் ஒரு அழகிய பங்களாவில் தங்கி அவி

டத்து மிலிடரி ஆஸ்பத்திரியில் வேலைக்கு அமர்ந்தார். காந்தாமணிமாத்திரம் சென்னையிலேயே தங்கிப் படித்துக்கொண்டும் லீவுகளுக்கு பங்களூர் போய்க்கொண்டுமிருந்தாள். ஜூலை மாதத்தில் ஒரு பியானோ வாங்கி ஸ்வர்ணம் வித்யா காந்தாமணி மூவரும் ஆங்கில சங்கீதமும் வீணை வாத்தியமும் தொடர்ச்சியாகக் கற்றுவந்தார்கள்.

அக்டோபர் 11-ந்தேதி என் சகோதரி பாலம் பிரஸவித்து 5-ஆவது புதல்வன் (எட்டாவது குழந்தை) கிருஷ்ணன் பிறந்தான். பிரஸவித்த 5 நாட்களுக்குப்பிறகு திடீரென்று ஜன்னி உண்டாகி ஞாபகமின்றிப்பிதற்ற ஆரம்பித்துவிட்டாள். கடவுள் கிருபையில் சௌக்கியமாகி எழுந்தாள்.

அக்டோபர் 25-ந்தேதி (Aural Institute) தலைவர் டாக்டர் சங்கர நாராயணப்பிள்ளை என் தொண்டையில் ரணப்பட்டுப் போயிருந்த (Tomsils) இரண்டையும் ஆபரேஷன் செய்து எடுத்தார். இந்தக் காலத்தில் மயக்க மருந்து கொடுத்துத்தான் "டான்ஸில்"களை எடுப்பார்கள். அந்தக்காலத்தில் என்னுடைய பாக்கியம், மயக்கமருந்து இல்லாமலே அரைமணிநேரம் பலவித ஊசிகள் கத்திகளின் உதவியுடன் ஆபரேஷன் நடந்தது !! அதுவரையும் சரியாயிருந்த என் பாம்புச்செவிகள், ஏதோ நரம்புக்கோளாறினால் உணர்ச்சி குறைய ஆரம்பித்தன. 1 வருஷ காலம், வாரம் இரண்டு முறை, காலையில் ஐஸ்ஹௌஸிலிருந்து டவுனில் பிராட்வே கோடியிலுள்ள "ஔரல்" ஆஸ்பத்திரிக்குப் போய் இன்ஜெக்ஷன், காந்த வைத்தியம் எல்லாம் செய்துகொண்டும் பலனில்லை. "இனிமேல் நீங்கள் வரவேண்டாம்; நல்ல ஆகாரம் சாப்பிட்டு தேகாப்பியாஸம் செய்துகொண்டு இருந்தால் கூடியமட்டும் அதிக மோசமின்றிக் காதுகேட்கும். "பட்டினிகிடந்தால் கண் இருண்டு காது பஞ்சடைந்துவிடும்" என்பார்கள். நீங்கள் சரியான அளவு ஆகாரம் உண்பது இல்லையென்று நினைக்கிறேன்." என்று எல்லாம் பேசிவிட்டு அவருக்குச் சேரவேண்டிய தொகையைப்பெற்றுக்கொண்டார். அதன்பிறகு ஒன்றிரண்டு பெரிய ஐரோப்பிய டாக்டர்களிடமும் காட்டியபின் அவர்களும் 'விமோசனம் இல்லை' என்று கைவிரித்துவிட்டனர்.

ஸர். வே. ப. ராமேசத்தின் கிட்டின பந்துவான ஒரு பெண் அன்னபூர்ணி என்பவள் ஆச்ரமத்தில் படித்து S. S. L. C. முடித்து மேரியரசி கல்லூரியில் படித்துக்கொண்டிருந்தவளுக்கு திடீரென்று காச நோய் வந்து நிரம்ப கஷ்டப்பட்டாள். திருவல்லிக்கேணியிலேயே ஒரு வீடு வாடகைக்கு எடுத்துக்கொண்டு அவள் தாயாரும் சகோதரர்களும் வந்து இருந்துகொண்டு வைத்தியம் செய்தும் அனுகூலமில்லாமல் நவம்பர் 9-ந்தேதி அவள் பரமபதமடைந்தாள். ஆச்ரமத்தில் என்னிடம் படித்த பெண்களில் சிறந்த குணமும் அறிவும் வணக்கமும் உள்ள பெண் அவள். பெற்றோர்களுக்கு ஒரே அருமையான பெண். கஞ்சம் ஜில்லா ஸ்ரீகாகுளத்தைச் சேர்ந்தவர்கள். அவளது மாமா ஒருவர் ஸ்ரீமான் நரஸிம்மம் லண்டனில் பாரிஸ்டர் முடித்து அங்கேயே இருந்து வக்கீல் தொழில் நடத்தினர். ஆந்திர தேசத்திலிருந்து என்னிடம் படிக்க வந்த பெண்களில் அவளே முதன்மையானவள். மற்றவர்கள் வந்து படிப்பதற்கும் வழிகாட்டியாக இருந்தவள். ஆக, அத்தனை உத்தமமான அன்னபூர்ணியின் பிரிவு அவளது பந்துக்களுக்கேயன்றி எங்கள் யாவருக்குமே தாங்க முடியாத வருத்தத்தை உண்டாக்கிற்று. அவள் படித்து முன்னுக்கு வந்த ஆச்ரமத்திலும் கல்வியிலும் அவளுக்கிருந்த ஆர்வத்துக்கு அடையாளமாய், சுமார் ரூ 1500 தொகையை ஸ்ரீமான் ஜஸ்டிஸ் ராமேசத்தினிடம் கொடுத்து அதை ஒரு தெலுங்குப்பெண்ணின் படிப்புக்கு உபயோகப்படுத்தும்படி உயில் எழுதியிருந்தாள். ஜி சுப்பரத்னம் என்ற ஒரு பெண்ணுக்கு

"மோகன காந்தன்" சிறு கதை

ரஸிகர் ரஸித்தார்!

கங்காசுதமுதலியார் காலையில் எழுந்திருக்கும்போதே மணி எட்டு ஆகிவிட்டது. அப்பொழுதுங்கூட மனமில்லாமல்தான் எழுந்திருந்தார். அபிநயம் பிடிப்பதுபோல உடம்பை வளைத்து முறித்துக்கொண்டே, கொட்டாவி விட்டார். அப்பொழுதுதான் அவருடைய வீட்டிற்கு அடுத்தாற்போலுள்ள, சாயக்கடை வானொலிப் பெட்டி, "நாட்டியக் கலையே" என்று பாட ஆரம்பித்தது. "கவலையைத் தீர்ப்பது நாட்டியக் கலையே" என்றதும் பாட்டில் மகிழ்ந்து கவலையை மறந்துவிட்டார். எழுந்துபோய்க் கை கால்களைக் கழுவிக்கொண்டு வந்து, காப்பி சாப்பிட்டுவிட்டு, அப்பொழுதுதான் வந்திருந்த பத்திரிகையைப் புரட்டினார். அவர் கண்களில் முதன் முதலில் ஒரு விளம்பரம்தான் பட்டெனக் காணப்பட்டது. 'நாட்டியக் கச்சேரி, இன்று மாலை 6–30 மணிக்கு சங்கீத சம்மேளன சபாவில், 'நடன கலா நிதி' திருமதி குமாரி மீனாட்சியின் அபிநயமும், நாட்டியமும் நடைபெறும். டிக்கெட்

மாதம் ரூ 15 வீதம் கொடுத்து அவளை S. S. L. C. வரைக்கும் அன்னபூரணி ஸ்காலர்ஷிப்பில் படிக்கவைத்தோம். அவள் B. A. L. T. முடித்து இப்போது கவர்மெண்டு வேலையிலிருக்கிறாள்.

1919-ஆம் வருஷம் கிறிஸ்துமஸ் விடுமுறையில் நாங்கள் பெங்களூர் போய் அங்கு எங்கள் அருமையான சகோதரி சந்தோஷமாக அவள் கணவருடன் குடித்தனம் செய்வதைப் பார்த்துவிட்டுப் பிறகு ஷிமோகா வழியாய்ச் சென்று உலகத்து நீர்வீழ்ச்சிகளுக்குள் மிக உயரமான ஜர்ஸப்பா (Jersoppa) நீர்வீழ்ச்சியைப்பார்த்துவந்தோம். இந்தக்காலத்தில் பஸ்கூட கிடையாது. இரண்டு மாட்டு வண்டிகளில் போனோம். துஷ்ட மிருகங்களுடன் கூடிய காட்டுப்பிரதேசத்தில் இருக்கிறது. இரவில் அங்கு யாருமே தங்குவதில்லை. வண்டியில் போகும்போதே வழிமுழுவதும் உள்ள இயற்கைக்காக்ஷி கவர்ச்சியானது. ஜர்ஸப்பா நீர்வீழ்ச்சி 4 பிரிவானது. ஷாராவதி நதி 960 அடி உயரத்திலிருந்து 4 பிரிவாகக் கொட்டுகிறது. அவற்றுள் ராஜா நீர்வீழ்ச்சி முக்கியமானது. நீர்வீழ்ச்சிகளின் வேகத்தினால் அடிபாகம் தேய்ந்துதேய்ந்து அகாதமான ஒரு பெரிய பள்ளமாகவிருப்பதால் நீர்வீழ்ச்சி அந்தப்பள்ளத்தில் ஒரே இரைச்சலுடன் "ஹோ" வென்று கொட்டி அதிலிருந்து வெண்மையான பால் நுரை போல மேலே பொங்கிக்கிளம்பி தூவானம் போல ஜலத்திவலைகளை அதிக தூரம் வீசியடிக்கும் காக்ஷி மறக்கவே முடியாது. கொஞ்ச தூரத்தில் எதிரில் உட்கார்ந்து இந்த மகோன்னதமான இந்தக்காக்ஷியைப் பார்த்துக்கொண்டேயிருந்தால் கவலை யெல்லாம் நீங்கிப் பரவசத்தையடைந்து பேரின்பத்தில் முழுகிவிடலாம். கடவுள் இயற்கையுடன் கலந்து காக்ஷியளிக்கும் இப்படிப்பட்ட இடங்களில்தான் பெரிய மகான்களான ரிஷிகள் தங்கியிருந்து தியானத்திலும் யோகத்திலும் ஈடுபடுகின்றனர். சிற்க, ஒரு பகல் முழுவதும் அங்கு தங்கியிருந்து பிறகு பங்களூர் திரும்பினோம். மறுபடி ஒருமுறை சிவசமுத்திரம் போய் அங்குள்ள காக்ஷிகளைக் கண்டுகளித்து 1920, ஜனவரி 5-ந்தேதி சென்னை திரும்பினோம். அன்றைக்கே Compulsory Test தெலுங்கு பரிக்ஷைக்குப் போய்த் தேர்ச்சிபெற்றேன். மறுநாள் 6-ந் தேதி பாடசாலை ஆரம்பம்.

வரியுள்பட விவரம்: ரூ. 10, 5, 2, 1. குறிப்பு:—நன்கொடையாள ருக்குப் பிரத்தியேகப் பீடம் ஏற்பாடு செய்திருக்கிறோம்."

இதைப் பார்த்ததும், அவருக்கே ஆச்சரியமாய்விட்டது. காலையில் எழுந்ததும் நாட்டியக் கலையைப் பற்றிய பாட்டைக் கேட்டதும், இப்பொழுது நாட்டியக் கச்சேரியைப் பற்றிய விளம் பரத்தையும் பார்த்தபோது அவருக்கு வியப்பாயிருந்தது. இந்த நாட்டியத்தைப் போய்ப் பார்த்துவிடுவதென்று முடிவுகட்டினார். மனந்துணிந்து பத்துரூபாய் கொடுத்து ஒரு பீடத்தைப் 'பதிவு, செய்துகொண்டார். சாயங்காலமானதும் 4 மணிக்கே சங்கீத சம்மேளன சபாவிற்குப் புறப்பட்டுப்போய்விட்டார். முதலி யாருக்கு நாட்டியத்தைப் பார்க்கவேண்டுமென்ற ஆசை அளவு கடந்திருந்தது. கச்சேரிக்கே, முதன் முதலில் வந்திருந்தவர் அவர் தான். இன்னும் இரண்டுமணிநேரம் ஆகும் என்பதை உணரும் போது, அவருக்கு வேதனையாக இருந்தது. இரண்டுமணி நேரத் தையும் இரண்டு யுகமாகக் கழித்துவிட்டார். ஆனால், குறிப்பிட்ட நேரத்தில், நாட்டியமும் ஆரம்பமாகாமல் போகவே, அவருக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. "குமாரி" மீனு குறிப்பிட்ட நேரத்தில் வரமுடியாமல் ஏதோ அசௌகரியம் ஏற்பட்டதால், தாமதம் நேரிடவே, சபையில் கரகோஷங்கள் கிளம்பின. முதலி யாரின் கோஷந்தான் அதில் அதிகமாகக் கேட்டது. ஒருமணி நேரம் கழித்து நாட்டியம் ஆரம்பமாயிற்று. சதசில் முதல் வரிசை யில் உட்கார்ந்து, தன்னைமறந்து நாட்டியத்தை ரசித்துக்கொண் டிருந்தார். உசேனி ராகத்தில், "உன்னைக் கண்டதுமுதல், என் உள்ளம் தன் நிலை தளர்ந்ததே" என்ற துக்கடாவை அபிநயம் பிடித் தாள் குமாரி மீனு.

கண்களை ஒரு முறை சதஸை நோக்கித் திருப்பினாள். அந்தப் பார்வை தன்னைத்தான் பார்த்ததாக எண்ணிக்கொண்டு, அகமகிழ்ந் தார் முதலியார். சட்டை, தலையெல்லாம் ஒழுங்காக இருக்கிறதா என்று ஒரு தடவை பார்த்து சரிபடுத்திக்கொண்டார். மீண்டும் எப்பொழுது பார்க்கப்போகிறாளோ என்று எண்ணிக்கொண்டே மேடையை நோக்கிக்கொண்டிருந்தார். நாட்டியம் முடிந்ததும் வீட்டிற்கு வந்துசேர்ந்தார் முதலியார். வந்து ஒரு நிமிடத்திற் கெல்லாம் அடுத்த சாயக்கடையிலுள்ள வானொலிப்பெட்டி "ஆனந்த நடனம் ஆடினாள், சச்சிதானந்த நடனம் ஆடினாள்" என்ற நாம போதிக் கீர்த்தனையைப் பாடியது. அவர் ஆனந்த மிகுதியினால் நின்று அப் பாட்டைக் கேட்க ஆரம்பித்தார். "ஆனந்த நடனம் ஆடினாள், சச்சிதானந்த நடனம் ஆடினாள், பராசக்தி நடனம் ஆடினாள்......" என்று அடுக்கிக்கொண்டே போவதைக் கேட்டு முதலியார் புளகாங்கிதம் அடைந்தார். குமாரி மீனு ஆடிய நடனத் தைத்தான் அப்பாட்டு வருணித்துப் பாடுவதாக எண்ணிக்கொண் டார். இரவு சாப்பாட்டை முடித்துக்கொண்டு, படுக்கைக்குச் சென்றார். சாயக்கடை வானொலிப்பெட்டி, "வதனமே சந்திர பிம் பமே" என்று பாடிக்கொண்டிருந்தது. முதலியார் மீனுவின் சந்

திர பிம்ப வதனத்தை மனம் நிறையத் தியானித்துக்கொண்டே மெய்மறந்து நித்திரைபோனார். கடும் நித்திரை அல்ல!

மறுநாள் மாலை, தென்னையிலிருந்து வெளியாகும் பிரபல பத்திரிகையொன்றில், "குமாரியின் நாட்டியம் இன்னும் எவ்வளவோ முன்னேற்றமடையவேண்டும்." என்று குறிப்பிட்டிருந்தது. இந்த விமர்சனத்தைப் படிக்கும்முன் பார்த்த முதலியாருக்கு, மூக்கிற்கு மேல் கோபம் கொதித்தெழுந்தது. கையிலிருந்த பத்திரிகையை அப்படியே இரண்டாகக் கிழித்துப்போட்டுவிட்டார். 'இந்தப் பத்திரிகைக்காரர்களுக்கு ஒன்றுமே தெரியாது' என்று மனதிற்குள்ளேயே அவர்களுக்கு "முட்டாள்" பட்டம் கட்டிவிட்டார். அப்பொழுதுகூட அவருக்குக் கோபம் தணியவில்லை. பற்களை நறநறவெனக் கடித்தவாறுதான் தமின்றார்.

அந்தச் சமயம் உள்ளே நுழைந்துகொண்டிருந்த ஒரு ஆசாமி முதலியாரின் "ருத்திர மூர்த்தி" அவதாரத்தைக் கண்டு, மெய்நடுங்கி ஸ்தம்பித்து நின்றுவிட்டார். முதலியார் ரௌத்திராகாரமான கோபத்துடன் அந்த மனிதன்மீது பாய்ந்து, "என் ஐயா! நீர்தானா அந்தப் பாழும் பத்திரிகை விமர்சகர்? உமது மண்டையில் என்ன இருக்கிறது!" என்று கத்தினார்.

வந்தவர்:—நான் பத்திரிகைக்காரனில்லையே!

முதலியார்:—பொய் சொல்லாதேயும்; நான் லேசில் ஏமாந்து விடுகிறவனில்லை. ஜாக்ரதை! அன்றுதான் உம்மை ப்ரெஸ் காலரியில் இதர ரிபோர்ட்டர்களுடன் பார்த்தேனே!

வந்:—உண்மையாக நான் பத்திரிகைக்காரனேயில்லை. குமாரி மீனாதான் பார்த்துவரச் சொன்னாள். நான் அவளுக்கு மாமா.

முத:—சரிசரி! மீனா என்னை எதுக்காக வரச்சொன்னாள்.

வந்:—அது எதற்கோ தெரியவில்லை. நேரில் தெரிந்துவிடுகிறது.

முத:—சரி அப்படியானால்புறப்படுவோம் வாரும்.

முதலியார் சட்டையை எடுத்து மாட்டிக்கொண்டார். நெற்றியில் பொட்டிட்டுக்கொண்டார். (சந்தனப்பொட்டுதான்!) முகத்தில் அழகு வழிந்தது! வந்திருந்த ஆசாமியை அழைத்துக்கொண்டு கார்விட்டிருக்கும் இடத்திற்குப்போய் காரில் ஏறிப் புறப்பட்டனர். அந்த ஆசாமி வழி சொல்லிக்கொண்டே போனார். முதலியார் மிடுக்காக காரை ஓட்டிச்சென்றார். கார் குமாரியின் வீட்டை அடைந்ததும் இருவரும் கீழே இறங்கினர். மாமா முன்னே செல்ல, அவரைத் தொடர்ந்து முதலியார் வீட்டிற்குள் நுழைந்தார். முதலியார் மெத்தை ஆசனம்மீது அமர்ந்தார். பிறகு மாமா மீனாவைக் கூட்டிவருவதற்காக கீழே இறங்கிச் சென்றார். முதலியாரின் மனம் அளவிடமுடியாத ஆனந்தத்தில் நிரம்பியிருந்தது. மீனாவின் வரவை ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருந்தார். அந்த ஆசனம் அவருக்கு சுவர்க்கலோகமாக விளங்கியது! அங்கு மாட்டப்பட்டிருந்த படங்களைப் பார்த்துக்கொண்டு ஒவ்வொரு நொடியையும் யுகமாகக் கழித்தார்! அடுத்த அறையில் இசைப் பெட்டி பாட ஆரம்பித்தது. "கண்ணெடுத்தாகிலும் காணீரோ!"

என்ற சிம்மேந்திரமத்திம ராக கீர்த்தனையைச் செவியுற்ற போது, அவள் வந்துவிட்டாளோ என்று பார்த்தார். கண்ணெடுத்துப் பார்ப்பதற்கு அந்தக் கண்ணழகி காத்து நிற்கவில்லையென்பதை உணர்ந்த பிறகு, மீண்டும் படங்களைப் பார்ப்பதில் தமது கவனத்தைச் செலுத்தினர். வெகு நேரமாகியும் குமாரி வந்துசேரவில்லை. முதலியாருக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. மெத்தையிலிருந்து இறங்கும் வழியில்வந்து நின்றுகொண்டு கீழே பார்த்தார். ஒருவரையும் காணுமல்போகவே, மீண்டும் மெத்தையில் வந்து, 'தொப்பென்று' விழுந்தார்! வானொலிப் பெட்டி வேறொரு இசைத்தட்டை ஒலிபரப்பிற்று. "சுகுமாரா! என் தாபம்தனை நீ அறியாயோ? மாரா!" என்று பாடியபோது, முதலியாருக்கு உள்ளம் குளிர்ந்துவிட்டது. மீனு தன்னைநோக்கிப் பாடுவதாகவே நினைத்துக்கொண்டார். "உனது தாகத்தைத் தீர்க்க 'கலர்' கொண்டு வரட்டுமா? எலுமிச்சைப்பழம் "போஞ்சி" (சர்பத்!) வேண்டுமா?" என்று தனது கற்பனை மீனுவிடம் கேட்டுத் தனக்குள்ளேயே சிரித்துக்கொண்டார். மீண்டும் கற்பனை மீனுவை நோக்கி "ஓகோ! காதல் தாபமோ? அதை இப்போது தான் அறிந்தேன்; தீர்த்துவைக்கிறேன் கூடியசீக்கிரம்; கவலைப் படாதே" என்றார். வானொலிப் பெட்டியோ "சிறிதும் கவலைப் படாதே!" என்று கரகர ப்ரியாவில் தன் கானத்தைக் கக்கியது. அப்பொழுது தான் குமாரி மீனு வந்தாள்!

அவளுடைய நடை, உடை, சடை இவைகளின் அலங்காரங்களைப் பார்த்து மகிழ்ந்துள்ள முதலியாரின் செவிகளில், "நடையலங்காரம் கண்டேன், நடையலங்காரம் நளினசிங்காரம்; பின்னல் சடையலங்காரி" என்ற இசை பாய்ந்து உடம்பு முழுதும் இன்பப் பெருக்கெடுத்தோடச்செய்தது. வானொலிப் பெட்டி மேலும், "மனமோகனுங்க அணங்கே" என்று பாட ஆரம்பித்தது. முதலியாருக்கு என்ன பேசுவதென்றே தெரியவில்லை. ஒருவகையாகத் தொண்டையைச் சரிபடுத்திக்கொண்டு, அந்த மனமோகன மீனுவைப்பார்த்து, "மீனு! என்னை நீதான் வரச்சொன்னுயா?" என்று கேட்டார். அவள் மௌனமாக நின்றாள். சிறிது நேரம் இருவரிடையேயும் மௌனம் நிலவியது. வானொலிப் பெட்டி அது போது, "ஐயையோ!...சொல்ல வெட்கமாகுதே..." என்று பாடியது. மீனு தரையை நோக்கிக்கொண்டிருந்ததைப் பார்த்த முதலியார், "வெட்கப்படுகிறாயா? மீனு!" என்று கேட்டார். மீனு அப்பொழுதும் ஒன்றும் பேசவில்லை. மீண்டும் சிறிது நேரம் கடந்துசென்றது. முதலியாரால் இந்த மௌனத்தைச் சகித்துக்கொள்ள முடியவில்லை. எழுந்து மீனுவின் பக்கத்தில் போய் நின்றார். முதலியார் என்னசெய்வதென்றே தெரியாமல் நின்று கொண்டிருந்தபோது "பாவியேன் பெண்ணாய்ப் பிறந்தேன்" என்று நாதநாமக்கிரியையில், சோகரசத்துடன்பெட்டி பாடத்தொடங்கியது.

முதலியார் 'திருதிரு'வென விழித்தார். மீனுவின் கண்களிலிருந்து இரண்டு சொட்டுக் கண்ணீர் தரையில் விழுந்தது. முதலியார் திடுக்கிட்டு, "மீனு; ஏன் அழுகிறாய்? எதற்காகக் கண்ணீர்

சிந்துகிறாய்?" என்று பதைபதைப்புடன் கேட்டார். மீனா கண்
களைத் துடைத்துக்கொண்டு "ஒன்றுமில்லை" என்றாள். மீண்டும்
தொண்டை அடைத்துக்கொண்டது. பிறகு சிறிது நேரம்கழித்து,
"எனக்கு இந்தத் தொழில்செய்வதில் கொஞ்சமும் மனம் பிடிக்
வில்லை; வளர்ப்புத்தாயின் கட்டாயத்தினால்தான் நாட்டியம் பழ
கினேன். இன்று என்னை பலவந்தப்படுத்தி தங்களிடம் அனுப்பி
யிருக்கிறார்கள். தாங்கள்..." என்று சொல்லிக்கொண்டே விக்
விக்கி அழத்தொடங்கிவிட்டாள். முதலியாரோ காதலாகிக் கசிந்
கண்ணீர் மல்கிவிட்டார்! வானொலி வேறு, "பூமியில் மானி
சென்ம மடைந்துமோர், புண்ணியமின்றி விலங்குகள் போல், கா
மும்..." என்று பாட ஆரம்பித்துவிட்டது. காமத்தினால் ம
யிழந்து கன்னிகைக்குத் துரோகமிழைக்கக் கூடாதென்று முடி
செய்துகொண்டார். அவர் சிந்தனை எங்கெல்லாமோ சென்று
திரும்பியது. வானொலியோ வேறு பாட்டைப்பாட ஆரம்பித்தது.
"சத்வகுணபோதன் சரணமிருக்க, சித்தமும் வீணே கலங்கு
வதேனோ?" என்ற பாட்டு அவருடைய செவிகளில் விழுந்தபோது
அவருடைய யோசனை வெகுதூரம் சென்றது. சத்வகுண போதன
கிய புத்தபிரான் வீட்டைவிட்டு ஓடியதைப்போல, அவளை
கூட்டிக்கொண்டு இரவோடிரவாகப் போய்விடவேண்டுமென்
முடிவுசெய்தார். பிறகு மீனாவை நோக்கி "மீனா! சித்தம் கல
காதே! இந்த வீட்டிலிருந்து உனக்கு விடுதலை அளிக்கிறேன். எ
னுடன் வந்துவிட உனக்கு சம்மதம் தானே?" என்று கேட்டா
மீனாவும் மகிழ்ச்சியுடன் சம்மதித்தாள். முதலியார் உவ
கொண்டார்!

கீழே எல்லோரும் தூங்கும்வரை காத்திருந்தனர். எல்லோரு
நல்ல உறக்கத்திலிருக்கும்போது, இருவரும் மெதுவாகக் கீ
இறங்கிக் கதவை ஓசைப்படாமல் திறந்துகொண்டு, வெளிவந்
காரில் ஏறிக்கொண்டனர். கார் புறப்பட்டது! வானொலி "மங்க
மும் பெறுவார்" என்று வாழ்த்தி வழி அனுப்பியது. வீடுவந்
சேர்ந்ததும் இருவரும் இறங்கி வீட்டிற்குள் சென்றனர். மீ
தன்னிடமிருந்து விலகியே செல்வதைக் கவனித்த முதலியார்
மிகுதியினால் மீனாவைத் தாவிப் பிடிக்கப்பார்த்தார். மீனா
மறைந்துவிட்டாள்! முதலியார் மெத்தையிலிருந்து (ஆம்! படுக்
லிருந்துதான்!) கீழே விழுந்தார். விழுந்த அதிர்ச்சியினால்
கிட்டுக் கண் விழித்தார். கட்டிலிலிருந்து கீழே விழுந்
பதைக் கண்டார். இவ்வளவு நேரம் தான் கண்டது கனவு
பதை உணர்ந்தார். எழுந்து வெளியில் நோக்கும்போது பொழு
புலர்ந்தது தெரிந்தது. தன் வீட்டிற்குப் பக்கத்திலிருக்கும் சாய
கடைப்பெட்டிதான் மீனா வீட்டில் கேட்டதும், மற்ற காட்சிகளு
கனவில்தான் என்பதையும் உணர்ந்து சமாதானமடைந்தார்.
அவருக்கு உபதேசம் செய்வதைப்போல, வானொலிப் பெட்டி
அப்பொழுது உண்மையாகவே, "மாயா உலகை நீ மதியாதே!"
என எக்காளத்துடன் பாடியது!

வீராங்கனை

வை. மு. கோ. 88-வது நாவல்

6

6 வள்ளியின் வீட்டில் இன்று ஓரே தடபுடல்படுகிறது. அக்கம் ஃகம் உள்ளவர்கள் "ப்ரஸவமாகிவிட்டதா! வெகுநாள் கழித்து ந்திருக்கிறது நல்லபடியே ஆகவேண்டும். இன்று நல்ல திவ்ய ுன நாள், நட்சத்திரம். இன்றே ப்ரஸவமாகிவிட்டால் வெகு ன்ருக இருக்கும்" என்று பலபேர் பலமாதிரியாகப் பேசிக் கொண்டார்கள்.

தூமகேதுக்கள்போன்ற சிலரோ "உம்...வயதானபிறகு இம் மாதிரி வந்திருப்பது ஏதோ விபரீதத்திற்குத்தான்...பட்டின வாஸத்து ஆஸ்பத்திரியில் வைத்துக்கொண்டிருந்தாலும் சற்று யோசிக்கலாம். வள்ளியின் அதிர்ஷ்டம் நன்ருகஇருக்கவேண்டும். ங்கள் ஊரில் இப்படித்தான் ஒருத்திக்குவந்து அவள் போய் ிட்டாள்." என்று குண்டுணித்தனமாய் அபசகுனப் பீடையாய்ப் ுசிக்கொண்டார்கள்.

இவைகளைக் காதில்கேட்ட எதிர்வீட்டுக் கிழவி "ஒருவருமே க்குவாவேண்டாம், சளசளவென்று பேசவேண்டாம்" என்று யட்டிவிட்டாள். கோபத்துடன் சிலர் முடுக்காகச் சென்ருர்கள். சிலர் சமாதானமாகச் சென்ருர்கள். நல்ல உச்சிவேளை வெய்யில் க்ரமாய்க் காய்கிறது. முன் அத்யாயத்தில் சொல்லிய சாமியார் "ல்நடையாய் ஊர்ஊராகச் சுற்றிவருகையில் இங்குவந்தார்.

ட இந்த க்ராமம் ரமணீயமாய் அழகாய் இருப்பதைக் கண்டு ொது ஸ்நானம் ஜபம் தபம் முதலியவைகளை முடித்துக்கொண்டு கோயிலுக்கு வந்தார். பகவானின் தரிசனத்தை இதயபூர்வமான ே்தி ச்ரத்தையுடன் செய்பவர்கள் உலகத்தில் நூற்றுக்கு ஒருவர் ிடைப்பது அபூர்வம். கண்களில் பகவானின் தரிசனத்திற்கு போ்ான பல பதார்த்தங்களின் ஸ்வரூபமே தோன்றி அவற்றின் பாடி இந்திரியங்களைச் சிதறவிட்டு வீணுன பாபமூட்டையைக் மூதலிக்கொள்ளத் துணிகிருர்களே யன்றி, மனத்தை பரிசுத்தமாக மீனு ந்க்கொண்டு ஸ்வாமிதரிசனம் செய்யும் பரிபக்குவம் உண்டா ேோம் ஏது?

தச் மேலேகுறித்த மகா ஞானியான ஸ்வாமிகள் இந்த சிறிய ிராமத்திலுள்ள கோயிலுக்குச்சென்று ப்ரதக்ஷண நமஸ்காரத் தேச்செய்து அங்குள்ள அரசமரத்தடியில் வந்து உட்கார்ந்து காம ுபம் செய்தார். பிறகு சற்று இளைப்பாறும்பொருட்டு வீதியில் வந்து வள்ளியின் வீட்டு வாசல் திண்ணையில் மேல்துண்டை உதறிப் ்போட்டுக்கொண்டு உட்கார்ந்தார். திடீரென்று அவர் முகத்தில்

அவரை யறியாத ஒரு புன்னகையும் ஆச்சரியமும் உண்டாகிப் ப்ரகாசித்தது.

உள்ளே வள்ளியின் மெல்லிய குரல் சிறிது வெளியில்கேட்டதும் இந்த ஸ்வாமியார் ஏதோ வாயில் மந்திர உச்சாடணத்தைச் செய்தவாறு உட்கார்ந்திருந்தார். எதிர் வீட்டுக் கிழவி எல்லோரையும் கோபித்துக்கொண்டதால், மற்றவர்கள் ஆத்திரங்கொண்டு ஒருவருமே வீதித் திண்ணையில் உட்காராது எழுந்து போய்விட்டதால் சாமியாரைத் தவிர வேறு யாரும் அங்கு இல்லை. ஸ்வாமிகள் சிறந்த ஞானியும் உலகத்தை வெகுவெகு கூர்மையாகக் கண்டறிந்த மேதாவியுமாகையால் அவருடைய உள்ளத்தில் ஏதோ ஒருவகையான ஆனந்தம் நிர்த்தனம்செய்தது. "ஆகா! என்ன அதிர்ஷ்டம்! என்ன உத்க்ருஷ்டம்!" என்று வாய்விட்டு அவர் சொல்வதைக் கண்ட சிலர் "இதென்ன பயித்தியம்? தன்போக்காகப் பேசுகிறது, தன்போக்காகச் சிரிக்கிறது, வேடிக்கைபார்க்கலாம் வாங்கடா!" என்று கூறிக்கொண்டே வந்து சூழ்ந்துகொண்டு "எய்! பயித்தியம்!...எய்!"....என்று கூப்பிட்டார்கள்.

இதைக் கண்ட சாமியார் இந்த பிள்ளைகளின் வார்த்தைப் படியே தான் பயித்தியமாகவே நடித்து "குற்ற்...ர்..." என்று கூறிவிட்டுத் தானும் கடகடவென்று சிரித்தார். பிள்ளைகளும் "குர்டுர்." என்று ஓயாது கூறிச் சிரித்துப் பெருங்கூச்சலை உண்டாக்கியதும் அக்கம்பக்கம் உள்ளவர்கள் எட்டிப்பார்த்தார்கள். "டேய்! யாரோ பயித்தியம் பாவம்! அவனுடன் என்னடா கூச்சல்? பயித்தியம் குபீரென்று பாய்ந்து அடித்தாலும் அடித்துவிடும். கிட்ட போகாதீர்கள். அந்தக் கிழவி வீட்டுவாசலில் யாரும் இருக்க வேண்டாம் என்று சொன்னாளோன்னோ! அதனால் சரியானபடி பயித்தியத்தையே கொண்டு பகவான் உட்காரவைத்திருக்கிறான். நன்றாக பயித்தியம் உளறட்டும், சிரிக்கட்டும்; ஏன்? நன்றாக அலறிப் புடைத்துக்கொண்டு அபசகுனம்போல் அழட்டும். கிழவியின் திமிர் அப்போதுதான் அடங்கும். அவர்களுக்குத் தகுந்த சிக்ஷை தான் பகவான் கொடுப்பார். பயித்தியத்தின் பிதற்றல் காதில் விழும்போது பிறக்கும் குழந்தையும் பயித்தியமாகவே அலையட்டும்" ......என்று தம்தம் கர்வத்திற்கு ஏற்றவாறு சொன்னார்கள். தன்னை அவர்கள் சரியான பயித்தியம் என்றே தீர்மானித்திருப்பதால், அதையே ஊர்ஜிதப்படுத்தும் முறையில், ஸ்வாமிகள் எல்லோரையும் விரைக்கப் பார்த்துப் பின் அசட்டுச் சிரிப்பு சிரித்தார்.

அதே சமயம் உள்ளே "குவ்வா! குவ்வா" என்று தேவ கானம் ஒலிப்பதுபோலும் வேதமந்திர கோஷம் வெகுகம்பீரமாய்க் கேட்பதுபோலும் அப்போது பிறந்த குழந்தை அழும் இனிய குரலைக்கேட்டு, பயித்தியமாக நடிக்கும் சாமியார் "அடாடா! தீர்காயுஸுடன் நன்றாக இருக்கவேண்டும். என்ன அதிர்ஷ்டம்! என்ன ஆச்சரியம்! பிறந்துள்ள குழந்தை சாமான்யக் குழந்தையல்ல. உலகமே போற்றிப் பணியப்போகும் உத்தமக் குழந்தை...

மங்களானிபவந்து...மங்களானிபவந்து" என்று தனக்குத் தானே உரத்துக் கூறி, ஏதோ க்ரகங்களையும் ராசிபலன்களையும் கைவிரல் விட்டு எண்ணியும், சாக்குபீஸால் திண்ணைமீது கட்டங்கள்போட்டும், உடனே அழித்தும் இவர்செய்யும் செய்கையைப்பார்த்த மற்றவர்கள் பின்னும் கடகடவென்று சிரித்தார்கள்.

வள்ளிக்குப் பெண்குழந்தை பிறந்துவிட்டது. குழந்தை சொர்ண விக்ரகம்போல் இருக்கிறது. அதனால்தான் வள்ளிக்கு அத்தகைய அபூர்வமான அழகிட்டிருந்தது. அடாடா...குழந்தை என்றால் இதுபோன்ற குழந்தையை இதுவரையில் பார்த்ததேயில்லை. கண்களில்தான் என்ன தேஜஸ்ஸும் வசீகரமும் அளவற்ற ஒரு ப்ரகாசமும் பொலிந்து ஜ்வலிக்கின்றது. அன்று மலர்ந்த தாமரை மலரைப்போல் முகமும், சுருள் சுருளாகத் தலைமயிரும், அடாடாடா அதனழகை வர்ணிக்கவே முடியாது...என்று எதிர்வீட்டுக் கிழவியின் விமர்சனமும் ப்ரமாதமாய்க் கேட்டது.

அக்கம்பக்கம் உள்ளவர்கள் குழந்தையை பார்க்க ஓடிவந்தார்கள். அதுசமயம், "ஆகா! அதிர்ஷ்டமென்றால் இது வன்றோ அதிர்ஷ்டம்! பிறந்தாலும் இத்தகைய குழந்தை யல்லவா பிறக்கவேண்டும்!" என்று ஸ்வாமியார் உரத்துச் சொல்வதைக் கேட்ட பக்கத்துவீட்டுக்காரர் "சாமியாரே....அப்போதுமுதல் வாய் ஓயாமல் ஏதோ சொல்லிக்கொண்டே இருக்கிறீரே! என்ன சமாச்சாரம்?...என்ன அத்ருஷ்டம் வந்திருக்கிறது? மலடிக்கு மகள்...பெட்டைக்குஞ்சு பிறந்திருப்பதா அதிருஷ்டம். தங்கள் வயிற்றிற்கு அன்றாடம் கஞ்சிக்கு அலைந்த ஆத்மாக்கள் இப்போது இன்னொரு ஆத்மாவை வளர்ப்பதற்குக் குட்டிக்கரணம்போட்டுத் திண்டாடவேணும்; அதுதானே ஸ்வாமி அத்ருஷ்டம்" என்றார்.

இதற்குள் இன்னொருவர், "ஸார்! பயித்தியக்காரனுடன் என்ன பேச்சு? இது காலைமுதல் இப்படியே பிதற்றுகிறது" என்றார். ஸ்வாமியார் கடகடவென்று சிரித்தார். மறுபடியும் முதலில் கேட்டவர் சாமியாரைப்பார்த்து "சாமியார்! தேவலோகத்திலிருந்துதானே இந்தக் குழந்தை பிறந்திருக்கிறது. அதானே அத்ருஷ்டம் என்கிறீர்?" என்று குறும்பாகக் கேட்டார்.

"ஆமாம் ஸ்வாமிகளே ஆமாம்....இந்தக் குழந்தை சாமான்யக் குழந்தை யல்ல. அஷ்டதிக்கும் புகழ்முரசு கொட்டி முழங்கும் சக்ரவர்த்தினி ஐயா! சக்ரவர்த்தினி, மகாராணி! இந்த சிசு இன்று பச்சைப் பாலகி. பின்னால் ஓர் ஒப்பு உயர்வற்ற மகாராணி வீராங்கனை! ராஜாதி ராஜர் மெச்சும் அத்புத சக்திவாய்ந்த மகாராணி"

என்று இவர் பேசுவதைக் கேட்டு அங்குள்ள எல்லோரும் கொல்லெனச் சிரித்துக் கையையும் தட்டினார்கள். அதே சமயம் வேலனும் இதே வார்த்தையைக் கேட்டுக்கொண்டு வீதியில் வந்ததும் மலடிக்கு மகள் பிறந்த உண்மையான சந்தோஷத்தை அவன் உள்ளம் உணர்ந்து பூரிப்பதுபோல் வேறயாருக்கேனும் உணர முடியுமா? மகா ஞானியாய் விளங்கும் ஸ்வாமியைப் பார்த்ததும்

வேலனின் உள்ளத்தில் தனித்த பெருமையும் மதிப்பும் உண்டாகி யதே யன்றி இவர்கள் வசிப்பேசும் பயித்தியம் என்று தோன்ற வில்லை. அந்த சாமியாரின் வாயிலிருந்துவரும் சொற்களால் அவன் உள்ளத்தில் அம்ருததாரை ஊற்றெடுத்ததுபோல் பொங்கிப் புலகித மடைந்தது. பயித்தியமோ, பண்டாரமோ, எவனுனல் என்ன! குழந்தை பிறந்த உடனே நல்ல மங்களமான சுபவார்த்தைகளைக் கூறி ஆசீர்வதித்ததே வேலனுக்கு மட்டிலா மகிழ்ச்சியை யளித்து சுபகரமாயும் தோன்றியது.

சாமியாரைப் பார்த்துச் சிரிப்பவர்களை இவன் லக்ஷியம் செய் யாமல் அவரை சாஷ்டாங்கமாய் நமஸ்கரித்து "சாமியாரே! வெகு நாட்கள் பகவானை வேண்டித் தவமாதவங்கிடந்ததற்கு எங்கள்பால் பகவான் இரங்கி இந்த பெண்குழந்தையைக் கொடுத்திருக்கிறார். இந்தக் குழந்தை எங்களுக்கு வெறும் பெண்ணாகத் தோன்றாமல் பொன்னாகவும் இருகண்ணாகவும் விலையிலா மாணிக்கமாயும் தோன்று கிறாள். இந்த குழந்தை தரித்திர குடிசையில் பிறந்ததைப் பிறர் பரிகசித்தாலும், எங்களுக்கு ஒப்புயர்வற்ற பெரும் புதையல் கிடைத்ததுபோலத்தான் தோன்றி அளவற்ற மகிழ்ச்சியைக் கொடுக்கிறது. இந்த குழந்தை பிறந்தஉடனே மகா பெரியவ ராகிய தாங்கள் சுபவார்த்தைகள் சொல்லி வாழ்த்துவதைக்கேட்டு என்னுள்ளம் பூரிக்கிறது. என் கண்மணி தீர்க்காயுசாக நன்னு யிருக்கவேண்டும்" என்று ஆனந்தபாஷ்பம் பொங்கக்கூறினன்.

கூடவிருந்தவர்கள் மிகப்பெரிதாகச் சிரித்து, "டேய் வேலா! சரிதான்போ...பயித்தியத்தைப் பார்த்தவுடனே உனக்கும் பயித்தி யம் பிடித்துவிட்டதா! போடா முட்டாள்! பயித்தியக்காரன் அப்போதுமுதல் ஏதோ உளறுகிறான். அவனிடம் நீயும் மெனக் கிட்டுப் பேசி மூளையைக் குழப்பிக்கொள்கிறாய். அபூர்வமாய் ஒரு குழந்தை பிறந்தால் அதை யார் பார்த்தாலும் ராஜா......ராணி..... கண்ணு...கண்ணம்மா...என்று சொல்லுவார்கள். இது உலக சகஜந்தானேடா...வா...உள்ளே......குழந்தையைப் பார்க்கவேண் டும்" என்று கூறி அவனை வலுவில் உள்ளே அழைத்துக்கொண்டு போனார்கள்.

இதைப் பார்த்த சாமியார் பின்னும் கடகடவென்று சிரித்தார். கட்டாயம் தன்னைப் பயித்தியமென்றே எல்லோரும் நினைக்கட்டும் என்று தன்னெதிரில் நிற்கும் பசங்களைப் பார்த்து "சூர்ர்ர்...டகடக டகடகடும்....தக்கா புக்கா டுர்." என்று கத்திச் சிரித்தார். உள்ளே சென்றவர்களுக்கு எதிர்வீட்டுக் கிழவி குழந்தையை நன்றாக மூடி விட்டு தூரவிருந்து காட்டிப் பின் அனுப்பிவிட்டாள். வேலனுக்குச் சந்தோஷம் கரைபுரண்ட வெள்ளம்போல் பொங்கிவிட்டதால் வாச லில் தான் சாமியாரைக் கண்டதையும் அவர் சொல்லியதையும் தன் மனைவியிடமும் எதிர்வீட்டுக் கிழவியிடமும் சொன்னான்.

இதைக் கேட்ட வள்ளியின் உள்ளம் பொங்கிக் களித்தது. "பயித்தியமோ பண்டாரமோ! எவனுவதிருக்கட்டும். நல்ல வார்த்

தைகளைச் சொல்லிய மனிதனுக்குக் கொஞ்சம் பாலும் பழமும் சாப்பிடக் கொடுங்கள். நம் குழந்தைக்கு க்ஷேமம் உண்டாகும்" என்றாள் வள்ளி. உடனே வேலன் ஓட்டமாக ஓடி ஒரு சிறிய லோட்டாவில் பாலும் இரண்டு வாழைப்பழங்களையும் கொண்டுவந்து "ஸ்வாமீ! தயவுசெய்து இதைச் சாப்பிடவேண்டும். தங்கள் உள்ளம்குளிர சுபவார்த்தைகளைச் சொல்லிய தங்களுக்கு இந்த அற்ப ஆகாரத்தையாவது கொடுத்துக்களிக்க ஆசைப்படுகிறோம்" என்று வினயமாகக் கூறினான்.

ஸ்வாமிகள் மிக்க உத்ஸாகத்துடன் "அப்பனே! இந்தப் பயித்தியக்காரன் உன்னுடைய சக்ரவர்த்தினியைப்பார்க்க மிகுந்த ஆவலுள்ளவனாக இருக்கிறேன். பயப்படாமல் எனக்குக் குழந்தையைக் காட்டுங்கள். நான் கண்குளிர, மனங்குளிர, இதயங்களிக்க அந்த அபூர்வ அரசிளங்குமரியைப் பார்த்துவிட்டுப் பிறகு இதைச் சாப்பிடுகிறேன்" என்றார். உடனே பதில் பேசாமல் சாமியாரை உள்ளே அழைத்துச்சென்றான்.

அக்கம்பக்கம் உள்ள பெண்கள் சிலர் குழந்தையைப் பார்க்க வந்தார்கள். ஏற்கெனவே சாமியாரைப் பார்த்து பயித்தியம் என்று கூச்சலிடும் பையன்களும் பின்னாலேயே நடைவரையில்வந்து எட்டிப்பார்த்தார்கள். சாமியார் துல்லியமான உள்ளத்துடன் உள்ளே வந்தார். எதிர்வீட்டுக்கிழவிதான் குழந்தையைக் கொண்டுவந்து சாமியாருக்குக் காட்டினாள். கிழவி சாமியாரைப் பார்த்ததும் ஏதோ ஒரு பெரிய மகானை தரிசிப்பதுபோல் எண்ணினாளேயன்றி பயித்தியமாக அவளுக்குத் தோன்றவில்லை. சாமியாருக்குக் குழந்தையை மூடி மறைக்காமல் நன்றாகக் காட்டினாள்.

பெருமிதமான சந்தோஷத்துடன் ஸ்வாமிகள் குழந்தையைப் பார்த்துப் பூரித்துப்போய் "சக்ரவர்த்தினீ—தீர்க்க ஸுமங்கலீபவ ...தீர்க்காயுஷ்மதிபவ!"...என்று கூறியவாறு குழந்தையைத் தலைமுதல் கால்வரையில் தடவிக்கொடுத்து பரிபூர்ணமாக ஆசீர்வதித்துத் தேனைத் தன் கையினால் அக்குழந்தையின் நாக்கில் தடவிப் பின் உச்சிக்கு விளக்கெண்ணெயைத் தடவிப் பின்...."அரசீ! மகாராணீ! உன் வாயில் நியாயபரிபாலனம் அமுதபொழிபோல் சுரந்து உதிரட்டும். உன் சிரசில் உயர்ந்த க்ரீடம்...மணிமுடி ஜ்வலிக்கட்டும். உன் அழகிய செங்கோல் சத்தியபரிபாலனத்தைச் செய்து திக்விஜயம் பெற்றுப் பலராலும் புகழ்மாலை சூட்டி மகிழட்டும். உன்னுடைய நியாயபரிபாலனத்தில் நீதிமழை பெய்து தர்மப்பயிர் செழித்து குடிமக்களின் உள்ளம் குளிரட்டும். ராணீ! உன் பெயர் வீராங்கனை என்று சிலாசாசனமாய் அப்பழுக்கற்ற பிரகாசத்துடன் கொழுந்துவிட்டு சோபையடையட்டும். உன் குடிமக்களுக்கு நீ தெய்வமாக விளங்குவாய். உன் நியாயபரிபாலனம் தராசுநிறையில் தர்மத்தை சத்தியத்தை நிறுத்து நடக்கட்டும். சக்ரவர்த்தினீ! நீயே வீராங்கனை. நீயே வீரலக்ஷ்மி...உன்னுயுளும் உன் கீர்த்தியும் உன் சௌபாக்யங்களும் உன் தர்ம பரிபாலன சக்தியும் மலைபோல் வளரட்டும்.

உன்னுடைய எதிரிகளின் செய்கைகளும், ரோகப்பீடைகளும் சூரியனைக்கண்ட பனிபோல் மாய்ந்துபோகட்டும். பட்சபாதமற்ற உன் செங்கோல் திறன் என்றும் அழியாது குன்றின்மீதிட்ட விளக்கு போல் பிரகாசிக்கட்டும். அரசி! நான் வருகிறேன் உன்னை மங்களம் சூழுக. அன்பு வளருக!" என்று கூறிவிட்டுத் தனக்குக் கொடுத்த பாலையும் பழத்தையும் கடகடவென்று சாப்பிட்டுவிட்டு "ராணீ! வருகிறேன். பக்தியை மறக்காதே. பிரஜைகளை வெறுக்காதே. சாந்தி...சாந்தி...குழந்தைக்கு வீரலக்ஷ்மி என்று பெயரிடுங்கள்." என்று தன்போக்காக கடகடவென்று கூறிவிட்டு மறுமுறையும் குழந்தையைத்தடவி முத்தமிட்டுப் பின் ஒரே வேகமாய்ச் சென்றுவிட்டார்.

இந்த விசித்திரக் காட்சியைக் கண்டவர்கள் "ஐயையோ! பச்சைக் குழந்தையைப் பயித்தியம் தீண்டி உளறுவதற்கு விடுகிறீர்களே! இதென்ன அநியாயம்! அந்த பயித்தியம் ஊர்சுற்றிக் கண்ட இடத்திற்கும் போய்வந்த கால்கூட அலம்பாமல் தொடவிடுவார்களா! தவம்கிடந்து பிறந்த குழந்தையை இப்படியா முதல்முதல் ஒரு பைத்தியம் தொடுவதற்கு விடுவார்கள்! குழந்தைக்கு ஏதாவதாகிவிட்டால் என்ன செய்வது? தோஷம் தாங்கிவிட்டால் என்ன பண்ணுவது? இந்த பாட்டிகூட ஏமாந்துவிட்டாளே" என்று தம் போக்காகக் கத்தினார்கள்.

சாமியார் சொல்லிய வாசகங்களைக் கேட்டுப் பின்னும் பெரிதாக எக்காளமிட்டுப் பரிகஸித்துச் சிரித்து "அரசியாம், ராணியாம் பாவம்! பிதற்றுவதைப் பார்த்தால் கண்ராவியாயிருக்கிறது. எங்களூரில்கூட கிராமமுனிசீப்புக்கு இப்படித்தான் பயித்தியம் பிடித்துவிட்டது. ஒருவரையும் அடிக்கமாட்டான், திட்டமாட்டான்; 'கல்யாணம் கல்யாணம்' என்று நல்ல வார்த்தையே சொல்லிக்கொண்டு இன்னமும் திரிகிறான் பாவம்... அதுபோல் இது ஒன்று" என்றாள் ஒருத்தி.

இனி கேட்கவேண்டுமா! எங்கெங்கே யார் யாருக்குப் பயித்தியம் பிடித்திருக்கிறதோ அத்தனையும் அந்த இடத்தில் விஷயமாகிப் பெரிய வம்பர் கோஷ்டியாகி பயித்யக்காரப் புராணத்தையே பாராயணம் செய்வதுபோல் ஆகிவிட்டது. இந்தத் தலைவேதனையைக் கண்ட கிழவி "ஏண்டியம்மா இப்படி அனாவச்யமாகப் பேசுகிறீர்கள்? அந்த மகானைப் பார்த்தால் எனக்குச் சற்றுகூட மனத்தில் பயித்தியமென்று தோன்றவே இல்லை. பயித்யமானாலும் நல்ல வாக்கு சொல்வதும் பலிப்பதும் உலகத்தில் இல்லையா என்ன? வீணாக ஏன் கத்துகிறீர்கள்?...

என்று முடிப்பதற்குள் மறுபடியும் அவர்கள் கொல்லென்று சிரித்துவிட்டு "பாட்டி! வள்ளியின் மகள் அல்லியரசாணி. அம்மா தொரைசாணி என்று ஆட்சி புரியப்போகிறாள். அம்மா! ராஜாத்தி மகாராணி நாங்கள் உன் ப்ரஜைகளடியம்மா?"...என்றுகூறி ஏளனச் சிரிப்பு சிரித்து உதட்டைப் பிதுக்கினார்கள். அதுசமயம் உலகமறியாத அப் பச்சைக் குழந்தையும் ஹரிமிரட்டலால் தன் பவளவாய் திறந்து ஒரு ஆனந்தச் சிரிப்பு சிரித்தது. அதைக் கண்டு கிழவியின் உள்ளம் பூரித்தது. வள்ளியின் இதயத்தில் ஆனந்தக் களிவெறி தலைதுள்ளி எழுந்தது.

7

நூறு மைல் வேகத்தில் அதிவிசையாகப் பறக்கும் ஆகாய விமானத்தைப்போல் வள்ளியின் வாழ்க்கையில் நாட்கள், வாரங்கள், மாதங்கள் என்று உருண்டோடி ஆறுவருடங்களைத் தாண்டி ஏழாவது வருடத்தைத் தொடங்கிவிட்டது. வள்ளியின் மக

ளுடைய வளர்ச்சியும் அறிவுத்திறமையும் அவளுடைய அத்புதமான அழகையும்பார்த்து ஊர்ஜனங்களேப்ரமித்துப்போய் த்ருஷ்டிவைக்க வாரம்பித்தார்கள். மகா சுறுசுறுப்புடைய அச்செல்வக் குழந்தைக்கு சாமியார் சொல்லியபடியே வீரலக்ஷ்மி என்று பெயரிட வேண்டும் என்று வேலன் ஆசைப்பட்டான்.

ஆனல் "பயித்தியம் சொல்லிய பெயரையா குழந்தைக்குச் சூட்டுவது?" என்று பலரும் ஆக்ஷேபித்தார்கள். வேலனின் சகோதரி கன்னியம்மாள் மட்டும் வீராயி என்கிற தன் தாயாரின் பெயரையேதான் வைக்கவேண்டும் என்றுகூறி வைத்தாள். "வீராயி, வீரம்மா... வீரக்கண்ணு" என்று பலவிதமாக அழைத்துவந்தார்கள்.

குறும்புபிடித்த ஊர்ப் பெண்கள், "அடியம்மா வள்ளீ! மகாராணியின் தாயார் நீ பெரிய ராணியல்லவா...மகாராணியாம், மகாராணி, எந்தசமஸ்தானத்தில் ராஜாவுக்கு ஆபத்துவந்துவிட்டது? மகாராஜா இந்த அபூர்வ ப்ரக்ருதியைக் கண்டு மோகித்து கிறுகிறு என்று மயங்கிவிழுந்து கல்யாணம் செய்துகொண்டு மகாராணியாகப்போகிறுள். போதுபோக்கற்ற நாவிதன், பெண்டாட்டி தலையையே மொட்டையடித்தானும்! அதுபோல் ஒரு தரித்திரப் பிண்டத்தைப்பார்த்து அந்தப் பயித்தியம் உளறியதுதான் வேடிக்கையாயிருக்கிறது." என்று வம்பளக்க மறக்க வில்லை.

குப்பையில்கிடக்கும் மாணிக்கம்போல் வீராயி பல அநாகரீகக் கோர ஸ்வரூபங்களாகிய பல சிறுமிகளுடன் ஓடி ஆடி விளையாடிக் களிக்கும் அழகைப்பார்த்த எதிர்வீட்டுப் பாட்டியின் உள்ளந்தான் அபாரமாகப் பூரித்து மகிழும். "அவள் பிறந்தவன்று இந்த பிம்பத்தின் அழகைப்பார்த்துத்தான் அந்த பயித்தியக்காரச் சாமியார் உளறியிருக்கிறுன் பாவம்! உண்மையில் இந்த ஏழைக் குழந்தையின் தலையில் அப்படியும் எழுதியிருப்பானு என்ன? எல்லாம் வெறும் வேடிக்கை" என்று கிழவிமட்டும் அவ்வப்போது நினைப்பாள்.

வீராயியின் விளையாட்டின் போக்கைக் கண்டு இவளிடம் பொறுமைகொண்டுள்ள மக்கள்கூட க்ஷணநேரம் ப்ரமித்துத் தம்பித்துவிடுவார்கள் என்றுல் அவளிடம் அன்பாயிருப்பவர்களைப் பற்றிக் கேட்கவேண்டுமா? தன்னுடன் சமவயதான சிறுமிகளுடன் அவள் விளையாடும் தோரணையே ஒரு தனித்த புதுமாதிரியாக இருந்தது கண்டு வள்ளி பூரிப்பாள்.

குழந்தைகளின் சுபாவம் அவர்கள் விளையாட்டில் எதை எதைத் தாங்கள் பார்க்கிறுர்களோ, அதைத்தான் ப்ரதானமாக வைத்து விளையாடுவார்களே யன்றி வேறு தெரியாது. இந்தச் சிறிய க்ராமத்தில் வாரம் ஒருமுறை மாட்டுச் சந்தையும் இரண்டு மாதத்திற்கு ஒருமுறை பெரிய சந்தையும் கூடுவது வழக்கம். அந்தச் சந்தைகளில் மாட்டுக்குச் சொந்தக்காரியாகத் தான் இருந்து மற்ற சிறுமிகளை வ்யாபாரக்காரிகளாக்கி விளையாடுவாள்.

வயலில் ஆட்களை எஜமானன் வேலைவாங்குவது போல்தான் எஜமானனுகவிருந்து சிறுமிகளிடம் நயமாய், பயமாய், மிரட்டி

உருட்டி வேலையிடுவதும் கூலிகொடுப்பதும் விளையாடுவாள். இதைக் கண்ட சில குறும்புக்காரர்கள் "ஏண்டியம்மா! நீதான் கூலியாளாக இருந்து கூலிவாங்குவதுதானே. நீ என்ன எஜமான னாக இருப்பது!"...என்று கோபிப்பார்கள். ஆதியில் இவள் பிறந்த போது சாமியார் சொல்லிய வார்த்தையை நினைவுவைத்துக்கொண் டிருக்கும் விஷமிகள், "டேடேடே! இவள் மகாராணியல்லவா? அரசியில்லையா? அதான் தான் மேன்மைப் பதவி வகித்து விளை யாடுகிறாள். இதைத்தான் அந்தப் பயித்தியக்காரனும் சொல்லி விட்டுப்போனான்போலிருக்கிறது....ஏய் ... வீராயி! ..சீ!....நீதான் கூலியாளாகக் கையை நீட்டி வாங்கிக்கொள்ளேன்...ப்ரமாதப் படுத்துகிறாயே!...மூஞ்சியேப் பாரு!" என்று குழந்தையைச் சீறி விழுந்து பேசிவிட்டுப் போவார்கள்.

நாளடைவில் சாமியார் சொல்லியதை ஊரார் மறந்துவிட்டார்க ளெனினும் வள்ளியும் வேலனும்மட்டும் சற்றுகூட மறக்கவேஇல்லை. "அன்றையதினம் அந்த சாமியார் சொல்லிய வார்த்தைகள் எத்தனை ஆனந்தமாக இருந்தன. அப்போது எல்லோரும் பரிகஸித்தது போலத்தான் நடக்கிறது. ராணியாவது, ராஜாவாவது? பயித்தியக் காரனின் வார்த்தைக்கு அளவு உண்டா என்ன?" என்ற எண்ணமே கூடத் தோன்றிக்கொண்டே இருந்தது. தன் மகள் அதிகார தோர ணையில் விளையாடுவதைப் பார்க்கும்போது வள்ளி இதையே அரசி யின் ஆட்சியைக்கண்டு களிப்பதுபோல் எண்ணிப் பூரிப்பாள்.

வீராயி பிறந்த வேளையின் பலன் வள்ளிக்கும் வேலனுக்கும் தசையும்கூடப் பிறந்துவிட்டதாகவே சொல்லலாம். கன்னியம்மா ளின் அன்பினால் வீராயிக்குப் பசுவின் பாலைப் போட்டுவதற்காகத் தன் கணவனிடம் மன்றாடிக்கேட்டு ஒரு நல்ல பசுவை ஓட்டிக் கொடுத்தாள். அந்தப் பசு கன்றோடு வந்து இந்த 7 வருஷத்திற்குள் சுமார் 7, 8 பசுவும் கன்றுமாகப் பெருகி வ்ருத்தியானதால் ப்ரதி தினமும் வீராயிதான் இந்த மாடுகளை மேய்ப்பதற்கு ஊர்க்கோடி மலையடிவாரத்திற்கும், காட்டு மைதானத்திற்கும் புல் பூண்டுகள் நிறைந்திருக்கும் இடத்திற்கும் ஓட்டிக்கொண்டு தைரியமாகச் சென்று அழகாகப் பாடியும் ஆடியும் கன்றுகளுடன் ஓடி ஓடிச் சுற் றியும் விளையாடுவதையே சொர்க்கபோகமாக எண்ணி மகிழ்வாள்,

அந்தச் சிறிய கிராமத்திலுள்ள சிறிய கோயிலில் வருஷாவரு ஷம்நடக்கும் திருவிழாவில் பல ஜனங்கள் கூட்டங்கூட்டமாக வரு வார்கள். பலரகப்பட்ட பிச்சைக்காரர்கள் பலவிதமான பாட்டுக் களைப் பாடியவாறு பிச்சை எடுப்பதால் அந்தப் பாட்டுக்களைமட்டும் அப்படியே கற்றுக்கொண்டு அதைத் தான் பாடுவதும், மற்றவர் களுக்குச் சொல்லிக்கொடுத்துப் பாடச் செய்வதும் அச்சின்னஞ் சிறுமிக்கு ஒரு இன்பம் உண்டாக்கியது.

ப்ரதிதினமும் கோயிலுக்குப் போய் அங்குப் பட்டர் சொல் லும் அர்ச்சனை, பாடல், ச்லோகங்கள் முதலியவற்றைக் கேட்கும்

போது தானும் அப்படிப் பாடவேண்டும் என்று ஆசை உண்டாகும். அந்த ச்லோகங்களைத் தெரிந்தவரையில் தானே ராகமாய் இசைவிருந்துபோல் பாடி ஒரு பொம்மையை ஸ்வாமி என்று வைத்து அர்ச்சனை தூபதீப ஹாரத்தி செய்து மகிழ்வாள்.

வள்ளியைவிட இந்த விளையாட்டின் வைபவத்தைக் கண்டு வேலன்தான் அதிகமாகச் சந்தோஷித்தான். குழந்தையின் வளர்ச்சியைக் காண வள்ளிக்கு சற்று கர்வமும் தனக்குத்தான் இத்தகைய ரதியைப்போன்ற பெண் பிறந்துவிட்டது, இனி நமக்கு மிஞ்சியவர்கள் யாரிருக்கிறார்கள் என்ற எண்ணமும் பிறந்துவிட்டதால், பழையமாதிரியான வணக்கம், பணிவு முதலியநல்ல குணங்கள் சிறிது மறையவும்தொடங்கின. கணவனிடமும் பழையமாதிரி அடிமைத்தனத்துடன் நடக்காமல் எதிர்த்துச் சண்டையிடவும் "இந்த பட்டிக்காட்டுவேலையும் தரித்திரமும்போதும். பட்டினவாசத்திற்குச் சென்று நாகரீகமாய்க் குடும்பம் நடத்தினால் குழந்தையை நன்றாகப் படிக்கவைக்கலாம். பாட்டு சொல்லிக் கொடுக்கலாம். இந்த இடத்தில் ஓயாமல் இப்படி வயலில் உழைத்துக்கொண்டிருந்தால் எப்படி?" என்று வாதாடத் தொடங்கினாள்.

அபாரமான அன்யோன்யமும், அடக்கமும்கூட இச்சிறு விஷயத்தில் மாறுபட்டதால் சதா வார்த்தைகள் கனக்கவாரம்பித்தன. வேலனுக்குப் பட்டணவாசத்தின் நிலைமையும் அதனால் சிலர் அடியோடு பாழாகி மனிதத் தன்மையே அற்று நாசமாகிவிட்டதும் அவன் பல இடத்தில் பார்த்திருப்பதால், தன்னருமை மகளுக்குப் பட்டின வாசத்தின் நாகரீகமும் அங்குள்ள மனிதர்களின் பழக்கமும் ஏற்பட்டால் நன்றாக இருக்காது என்பதே அவன் எண்ணம். ஆகையினால் அவன் பட்டினத்திற்குப் போக மறுத்துவிட்டான்.

இதே காரணத்தினால் முதல்முதல் வீட்டில் ஒற்றுமைக்கும் இன்ப வாழ்விற்கும் சிறிது பங்கம் உண்டாகியது. எந்த மிராசுதாரரிடம் இவர்கள் வேலைசெய்கிறார்களோ அவர்களிடம் கணவனும் மனைவியும் மாறிமாறிச் சென்று குழந்தையின் அபிவ்ருத்திக்காக பட்டினம்போக சிபார்சு செய்யும்படி வள்ளி கோருவதும் வேலன் உத்தரவு கொடுக்கவேண்டாமென்று கேட்டுக்கொள்வதும் அவருக்குப் பெரிய தலைவலியாகிவிட்டது. வள்ளியின் மனத்திற்கு விரோதமாகச்சொல்வதால் அவளுக்கு அஸாத்ய கோபம் வந்தது.

வேலனிடம் இதுகாறும் இல்லாத ஆத்திரத்தை யடைந்த வள்ளி..."இதோ பாருங்கள்! ஒரு அக்ஷரமும் தெரியாது எந்த அம்சத்திலும் முட்டாளாக நாம் வாழ்வதுபோல் நம் கண்மணியை நான் வளர்க்கப்போவதில்லை. நீங்கள் பட்டினத்திற்கு வரவில்லை என்றால் நானே குழந்தையுடன் போய்விடுகிறேன். எத்தனையோ பேர்கள் இம்மாதிரி வெளியூர்களில்போய் பிழைக்கவில்லையா என்ன? நானும் அதேபோல் யாரையாவது அண்டிப் பிழைத்து வீராயியை வெகு வெகு மேன்மையானமுறையில் படிப்பும் பாட்டும் நிறைந்த செல்வ மணியாக்கிவிடுகிறேன். இதென்ன மாடு மேய்ப்பதும், மண்ணைக்

கிளறுவதும்? எனக்குக் கட்டோடு பிடிக்கவில்லை. பிறக்கமாட்டாத குழந்தை சொர்ணப் பதுமைபோல் பிறந்திருக்கிறது. அதை காலத்திற்கேற்றபடி வளர்க்காமல் இதென்ன மாட்டுக்காரப் பிழைப்பு?" என்று சண்டையிடுகையில் எதிர்வீட்டுக் கிழவி வந்தாள்.

"வள்ளீ! நீ பேசுவது சற்றும் நன்றாக இல்லை. பட்டினவாஸமாவது, படாடோபமாவது? உனக்கு ஏதோ ப்ரமையினால்தான் உன்னிலைமை மாறி நீ சண்டையிடுகிறாய். நான் உன்னைப்போல் இரண்டு பங்கு வயதை விழுங்கியவள். எனக்கு இந்த உலகானுபவம் பூராவும் தெரியும். நீ இருந்த இடத்துடன் உன் பெரியவர்கள் செய்துவந்த தொழிலைவிடாது அக்கரையாய்ச் செய்துவரும் முறையில் எத்தனையோ மேன்மையாக நீ உன் பெண்ணை குலவிளக்காய், பெண்களுக்குள் சிறந்தவளாய்ச் செய்யமுடியும். நீ உங்கள் எஜமானியம்மாளிடம் தினம் உன் பெண்ணையனுப்பி அவளுக்கு எழுத்தும் பாட்டும் கற்றுக்கொடுக்கும்படிச் செய்தால் அவளுக்குத் தகுந்தவரையில் நன்றாகவரும். அதைவிட்டுத் தனியாகப் பெண்ணை இழுத்துக்கொண்டு பட்டணம் போவது கொஞ்சங்கூட அழகாயில்லை. நீ இந்த ஊரில் எடுத்துள்ள கல்ல பெயருக்கும் மதிப்புக்கும் நேர் விரோதமாக இத்தகைய காரியம் செய்யாதே. குடியும் குடித்தனமுமாய் அழகாயிரு. நீ செய்யத்துணியும் காரியத்தினால் தீமைதான் உண்டாகும்.

பட்டிக்காட்டு வாஸிகள் எத்தனையோபேர்கள் பட்டினவாஸத்திற்குச் சென்று குடியே முழுகி அதோகதியாகிவிட்டதை நீ அறிந்தால் இம்மாதிரி ஆசைப்படமாட்டாய். ஆண்மக்களையும் பெண்மக்களையும் படிக்கவைப்பதற்காக சொத்து சுதந்திரங்களை இழந்தும் கடனாளியாகியும் சிலர் வாழ்க்கையே பாழாகி ஒழுக்கமிழந்து சின்னாபின்னமாகச் சிதறிப்போனதையும் சிலர் உலகமே தூற்றி ஏசிப் பேசும்படியாக ஆய்விட்டதையும் சிலர் அவமானத்தினால் தற்கொலை புரிந்துகொண்டதையும் நீ எப்படி அறியமுடியும்?

வள்ளீ! உலகானுபவம் தெரியாத நீ துள்ளாதே. ஒரு வேளை ஆண் குழந்தையாக இருந்தாலும் நீ சொல்கிறபடி ஒரு சிறிது யோசிக்கலாம்; பெண்குழந்தையின் வாழ்வை நீ பாழாக்காதே. அவளுடைய வாழ்வை உயர்ந்த லக்ஷ்யத்துடன் உயர்ந்த முறையில் பகவத்பக்தி, சிறந்த ஞானம் முதலியவைகளுடன் பழக்கு" என்று உபதேசம் தன்போக்காக மெஷின்போல் செய்துகொண்டிருப்பதை வள்ளி லக்ஷ்யமே செய்யவில்லை.

"பாட்டி! படிப்பு வாஸனையறியாதமுட்டாளாக வைத்திருந்தால் சிறந்த ஞானமும்பக்தியும் எப்படி உண்டாகும் என்கிறேன்? அதற்காகத்தானே பட்டினவாஸத்திற்குப் போக ஆசைப்படுகிறேன். இந்த அத்வானக் காட்டுவாஸம் எனக்குப் பிடிக்கவே இல்லை"...என்று இவள் இரையும்போது, வீராயி இரண்டு மூன்று சிறுமிகளுடன் கைகோத்து விளையாடியவாறு ஓடிவருவதைப் பார்த்த வள்ளி அபாரமான கோபங்கொண்டு குழந்தையைக்

கடிந்துகொண்டு திட்டியவாறு "இந்த அல்பச் சனிகளுடன் சேர வேண்டாம் என்றால் உனக்கு புத்தியில்லையா?...நீ இப்படித்தான் பாழாய்ப்போகப் போகிறாய்" என்று திட்டும்போது வீராயி வியப்புடன் "அம்மா! இவர்களும் என்னைப்போல் விளையாடுகிற பசங்கள் தானே! ஏன் இவர்களுடன் நான் விளையாடக்கூடாது? நேற்று கோயிலில் ஒருவர் 'எல்லோரும் ஒன்று. எல்லா மனிதர்களிடத்திலும் அன்பாயிருக்கவேணும்' என்று ஏதேதோ சொன்னாரேம்மா! நீ ஏன் இப்படிச் சொல்கிறாய்?" என்றாள்.

இதைக்கேட்ட வேலன் பெண்ணைத் தூக்கி வாரியணைத்து முத்தமிட்டு மகிழ்ந்தான். கிழவியும் அபாரமான சந்தோஷத்தையடைந்து பூரித்துப் பின்னும் வள்ளிக்கு புத்திசொல்லிவிட்டுச் சென்றாள். வள்ளிக்குமட்டும் மனது சமாதானமே ஆகவில்லை. எப்படியாவது ப்ரயத்தனம்செய்து தன் மகளை பட்டினத்திற்கு அழைத்துக்கொண்டு போய்விடவேண்டும் என்று தீவிரமான பிடிவாத எண்ணம்உண்டாகித் தீர்மானித்துவிட்டாள்.

வள்ளியின் தம்பி ஒருவன் பட்டினத்தில் ஒரு வெள்ளைக்கார துரை வீட்டில் வாசல்காக்கும் வேலையிலிருப்பதால் அவன்மூலம் தான் அங்குப்போய்விடுவதே சரி என்று முடிவுகட்டிவிட்டாள். அன்று க்ராமத்துத் தபால்காரன் வந்ததும் தன் தம்பிக்குக் கடிதம் எழுதச்செய்து ரகஸியமாய் அனுப்பிவிடவும் துணிந்து தபால்காரனை எதிர்பார்த்திருந்தாள். அவளுடைய அகக்கண்ணில் பட்டினத்தின் தோற்றம்—இதுவரையில் காதில் கேட்டிருக்கும் காட்சி—தெரியவாரம்பித்தது.

8

வள்ளியின் ஆசைக்கோட்டை இடிந்து பொடியாகிவிட்டது. "பட்டினவாசத்தில் நான் படும்துன்பம் போதும். இதை எப்படியாவது விட்டுத்தள்ளிவிட்டு நாட்டுப்புறத்தை நோக்கி வந்துவிடலாம் என்று நானே யோசிக்கையில், நீ விலையிலா மாணிக்கம் போன்ற குழந்தையுடன் இங்கு வரவேண்டாம்" என்று தம்பி எழுதிவிட்டதால் அவளுடைய ஆத்திரம் அதிகரித்தது. "தம்பியும் ஆச்சு, அண்ணனும் ஆச்சு; நாம் ஏன் தனியாகவே போய் நம் எண்ணத்தை நிறைவேற்றிக்கொண்டால் என்ன?" என்ற அதீத நினைப்புக்கூட உண்டாகிவிட்டது.

வீராயியை நோக்கி, "கண்ணு! நாம் பட்டினத்துக்குப் போகலாமா! அங்கு பள்ளிக்கூடம் இருக்கு, பாட்டு சொல்லிக் கொடுப்பார்கள். ஊர் பெரியதாக இருக்கும். மோட்டார்கார் இருக்கும். இன்னும் எத்தனையோ வேடிக்கைகள் இருக்கு. நாம் போய்விடலாம் வருகிறாயா?"...என்றாள்.

வீரா:—அம்மா! அங்குப்போனால் நாம் யார் வீட்டிலிருப்பது? நமக்கு இடம் ஏது? பணம் ஏது? அப்பாவுக்கு வேலை ஏது?......

வள்:—அப்பா வரப்போவதில்லையம்மா: உனக்காக நான் மட்டும் வருகிறேன். அங்கு போய்எப்படியோபார்த்துக்கொள்வது.

வீரா:—ஐயையோ! அப்பா வராமல் நான் வரமாட்டேன். அப்பாவுடன் தான் நான் இருப்பேன்...என்று சொல்லிக்கொண்டே ஓடிவிட்டாள். எத்தனை அன்பும் செல்லமும் இருந்தபோதிலும் வள்ளிக்கு வீராயியின்மீது கோபமே உண்டாகியது. "சனியன் பிடித்த பெண்ணுக்கு மூளை இருக்கிறதா? அதன் க்ஷேமத்திற்கும் நன்மைக்கும் சொல்லும்போதும் தெரியாமல் அசட்டுத்தனமாக ஓடுகின்றதே!...உம்...அதற்குமட்டும் எங்கிருந்து புத்தி வந்துவிடும். அப்பன், அத்தை முதலிய மூடங்களைப்போலத்தானே அதுவுமிருக்கும். இந்த அறிவுகெட்ட பெண்ணுக்கு எப்படியோ கொள்ளையழகைக் கொண்டு கொட்டிவிட்டான். அழகிருந்து என்ன லாபம்? என் பக்கம் பரிந்து பேசுகிறவர்கள் யாருமில்லை. ஏதோ வேதாந்தம் பேசுகிறார்கள் வேதாந்தம்!" என்று முணுமுணுத்தவாறு தாம் தூம் என்று குதித்தாள்.

மாட்டை ஓட்டிக்கொண்டு தன்சகாக்களுடன் உல்லாஸமாய்ச் சென்று ஒரு மரத்தடியில் தான் உட்கார்ந்துகொண்டு மாடுகளை மேயவிட்டுப் பின் தன் சகாக்களுடன் கதை சொல்லவும் பாடவும் ஆரம்பித்துவிட்டாள். அந்தச் சிறிய குக்கிராமத்திற்கு சுமார் ஒரு மைல் தூரத்திற்கு அப்பால்உள்ள காட்டில் மாடுகளை நிர்ப்பயமாய் ஓட்டிக்கொண்டுபோய் வெகு குதூகலத்துடன் கும்மாளமடிக்கும் இவர்களுக்கு இதேபோன்று இன்னும் சில குக்ராமங்களிலுள்ள மாடுகளையும் அவர்கள் ஓட்டிக்கொண்டு வருவதில் மிகவும் கொண்டாட்டத்துடன் எல்லோரும் ஒன்றுகூடி மகிழ்வதிலுள்ள ஆனந்தம் சாப்பாட்டில்கூட உண்டாகவில்லை.

இச்சிறுமிகள் சிறுவர்களுடன் பெரிய ஆட்களும் சிலர் இல்லாமலில்லை. அவர்களும் சிலசமயம் இந்தக் கூட்டத்துடன் கலந்துகொண்டு நாடகங்கள் நடிக்க ஆரம்பித்துவிடுவார்கள். அன்றைய தினம் வள்ளி கல்யாணம் நடித்து விளையாடுவதென்று மாட்டுக்காரர்களில் பெரியவன் திட்டம் வகுத்தான். வீராயியை வள்ளியாக நடிக்கச்செய்து அவர்களில் ஒருவனை வேலனாகவைத்து விளையாடுகையில் சுப்ரமண்யன் கிழவன் வேஷத்தில் வந்து வள்ளியைக் கல்யாணம் செய்துகொள்ளும்படிக் கேட்கிறார். வள்ளி ஏளனம் செய்து மாட்டேன் என்று மறுக்கிறாள். சுப்ரமண்யக்கிழவன் தன் சகோதரனாகிய விநாயகக்கடவுளைக் கூப்பிட்டு யானையாகவந்து வள்ளியை பயமுறுத்தச் சொல்கிறான்.

அதே சமயம், இவர்களிருக்கும் காட்டுக்கு மிகவும் அருகாமையில் கணீர் கணீர் என்கிற மணியோசை கேட்கிறது. ஏதோ தம்பட்டம் அடிக்கிற ஓசையும் கேட்கிறது. இவைகளைக் கேட்டு இந்த கோஷ்டியார் வெகு வியப்படைந்து "இதென்ன வேடிக்கை? காட்டில் இந்தமாதிரி ஓசை கேட்கிறதே!" என்று நாலுபக்கமும் பார்த்தார்கள்.

"என்ன ஆச்சரியம்! சுப்ரமண்யக்கடவுள் வேண்டியதற்கு இரங்கி விநாயகக்கடவுள் அதோ வந்துவிட்டாரே......ஐயோ!...... யானை!...யானை!...ஜிலும்யானை வருகிறது. ஐயையோ! வேகமாக வருகிறதே...ஐயையோ! சுப்ரமண்யக் கடவுளே!...யானையைப் போகச்செல்லு...ஐயோ! பயமாக இருக்கிறதே!" என்று மூலைக் கொருவராகக் கத்தியும் சிலர் நடுநடுங்கிப்போய் ப்ரமை பிடித்துத் தலைதெறிக்க ஓடவும் தொடங்கினார்கள்

சுப்ரமண்யவேஷம் போட்ட மனிதன் உண்மையில் தன் ப்ரார்த்தனைக்கிரங்கி விநாயகர் சுயவடிவத்தில் வந்துவிட்டதாகவே எண்ணி தேகம் பதறி விலவிலத்துப்போய் "அண்ணா! நீ போயிடு. நாங்கள் சும்மா வேளையாட்டுக்காகத்தான் ஒன்னே கூப்பிட்டோம். நீ வராதே! பயமாயிருக்கு, ஓடிப்போயிடு, அண்ணாத்தே! போயிடு......ஒன்னே கும்பிட்றேன்!" என்று கத்தியவாறு தலை தெறிக்க ஓடினான்.

அங்குள்ள மாடுகளும் கன்றுகளும் இந்த யானையின் உருவத்தை தூரவிருந்து பார்த்ததும் நாலுகால் பாய்ச்சலில் ஓடவாரம்பித்தன. இத்தனை அமளிக்குள் யானையும் அதைச் சார்ந்த ஒரு பெருங்கூட்டமாக மனிதர்களும் அருகில் வந்துவிட்டார்கள். என்ன ஆச்சரியம்! வீராயிமட்டும் சற்றும் அசையவோ, பயப்படவோ இல்லாமல் "ஏன் இப்படி பயந்து ஓடுகிறீர்கள்? ஒன்றும் பயப்பட வேண்டாம். விநாயகக் கடவுள் நம் நாடகத்திற்காக வரும்போது பயந்துபோகலாமோ....விநாயகக்கடவுளே! வாருங்கள் வாருங்கள்! எனக்குப் பயமில்லை.நான் இந்த சுப்ரமண்யனை மணக்கமாட்டேன். நீ என்னை என்ன செய்யமுடியும்?உன்னிடம் எனக்குப் பயமில்லை" என்று வெகு வீரத்துடன் நிற்கும் ஒரு ராஜகுமாரியைப்போல், யுத்தகளத்தில் நிற்கும் ரணவீரபத்ர சண்டியைப்போல் நின்றாள்.

இவளுடன் கூடவந்தவர்கள், "ஐயோ! வீராயி! வீராயி! யானை கிட்ட வந்துவிட்டது......ஓடிவா...ஓடிவா...யானை மெரிச்சுடும்" என்று கத்துகிறார்கள். வீராயியோ சற்றும் பயமில்லாமல் துணிச்சலுடன் நிற்பதைக்கண்டு நடுங்கிப்போய், பெரியவர்களாக இருப்பவர்கள் ஓட்டமாக ஓடிவந்து அவளைத்தூக்கிக் கொண்டு போய்விடுவதற்கு நாலடி எடுத்துவைத்து வருவதற்குள் யானை வெகுசமீபத்தில் வந்தது கண்டு மிரண்டுபோய்ப் பின்னுக்கு ஓடவாரம்பித்தார்கள்.

வெகு ஒய்யாரமாகவந்த யானை க்ஷணநேரத்தில் வீராயியின் கழுத்தில், தன் துதிக்கையில் வைத்திருந்த மாலையைப்போட்டுத் தன் துதிக்கையினால் ஒரே தாவுதாவி வாரி எடுத்துவிட்டதைப் பார்த்த சிலர் மூர்ச்சைபோட்டுவிட்டார்கள். சிலர் "ஐயயோ! வீராயியை யானை கொண்ணுப்புட்டுது! மெரிச்சு கொண்ணுப் புட்டுது!...வீராயி செத்துட்டா!" என்று தாறுமாறுகக் கூவி ஒரே ஓட்டமாக வீராயின் வீட்டைநோக்கி ஓடினார்கள்.

வீராயியைத் துதிக்கையினால் தூக்கும்போதுதான் வீராயிக்கு சற்றுத் திடுக்கிட்டது. எனினும் "நான் உனக்குப் பயப்பட மாட்டேன். நான் இந்த சுப்ரமண்யனையும் மணக்கமாட்டேன்" என்றுகத்தினாள். யானை அவளைத் தூக்கும்போதே யானையுடன் வந்தவர்கள் யானைப்பாகன் முதலியவர்கள் பேராரவாரத்துடன் "கஜபுரி மகாராணிக்கு ஜே! கஜபுரி மகாராணிக்கு ஜே!" என்று தம்பட்டம் தாரை முதலியவைகளை வெகுவெகு உத்ஸாகத்துடன் அண்டத்தை அளாவி ஒலிக்கும்படித் தட்டினார்கள். அதேக்ஷணம் யானை வீராயியைத் தூக்கி யானைப்பாகனிடம் அலாக்காகக் கொடுத்துத் தன் முன்னங்காலை மடித்துத் தன் வணக்கத்தைத் தெரிவித்துத் துதிக்கையை உயரத்தூக்கித் தன் குரல் கொண்ட மட்டும் பெரியதாகக் கர்ஜனைசெய்தது. யானைப்பாகன் அன்பும் ஆர்வமும் ததும்ப வீராயியைச் சற்று தெளியச்செய்து அவளுடைய தலையைக் கோதி "மகாராணீ! பயப்படவேண்டாம். உங்கள் மனிதர்கள் யார்? எங்கிருக்கிறார்கள், சொல்லுங்கள்? இப்போதே உங்களை கஜேந்திரபுரிக்கு அழைத்துச் செல்ல வேண்டும்" என்றான்.

வீராயிக்கு ஒன்றுமே புரியவில்லை. நாற்புறமும் சுற்றிப் பார்த்து ப்ரமித்துப்போய்த் தன்னுடன் மாடுமேய்த்து விளையாடிய சிறுமிகளையே இவள் நோக்கி "மாரிமுத்து!...காளியாத்தா!.... சின்னாயி!...வள்ளியம்மா!...குப்பாத்தா!"..என்றுபெயரைச்சொல்லி அழைத்து நாற்புறமும் பார்த்தாள். இவள் அழைத்தவர்கள் ஒருவருமே அங்கில்லாததால் வெகுமிடுக்காக யானைமீதிருந்து இறங்கப் பார்த்தாள்.

உடனே பாகன் தடுப்பதை உணர்ந்து கம்பீரமாகத் திரும்பிப் பார்த்து "ஐயா! என் தோழிப்பெண்களைக் காணவில்லை. நான் அவர்களைத் தேடி வீட்டுக்கு அழைத்துப்போகவேண்டும். என் பெற்றோர்கள் அரசம்பட்டி க்ராமத்தில் இருக்கிறார்கள். அவர்கள் என்னைத் தேடுவார்கள். நான் வருகிறேன்" என்று முடிப்பதற்குள் பின்னாலேயே பல்லக்கில்வரும் திவான் சமீபத்தில் வந்துவிட்டார். இந்த ஜே கோஷத்தையும் ஆரவாரத்தையும் பார்த்தவுடனே "சரி, அரசியோ, அரசனோ நம் கஜேந்திரபுரிக்குக் கிடைத்துவிட்டார்" என்று திட்டமாகத் தெரிந்துகொண்டு பூரிப்புடன் வந்து பார்த்தார். சொர்ணப் பாவையைப்போல் வெகுவெகு அத்புத வடிவத்துடன் உட்கார்ந்திருக்கும் வீராயியைப் பார்த்து திவான் பூரித்து "பலே மகாராணீ! நமஸ்காரம் கஜேந்த்ரா! நீ உன் கடமையை வெகு நன்றாகச்செய்துவிட்டாய். சபாஷ் கஜேந்த்ரா! யானைப்பாகா! மகாராணியைக் கீழே இறக்கி முதலில் அபிஷேகமும் அலங்காரமும் செய்து பிறகு நாம் ஊருக்குச்செல்லவேண்டும். இறக்கிவிடுங்கள்" என்று கூறித் தானே வீராயியை யானைமீதிருந்து இறக்கிக் கீழே நிறுத்தினார்.

18358

வீராயி தன் சகாக்களைக் காணாத ஒரே எண்ணத்தால் தேடும் விழிகளுடன் நாற்புறமும் பார்த்து, பின் மாட்டுக்காரப் பயல்கள் சிலர் தூர நிற்பதைக் கண்டு அவர்களைக் கூப்பிட்டு "எங்கே என் சினேகிதர்கள் ?" என்று கம்பீரமாய்க் கேட்கும் அழகைப்பார்த்து திவான் பூரித்து "சரியான மகாராணி! என்ன கம்பீரம் பார்வையிலும் த்வனியிலும் குலுங்குகிறது!" என்று தனக்குள் எண்ணினர்.

இதற்குள் கூடவந்திருந்த சேடிமார்கள் கங்காஜலத்தினால் அதே இடத்தில் வீராயியை ஸ்நானம்செய்து ராஜஉடை யணிவித்து உயர்ந்த நவரத்ன ஆபரணங்களினால் அலங்கரித்து தேவமாதோ, வனமோகினியோ என்று ஐயுறும்படிக்கு அலங்காரத்தைச் செய்தார்கள். தன் அழகைப் பார்த்த வீராயிக்கு ஒன்றுமே புரியாது சந்தோஷமும் ப்ரமிப்பும்கொண்டு நிற்கிறாள். அப்போதும் அவள் விழிகள் அவள் சகாக்களையே தேடியலைந்தன.

கூட வந்துள்ள சில மாட்டுக்காரப்பிள்ளைகள் ஓடோடி வந்து, "டேய்! டேய்! வீராயியைப் பாருடா! நிஜமாகவே வள்ளியம்மனைப் போல் அத்தனை அழகா கன ஜோரா இருக்காடா! நாம்ப விளையாட்டுக்காக வள்ளிகல்யாணக் கதையைக் கூத்தாடினதிற்கு நிஜமாகவே பிள்ளையார் யானையாகவந்து என்னமோ தடல்புடல் பண்ணுதுடா! எல்லாரும் கிட்ட ஓடியாங்கடா! ஓடியாங்க, சுப்ரமண்ய வேஷக்காரன் எங்கேடா? அவனே நிஜமாகவே இந்த யானை கண்ணாலம் பண்ணி வைக்குமோ என்னமோடா! கூப்பிடுடா அவனை ...டேய் சின்ன கருப்பா!......சின்ன கருப்பா!......வீராயியைப் பாருடா! நிஜம் வள்ளியாப்பூட்டா! நீயும் வாடா! சுப்ரமண்யனுப் பூடுவே! கண்ணாலத்தையும் நடத்திடலாம்...என்ன ஆச்சரியம்!... என்ன வேடிக்கை?" என்று தலாதலா கூவியவாறு ஓடிவந்து வள்ளியின் தேஜோமயமான அழகில் மயங்கியும் இங்குள்ள சம்பவத்தைக்கண்டு ப்ரமித்தும் நின்றுவிட்டார்கள். சற்றுமுன் பயந்து ஓடியவர்கள் எல்லாரும் தைரியமாக வந்து நின்றார்கள். எங்கும் ஒரே ப்ரமிப்பு குடிகொண்டது.

தாரண நந்தவனம் (700 பக்கங்கள் 100 படங்களுடன்)
100 சகோதரிகள் சிருஷ்டித்த நறுமலர் மாலை ரூ. 9.

வை. மு. ஸ்ரீ. நவீனங்கள்

1. உதய சூரியன் 1-4. 3. அவசரமூர்த்தியின் அபூர்வ டயரி 1-8.
2. மதமா, மனமா? 1-4. 4. ராணி சீலாவதி 1-0.

ஸ்ரீவிஷ்ணு ஸஹஸ்ரநாமம்

ப்ர. ப. அண்ணங்கராசாரியர் உரையுடன் பாராயணபதிப்பு ரூ. 1.